# முன்னேற்ற அறிக்கை

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

## 2022 சனவரி - செப்டம்பர்


நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

**இல 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை**

**கொழும்பு 10**

**இணையத்தளம்:** www.moj.gov.lk

# கௌரவ அமைச்சர் அவர்களின் செய்தி



நீதி, மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கை தொடர்பில் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் நீதி ஆதிபத்தியத்தை உறுதிப்படுத்தி நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மையை முறையாகப் பேணுவது அத்தியவாசியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்ற அதேவேளை, கடந்த காலங்களில் நாட்டில் உக்கிரமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிகளின் நிமித்தம் பல்வேறு காரணிகளினால் வீழ்ச்சியடைந்துள்ள அனைத்து அரச பொறிமுறைகளையும் கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையின் கீழ் மீளக் கட்டியமைக்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய ஒரு செயதியாகும். தற்போதைய நிலையில் நீதித் துறையானது மீண்டும் சர்வதேச பிரஜைகளைப் போன்றே இந்நாட்டு பிரஜைகளினதும் நம்பிக்கையை வெற்றிகொள்கின்ற ஒரு நிறுவனமாக மாறி வருகின்றது. காலாவதியான சட்டத்தினை இற்றைப்படுத்துவதன் மூலம் 150 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த சட்டத்தினைத் தற்போதைய உலகுக்கு பொருந்தும் வகையில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, நாட்டில் இடம்பெறுகின்ற ஊழல்கள், மோசடிகளைத் தடுத்து ஜனநாயகத்தை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்ட 21 ஆவது அரசியலமைப்புச் சீர்த்திருத்தமானது முன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமாக இருந்தமை ஜனநாயகத்தை மதிக்கின்ற அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற ஒரு வெற்றி ஆகும்.

அரச பொறிமுறைக்குள் ஊழல், மோசடிகள் இடம்பெறுவதினைத் தடுப்பதனை இலக்காகக் கொண்டு புதிய ஊழல்களுக்கெதிரான சட்டம் ஒன்றினைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை இந்நாட்டுக்குப் பொருத்தமான வகையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றினைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் என்ற வகையில பாராளுமன்றத்திலே விளம்பியிருக்கின்றேன். 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தச் செயற்பாடுகள் காரணமாக துன்பங்களை அனுபவிக்கின்ற வடபகுதி மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தற்போதைய நிலையில் முன்னுரிமை வழங்கப்பட்டு கவனம் செலுத்தப்படுவதோடு இதன் பொருட்டு முழு வட பகுதியையும் உள்ளடக்கும் வகையில் நடமாடும் சேவைகளை மேற்கொள்வதன் மூலம் வடபகுதி வாழ் மக்களின் குடியுரிமையைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான பிரச்சனைகள், பிறப்புச் சான்றிதழ், திருமணம் மற்றும் மரணம் என்பவற்றைப் பதிவு செய்வது தொடர்பான பிரச்சனைகள், தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வது தொடர்பான பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவற்றுள் திருத்தங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றுடன் காணி மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சனைகளின் பொருட்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுத்தத்தின் பின்னர் வடபகுதி மக்களினைப் போன்றே தென்பகுதி மக்களினதும் உடைந்துபோன மனங்களினை ஒன்றிணைப்பதன் மூலம் மீண்டும் இவ்வாறானதொரு கொடூரமான சூழல் ஏற்படாதிருக்கும் பொருட்டு செயற்படுவது அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும். இதன் பொருட்டு நீதி, மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் மூலம் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை நாட்டு மக்களுக்கு இடையில் ஒருமைப்பாடு,

சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றினை விருத்தி செய்வதற்கு முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் கிராமிய மட்டத்தில் வேலைத் திட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். யுத்தத்தின் காரணமாக காணமற்போன ஆட்களின் பொருட்டு நீதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு அதுதொடர்பாகக் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவது, இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் காணாமற்போனதை உறுதிப்படுத்தி சான்றிதழ்கள் வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் மூலம் யுத்த நிலைமைகள் காரணமாக சேதம் அடைந்த நபர்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் இழப்பீட்டினை வழங்குவது தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதைய நிலைமையில் எமது நாடு முகக் கொடுக்கின்ற பாரதூரமான பிரச்சனையாக போதைப் பொருள் பாவனை அமைந்துள்ளதனால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு போதைப் பொருட்களைக் கொண்டு வருதல், பரிமாறுதல், விற்பனை மற்றும் பாவனை என்பவற்றினை ஒழிப்பதற்கான புதிய அதிரடிப்படை ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய ஒரு சட்டத்தினைக் கொண்டுவருதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக சிறைப்படுத்தப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதுடன் அதன்காரணமாக சிறைச் சாலைகளில் அதிக நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளதனால் போதைப் பொருள் தொடர்பில தவறிழைப்பவர்களைப் புனருத்தாபன நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதனை மேலதிகமான ஒரு வேலைத் திட்டமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத் தொகுதிக்குள் உள்வாங்கப்படுகின்ற பிரச்சனைகளைக் குறைத்து நீதிமன்ற நடவடிக்கைகளின்றி பொதுமக்களுக்கு சட்டம் தொடர்பான தீர்வுகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் இணக்கசபை முறைமைகளினை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளை இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் அமைச்சின் கீழ் இயங்குகின்ற அனைத்து நிறுவனங்களினதும் வினைத்திறனை அதிகரிப்பதற்கு தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரலாற்றிலேயே இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றை நிலையிலும் அமைச்சின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு, மக்கள் சேவையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் உட்பட ஏனைய நிறுவனத் தலைவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற சேவையை மிகவும் நன்றியோடு நினைவுகூர்கின்ற அதேவேளை, நீதி நிர்வாகப் பொறுப்புகளை மிகவும் நம்பிக்கையுடனும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ள அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி கூறுவதில் பெருமிதமடைகின்றேன்.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

# கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி



ஒரு நாட்டின் நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் அமைப்பு முறையானது அந்நாட்டின் சமூக நிலைமையை அளவிடக்கூடிய ஓர் அளவுகோலாகக் காணப்படுகின்றது. நெல்சன் மண்டேலாவின் கூற்றின்படி "ஓர் தேசமானது அந்நாட்டின் மேல் தட்டு மக்கள் கருத்தில் கொள்ளப்படும் முறையில் அல்லாது அந்நாட்டின் கீழ் தட்டு மக்கள் கருத்தில் கொள்ளப்படும் முறையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்." அதன்படி, நற்குணமுள்ள, ஒழுக்கமிக்க, நேர்மைமிக்க, நியாயமான ஒரு இயல்பான சமூகத்தைக் கட்டியெழுப்பவதற்கு நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் அமைப்பானது முறையாக இயங்குதல் வேண்டும்.

இதனடிப்படையில் நீதி மற்றும் இறையாண்மை என்பவற்றைப் பாதுகாக்கும் வகையில் காலாவதியான நீதிமன்ற நடைமுறைகளை மறுசீரமைப்புச் செய்யும் வகையிலும் நீதித்துறையில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தடுக்கும் வகையிலும் புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நீதிமன்ற முறைமை மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை மேம்படுத்தும் வகையில் தற்போது பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே புனருத்தாபன நடவடிக்கைகளை மிகவும் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும், அதன் மூலம் சிறைக் கைதிகளின் தண்டனைக் காலம் முடிவடைந்து மீண்டும் சமூகத்திற்குள் நுழையும்போது மிகவும் சிறப்பான நற்குணங்கள் நிறையப்பெற்ற, சமூகத்திற்கு சேவை செய்யக்கூடிய ஒரு நபராக மாற்றியமைப்பது இவ்வமைச்சின் பால் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மிகவும் முக்கியமானதொரு பொறுப்பாகக் காணப்படுகின்றது. இதன்பொருட்டு சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம், புனருத்தாபன ஆணையாளர் நாயகப் பணிமனை ஆகியவற்றின் மூலம் பல்வேறு வேலைத் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலையில் அரச திறைசேரியினால் சுமக்கப்படுகின்ற செலவுகளைக் குறைப்பதற்கு சிறைச்சாலை வேலைப் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறைக் கைதிகளுக்கு தொழில் ரீதியான அறிவினை முறையாக வழங்கி, சிறைச்சாலைகளிலிருந்து வெளியேறும் சிறைக் கைதிகளை தொழில் ரீதியான அறிவு மிக்கவர்களாக மாற்றி, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கும் அடிப்படை சமூக நோக்கத்திற்குப் புறம்பாக, வேளாண்மையை விரிவுபடுத்துவதன் மூலம் சிறைக் கைதிகளின் உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், கைத்தொழில் துறையினை விரிவுபடுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தின் மூலம் ஏனைய முக்கிய செலவுகளை ஈடுசெய்துகொள்ளவும், சிறைச்சாலை உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுக் காவல் (House Arrest) கொத்தணிச் சிறைச்சாலைகள் போன்ற முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிறைச்சாலை நெருக்கடிகளுக்கானத் தீர்விணைப் பெற்றுக்கொள்வதோடு, செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருப்பதனால் தற்போதைய நிலையில் அத்தகைய முறைமைகளை செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

அவ்வாறே நீண்ட நாட்களாக இழுபறியாகக் காணப்படுகின்ற வழக்கு விசாரணைகளை விரைவில் முடித்துவைத்தல், சிறைச்சாலைகளுக்கு உள்ளே இருந்து மேற்கொள்ளப்படும்

குற்றுச் செயல்களைக் குறைத்தல், சிறைச்சாலைகளின் பாதுகாப்பின் பொருட்டு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் என்பன சிறைச்சாலை நிர்வாகத்தை முறையாக மேற்கொள்ள வசதியாக இருப்பதனால் காலாவதியான தொழில்நுட்ப உத்திகள் மற்றும் முறைமைகளை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே சிறைக் கைதிகளின் நெருக்கடிகளைத் குறைக்கும் நோக்கில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு பொது மன்னிப்பினை வழங்கும் மீளாய்வு முறைமையொன்றினூடாக விசேட மன்னிப்பினை வழங்கும் பொறிமுறையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்குச் சமாந்தரமாக ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாபன முறைமையானது சிறையிலடைக்கப்பட்ட ஒருவர் மீண்டும் சிறையிலடைக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும், இளைய தலைமுறையினர் போதைப் பொருள் பாவனை உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் காரணமாக சிறையிலடைக்கப்படுவதை தடுக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டிருக்கும் விசேட வேலைத்திட்டமாகும். நீதிமன்றங்களின் மூலம் புனருத்தாபன ஆணையாளர் நாயகம் பணிமனைக்கு அனுப்பப்படும் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களுக்கு உள, உடல் ரீதியாக முறையான புனருத்தாபனம் வழங்கப்பட்டதன் பின்னர் காலத்திற்கு ஏற்றவாறு மிகவும் பொருத்தமான தொழில் பயிற்சி ஒன்றினை வழங்குவதன் மூலம் பொருளாதார ரீதியில் உறுதிப்பாடுடைய, சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய ஒரு நபராக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறே சிறு குற்றச் செயல்களை மேற்கொண்டோருக்கு புனர்வாழ்வளிப்பதன் பொருட்டு பெரும் சேவையினை மேற்கொள்கின்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினால் சிறு குற்றச் செயல்களை மேற்கொண்டோரை நல்வழிகாட்டல் செயற்பாட்டிற்கு உட்படுத்துவதன் மூலம் அவர்களின் குடும்பம் மற்றும் அவர்கள் வாழும் சூழல் என்பவற்றைப் பாதுகாப்பதன் பொருட்டு மாபெரும் சேவையினை மேற்கொள்வதால் இம்முறைமையினை மக்கள் மத்தியில் மேலும் பழக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் அத்தகைய பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளினால் பாரியதொரு முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் அமைச்சு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்கள் என்பவற்றை வழிநடத்தும் கௌரவ அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தற்போது நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் அதேவேளை திணைக்களங்களில் காணப்படும் நிதி மற்றும் மனித வளங்களின் மூலம் உச்சப் பயனைப் பெறும் வகையில் அவற்றை உற்பத்தித்திறன் மிக்கதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தி, அவற்றை முறையாக மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு செய்வதில் எனக்கு எப்போதும் உதவியாக இருக்கின்ற பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலர் குழாத்தினருக்கும், நிறுவனங்களின் தலைவர் உட்பட ஏனைய அலுவலர் குழாத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டத்தரணி, அநுராத ஜயரத்ன

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

# அமைச்சின் செயலாளரின் செய்தி



உலக மீட்சி மற்றும் சமூகத் தேவைப்பாடுகளுக்கு ஏற்றவாறு பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் உரிமைகளை மிகவும் சிறந்த முறையில் பாதுகாக்கும் வகையில் சட்ட மறுசீரமைப்பு மற்றும் நீதி நிர்வாகம் என்பவற்றை வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு சட்டத்துறைக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல் இவ்வமைச்சின் பால் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிரதான ஒரு பொறுப்பாகக் காணப்படுகின்றது.

நீண்ட நாட்களாக நீதிமன்றங்கள் வழக்குகளால் நிறைந்து காணப்படுகின்ற அதேவேளை, ஒரு வழக்கினை நிறைவு செய்வதற்கும் நீண்ட நாட்கள் தேவைப்படுகின்றன. இவை நாட்டின் அபிவிருத்தியில் எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்தும். மேற்படி நிலையினை தவிர்த்து சட்டத்துறையை வினைத்திறன்மிக்கதாக மாற்றும் வகையில் விருத்தி செய்யப்பட்டிருக்கும் திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய பின்வரும் உபாயங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

- கால ஓட்டத்திற்கு ஏற்ற வகையிலும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற வகையிலுமான சட்ட மறுசீரமைப்பு
- பிரச்சினைகளைத் தீரக்கும் வகையில் மாற்று முறைமைகளை வலுப்படுத்துதல்
- தற்போது காணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் நாட்டு மக்களுக்கு பொருந்தும் வகையிலான தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு தொகுதி ஒன்றினை உருவாக்குதல்
- சட்டத்துறையில் முடியுமான வரை தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்
- நீதி நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவும் இவ்வமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களை வினைத்திறன் மிக்கதாக மாற்றி அவற்றை வலுப்படுத்துதல்

எவ்வாறாயினும் நாட்டில் மேற்கிளம்பிய தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை என்பவற்றுக்கு ஏற்ற வகையில் மேற்படி உபாயங்களை திட்டமிட்டவாறு செயற்படுத்துவதை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. தேசிய நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கான செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டன. நீதித்துறையை விருத்தி செய்வதற்கு முடியுமான வரை வெளிநாட்டு உதவிகள் வழங்குகின்ற நிறுவனங்களின் உதவியினைப் பெற்றக்கொள்வதற்கு எந்நேரமும் முயற்சித்த வண்ணம் இருக்கின்றேன். அவ்வாறே இவ்வமைச்சின் விடயப் பரப்புக்குள் அடங்குகின்ற ஏனைய நிறுவனங்களை முடியுமான வரை வினைத்திறன் மிக்கதாகவும் உற்பத்தித்திறன் மிக்கதாகவும் மாற்றியமைப்பதற்கும் ஏற்ற வகையில் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்குவதோடு அவற்றை மேற்பார்வை செய்த வண்ணமும் இருக்கின்றேன்.

சட்ட மறுசிரமைப்பு தொடர்பாக இவ்வருடத்தில் வரலாற்றுரீதியான வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருக்கின்றது. இவ்வருடத்திற்குள் மிகவும் முக்கியமான 12 சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பில் பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்ளக்கூடியாக இருந்தது. அதேநேரம் இன்னும் 10 சட்ட மறுசீரமைப்புக்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அவை தொடர்பான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றுள் காலவோட்டத்திற்கு அமைவாக சட்டத்தினை இற்றைப்படுத்துதல், நீதி நிர்வாகத்தை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதன் பொருட்டான நீதிமன்ற படிநிலை, அமைப்பு ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்தும் முன்கூட்டிய வழக்கு விசாரணை நீதிமன்றங்கள், சிறு உரிமைகள் தொடர்பான நீதிமன்றங்களை அறிமுகம் செய்தல், ஊழல்களை தடுப்பதற்கான சட்ட மறுசீரமைப்பு ஆகியன உள்ளடங்குகின்றன.

அவ்வாறே அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றை வலுப்படுத்துவதுடன் தொடர்புடைய நிதி ஒதுக்கீடு உள்ளடங்கலாக 22 ஆம் அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் முக்கிய ஒன்றாகும். அவ்வாறே அமைச்சரவையின் கொள்கைக்கமய தீர்மானங்களைப் பெற்றுக்கொண்ட மேலும் முக்கிய 20 சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவுற்றிருக்கின்ற அதேவேளை, அமைச்சரவையின் கொள்கைத் தீர்மானத்தின் பொருட்டு 07 சட்ட மறுசீரமைப்புக்களை முன்வைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளை வலுப்படுத்துவதன் மூலம் நீதிமன்ற முறைமைகளுக்கு பிரவேசிக்க முன்னர் அநேக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடியுமாக இருப்பதோடு அதன் மூலம் நீதிமன்றத் தொகுதிக்குள் மென்மேலும் வழக்குகள் வந்து குவிவதைத் தடுத்துக்கொள்ள முடியும். இணக்கச் சபைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் வீதம் அதிகமாகக் காணப்படுவது மகிழ்ச்சிமிக்க ஒரு செய்தியாகும். இதனை மேலும் அதிகரித்து காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான விசேட இணக்கச் சபைகளை உருவாக்கும் உத்தரவு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறே அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் விசேட இணக்கச் சபையை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலையான சொத்துக்கள் தொடர்பிலான கடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் துன்புறும் மக்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்குவதற்கு கடன் இணக்கச் சபைத் திணைக்களத்தின் கிளைகளை உருவாக்குவதன் மூலம் நடுநிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதி நிர்வாக செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்குத் துணை நிறுவனங்களின் பணிகள் மிகவும் முக்கியமானவை. வருடத்தின் இன்றைய நிலையில் சட்ட வரைபு திணைக்களத்தினால் மும்மொழிகளிலும் சட்ட வரைபுகளை மேற்கொண்ட சட்ட திருத்தங்களின் எண்ணிக்கை 196 ஆகும். நீதிமன்றங்களில் வழக்குகளை மிகவும் விரைவாக தீர்த்து வைப்பதற்கு அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் ஆய்வறிக்கைகளை மிகவும் விரைவில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வருடம் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 30,260 ஆகக் காணப்படுகின்ற அதேவேளை, அவற்றுள் 27,596 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் இவ்வருடத்தில் இதுவரைக்குமாக 7,012 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இன்றைய நிலையில் சிறைச்சாலைகளில் 24,000 இற்கும் அதிகமான சிறைக் கைதிகள் தங்கியிருப்பதோடு சிறைச்சாலைகளின் கொள்ளளவை விடவும் அதிகமாகக் காணப்படுவோரை முகாமை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொது மக்கள் நன்னடத்தை கட்டளைகளைப் பெற்றுக்கொள்வது இதற்கு ஒரு தீர்வாகக் காணப்படுகின்ற அதேவேளை, இவ்வருடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 5,321 ஆகும்.

அனைவருக்கும் சட்டப் பிரவேசம் தொடர்பான வசதிகளை வழங்குவது சட்ட ஆதிக்கம் தொடர்பில் மிகவும் முக்கியமானது. இதன்பொருட்டு இலங்கை சட்ட வழங்கல்கள் ஆணைக்குழு விசேட செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அதேவேளை, இவ்வருடம் இது வரைக்குமாக 136,224 பிரசைகளுக்கு நாடு பூராகவும் நிறுவப்பட்டிருக்கும் சட்ட வழங்கல்கள் மத்திய நிலையங்களின் மூலம் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது காணப்படுகின்ற சவால்மிக்க காலப்பகுதியிலும் நீதி அமைச்சு மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய நிறுவனங்களின் மூலம் இவ்வாறான வளர்ச்சியை அடைந்திருப்பது மகிழ்ச்சிமிக்க ஒரு செய்தியாகும். இக்கடினமான கால கட்டத்திலும் நீதிமன்ற நடவடிக்கைகளை தங்குதடையின்றி நடாத்திச் செல்வதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் அவர்கள் உள்ளிட்ட அமைச்சரவை எங்களுக்கு வழங்குகின்ற ஆதரவிற்கு நன்றிகூற நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவ்வாறே அமைச்சின் சகல நடவடிக்கைகளின் பொருட்டும் எமது கௌரவ அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ அவர்கள் வழங்குகின்ற தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை இச்சந்தர்ப்பத்தில் பெரிதும் நினைவுகூர்கின்றேன். அவ்வாறே அமைச்சின் செயற்பாடுகளின் பொருட்டு எமது இராஜாங்க அமைச்சர் கௌரவ அநுராத ஜயரத்ன அவர்கள் வழங்குகின்ற ஆதரவையும் பெரிதும் மெச்சுகின்றேன். அவ்வாறே நீதி அமைச்சின் சகல உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களினதும் நிறுவனத் தலைவர்கள் உள்ளடங்கலாக அனைத்து ஊழியர் குழாத்தினர் உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வசந்தா பெரேரா**
செயலாளர்
நீதி, சிறைச்சாலை அலவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

### நோக்கு

- நீதி நிருவாகத்தின் வினைத்திறமையான நடைமுறை;
- புவியியல் ரீதியான முன்னேற்றங்களுக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு சமுதாய தேவைகளுக்கேற்ப சட்டத்தை மறுசீரமைத்தல்.

### செயற்பணிகள்

- வினைத்திறமையும் அர்த்தமுள்ளதுமான நீதி நிருவாகத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்;
- பிரசைகளின் உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக சட்டத்தை மறுசீரமைத்தல்.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | அமைச்சினது பிரிவுகளின் பணிகள் | 03 |
| 3. | நீதி அமைச்சின் முன்னேற்றம் | |
| 3.1 | சட்டப்பிரிவு | 05 |
| 3.2 | தாபனப் பிரிவு | 17 |
| 3.3 | திட்டமிடல் பிரிவு | 20 |
| 3.4 | அபிவிருத்தி பிரிவு | 29 |
| 3.5 | பொறியியல் பிரிவு | 37 |
| 3.6 | மறுசீரமைப்பு பிரிவு | 47 |
| 3.7 | சிறைச்சாலை அலுவல்கள் பிரிவு | 58 |
| 3.8 | தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு | 62 |
| 3.9 | நிதிப் பிரிவு | 68 |
| 3.10 | உள்ளக கணக்காய்வுப் பிரிவு திட்டமிடற் பிரிவு | 72 |
| 4 | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசயலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 4.1 | சட்டமா அதிபர் திணைக்களம் | 73 |
| 4.2 | சட்டவரைஞர் திணைக்களம் | 76 |
| 4.3 | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 80 |
| 4.4 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 82 |
| 4.5 | கடன் இணக்க சபை திணைக்களம் | 84 |
| 4.6 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 88 |
| 4.7 | சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் | 93 |
| 4.8 | புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம் | 95 |
| 4.9 | மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு | 99 |
| 4.10 | தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம் | 103 |
| 4.11 | நீதித்துறை அல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம் | 105 |
| 5 | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசயலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள பொதுத்தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம் | |
| 5.1 | சட்ட உதவி ஆணைக்குழு | 108 |
| 5.2 | மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைச்சபை | 112 |
| 5.3 | இலங்கை நீதிபதிகள் நிறுவனம் | 114 |
| 5.4 | குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு அதிகார சபை | 116 |
| 5.5 | தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் | 121 |
| 5.6 | காணாமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம் | 127 |
| 5.7 | இழப்பீட்டுக்கான அலுவலகம் | 129 |
| 6 | மீயுயர் நீதிமன்றங்கள | |
| 6.1 | உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 133 |
| 6.2 | மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் | 135 |
| 7 | தொடர்புடைய நிறுவனங்கள் | |
| 7.1 | இலங்கை சட்டக்கல்லூரி | 138 |

# 01 அறிமுகம்

நீதியமைச்சிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணியானது காலத்துக்கு காலம் அமைச்சின் விடயங்கள் உரித்தாக்கல் திருத்தத்துடன் மாறுபடுவதுடன் பொதுவாக பின்வரும் பணிகள் இவ்வமைச்சிடம் உரித்தாக்கப்பட்டுள்ளன.

- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான அலுவல்கள்.
- சமூகத்தின் தேவையையும் சர்வதேசத்தின் போக்கினையும் கருத்திற் கெண்டு சட்ட முறைமையில் மறுசீரமைப்பை செயற்படுத்தல்.
- நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தடுத்தல் உட்பட ஒட்டுமொத்த நிருவாகம் தொடர்பாக எல்லா விடயங்களையும் முறையாகவும் செயற்திறனுடனும் செயற்படுத்தல்.
- அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்குகளைத் தொடுத்தலும் குடியியல் சட்ட நடவடிக்கைகளும்.
- அரசாங்கத்திற்கும் எல்லா அரச திணைக்களங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட வரைவு
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- ஒட்டுமொத்த காதி நீதிமன்ற முறைமையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- தொழில் நியாயசபைகளை நிருவகித்தலும் அது தொடர்பான ஏனைய அலுவல்களும்..
- சட்டங்களை ஆவணப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் கோவைப்படுத்தலும்.
- சட்டச் சொற்றொகுதிகளை தயாரித்தல்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்.
- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விடயங்கள்
- இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம் (2000 இல. 44) தொடர்பான விடயங்கள்
- தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் நாட்டிற்குள் நீடித்த அமைதி மற்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொள்கை கட்டமைப்பை உருவாக்குதல்
- சிறைச் சீர்திருத்தங்கள தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தல்.
- சிறைநிர்வாகம் மற்றும் மறுசீரமைப்பு
- சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பானவை
- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள்/ நிறுவனங்களைக் கண்காணித்தலும் இத் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் கீழ் வரும் ஏனைய எல்லா விடயங்களும்.

இப் பணிகளை நிறைவேற்றுவதற்காக நீதியமைச்சின் கீழ் மற்றும் அதனுடன் தொடர்புடைய பின்வரும் நிறுவனங்கள் தொழிற்படுகின்றன.

1. சட்டமா அதிபர் திணைக்களம்
2. சட்ட வரைஞர் திணைக்களம்
3. இலங்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்
4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
5. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்
6. கடன் நிவாரண சபைத் திணைக்களம்
7. சிறைச்சாலைகள் திணைக்களம்
8. சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்
9. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்
10. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
11. தொழில் நியாயசபைகள் செயலாளர் அலுவலகம்
12. காதி நீதிமன்றங்களும் காதி மேன்முறையீட்டு சபையும்
13. நீதித்துறை அல்லாத அலுவலர்களின் பயிற்சி நிலையம்
14. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
15. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை
16. இலங்கை நீதிபதிகள் நிறுவனம்
17. குற்றச் செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு அதிகாரசபை
18. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம்
19. காணாமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம்
20. இழப்பீட்டு அலுவலகம்
21. சட்டக் கல்விச் சபை

# 02. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பிரிவுகளின் செயற்பாடுகள்

அமைச்சின் பணிகள் பின்வரும் பிரிவுகளினூடாக அமுல்படுத்தப்படுகின்றன:

i. சட்டப்பிரிவு
ii. தாபனப்பிரிவு
iii. திட்டமிடல் பிரிவு
iv. அபிவிருத்தி பிரிவு
v. பொறியியல் பிரிவு
vi. மறுசீரமைப்பு பிரிவு
vii. சிறைச்சாலை மறுசீரமைப்பு பிரிவு
viii. தேசிய ஒமைப்பாட்டுப் பிரிவு
ix. நிதிப் பிரிவு
x. உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

### I. சட்டப்பிரிவு

நீதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட சர்வதேச தரக்கட்டளைகளுக்கு இசைந்ததாக தற்போது உள்ள சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களைத் தயார் செய்வதற்காக கொள்கை ரீதியிலான தீர்மானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், சட்ட அறிக்கைகளை வெளியிடுதல், மற்றும் மொழிபெயர்ப்பு செய்தல்.

### II. தாபனப்பிரிவு

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலர்களைத் தவிர்ந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் அலுவலர்களின் தாபன அலுவல்கள்.

### III. திட்டமிடல் பிரிவு

திட்டப்பிரிவின் மூலம் அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் அலுவல்கள் பற்றிய கருத்திட்டத் திட்டங்களை தயார் செய்தல், முன்னேற்ற நிருவாகம் மற்றும் மேற்பார்வை என்பன செய்யப்படுகிறது.

### IV. அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவின் மூலம் நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுதல், மற்றும் கூட்டிணைப்பு செய்யப்படுகிறது.

### V. பொறியியல் பிரிவு

பொறியியல் பிரிவின் மூலம் நீதிமன்றத் தொகுதிகள், கட்டடங்கள், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல், மேம்படுத்தல் மற்றும் பேணுதல்கள் செய்யப்படுகின்றன.

### VI. மறுசீரமைப்புப் பிரிவு

நீதி அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கி வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புக்களை தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வினைத்திறனும், விளைதிறனும்மிக்கவாறு மறுசீரமைப்பதற்காக இப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

## VII. சிறைச்சாலை மறுசீரமைப்பு பிரிவு

சிறைச்சாலை அலுவல்கள் பிரிவினால் சிறைச்சாலை நிருவாகம் பரந்தளவில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு சிறைச்சாலை அலுவலர்களின் தொழில்சார் சிக்கல்களைத் தீர்த்துவைத்து சிறையில் உள்ளவர்கள் விடுதலை பெறும் போது நல்ல பிரசைகளாக சமூகத்தில் இணைக்கும் நோக்கத்துடன் புனர்வாழ்வளிப்பு செயன்முறையை மென்மேலும் முறையான வகையில் மேற்கொள்ளத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

## VIII. தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு

இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் சகவாழ்வினையும் ஏற்படுத்துவதற்காக தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி மேம்படுத்தப்படுவதுடன் கலாசார, சமூக மற்றும் மதப் பின்னணி பரஸ்பர புரிந்துணர்வினையை ஏற்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இனப்பிரிவினர் மற்றும் இனக்குழுக்களினதும் மரபுரிமைகள், அடையாளங்களினையும் மற்றும் கலாசாரம் பாதுகாத்துக்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## IX நிதிப் பிரிவு

அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும் நிதிக்கட்டுப்பாடும்

## X உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு

அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும் நீதிமன்றங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு.

# 03.அமைச்சின் பிரிவுகளின் பணிகள்

## 3.1 சட்டப்பிரிவு

### 3.1.1 நீதி மறுசீரமைப்பு

**அ) பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைச் சட்டங்கள்**

| சட்டத்தின் பெயர் | நோக்கம் | சபா நாயகரால் சான்றுப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| 2022 இல 2 ஐக் கொண்ட குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை திருத்த) சட்டம் | மேல் நீதிமன்றங்களில் நடத்தப்படவுள்ள வழக்குக்கு முன்னான விசாரணைகள் மாநாட்டை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் | 2022.02.17 |
| 2022 இல 3 ஐக் கொண்ட மனித எதிர்ப்புக் கண்ணிவெடித் தடைச் சட்டம் | மனித எதிர்ப்பு கண்ணிவெடிகளைப் பயன்படுத்தல், களஞ்சியப்படுத்தல், உற்பத்தி மற்றும் பரிமாற்றிக் கொள்ளல் போன்றவற்றைத் தடை செய்வதற்கான உடன்பாட்டை செயற்படுத்தவதற்கான ஏற்பாடுகளை வகுத்தல்: மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநிலையான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வகுத்தல். | 2022.02.17 |
| 2022 இல 4 ஐக் கொண்ட நீதி அமைப்பு (திருத்த) சட்டம் | மேல் நீதிமன்றங்களில் வழக்குக்கு முந்தைய விசாரணைகள் மாநாடுகளுக்கு பதிவிடுதல் நீதிபதியை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்கு சட்டத்தின் 5 இ பிரிவை திருத்தம் செய்தல். | 2022.02.17 |
| 2022 இல 5 ஐக் கொண்ட குடியியல் (சிவில்) வழக்கு ஏற்பாட்டுக் கோவை (திருத்த) சட்டம் | புறக்கணித்தல் தொடர்பில் பதிவிடும் வழக்குத் தீர்ப்பை இரத்து செய்யும் அல்லது இரத்து செய்வதை நிராகரிக்கும் உத்தரவுடன், அந்த உத்தரவை செய்யும் குறித்த சம்பவத்தை விசாரிக்கையில் அந்த சம்பவத்தையும் அந்த உத்தரவையும் இடுவதற்கு அடிப்படையான காரணங்களையும் தெளிவாகக் காட்டப்பட வேண்டியதாக ஆணையிடுவதற்கு 88(2) பிரிவு திருத்தம் செய்யப்பட்டது. | 2022.02.17 |
| 2022 இல 17 ஐக் கொண்ட குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை (திருத்தச்) சட்டம் | இறுதி விருப்பாவணத்தைத் தவிர, உரியவாறு எழுதிக் கையொப்பமிடப்பட்டுள்ளதாக தோன்றும் மற்றும் சான்றுப்படுத்துவதற்காக சட்டத்தினால் பரிந்துரைக்கப்படுகின்ற ஏதேனும் உறுதி ஒன்றை அல்லது ஆவணத்தை பொதுவான நடைமுறையின் கீழ் தாக்கல் செய்துள்ள வழக்கில் பதில் வாதங்களில் அல்லது மேலதிக பதில் வாதங்களில் அந்த உறுதியின் அல்லது ஆவணத்தில் எழுதி கையொப்பமிடுதல் அல்லது உண்மைத் தன்மைக்கு சவால் விடப்பட்டிருப்பின் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய வினாவாக முன்வைக்கப்பட்டிருப்பின் அல்லது நீதிமன்றத்துக்கு அவ்வாறான உறுதிப்படுத்தல் தேவையாயின் அன்றி அவ்வாறான குறித்த உறுதி ஒன்றின் அல்லது ஆவணத்தை எழுதி கையொப்பம் இடவோ அல்லது உண்மைத் தன்மை தொடர்பான முறையான ஆதாரத்தை முன்வைக்கவோ அவசியமில்லை. | 2022.06.23 |
| 2022 இல 18 ஐக் கொண்ட குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை (திருத்தச் ) சட்டம் | குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் அந்த வழக்கின் தீர்ப்பை அல்லது வழக்கு அறிக்கையின் இறுதி உத்தரவின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று எதுவிதக் கட்டண அறவீடுகளும் இன்றி வழங்கப்பட வேண்டியதுடன் | 2022.06.23 |

| | | |
|---|---|---|
| | அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்திய பின் இப்பிரதி வழங்கப்படும். | |
| இறுதி விருப்பாவணக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தம் | கூட்டுரிமை சொத்துக்கள் மற்றும் எந்தவொரு காணித் துண்டையும் உட்சேர்த்தல் மூலம் சொத்துக்கள் எனும் பொருள் விரிவாக்கம். | |
| அட்டோனி அதிகார கட்டளைச் சட்டத்துக்கான திருத்தம் | அட்டோனி அதிகாரத்தை பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அட்டோனி அதிகாரம் செல்லுபடியற்றதாகும் கால வரம்பை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதுடன் அதனை இரத்து செய்வதற்கும் திரும்பப் பெறுவதற்குமான நடைமுறைகளை அறிமுகப்படுத்தல். | -மேற் கூறப்பட்டவை - |
| ஊழல் தடுப்புக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தம் | இந்த நொதாரிஸ் கட்டளைச் சட்டத்துக்கான துணைச் சட்ட திருத்தமாகும். நொதாரிஸ் ஒருவர் இல்லாது 5 சாட்சியாளர்களால் இறுதி விருப்பாவணப் பத்திரத்தை எழுதி கையொப்பமிடுவதால் இது இரத்து செய்யப்படுகிறது. | -மேற் கூறப்பட்டவை - |
| நொதாரிஸ் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தம் | ஆவணத்தில் கையொப்பமிடும் அனைத்துத் தரப்பினரின் கைரேகைகளும் அதனுள் உள்ளடங்க வேண்டியதுடன், சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையையும் அதிகரிக்க வேண்டும். | -மேற் கூறப்பட்டவை - |
| ஆவண பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தம் | காணியில் செல்வாக்குச் செலுத்தும் காணிப் பத்திரங்களை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில், கேவியட் தடை தாக்கலை செய்யக் கூடியவர்களை மட்டப்படுத்தல் மற்றும் திட்டமிடுவதற்கு பதிவாளரால் பெயர் மற்றும் முகவரி வழங்கப்பட்டுள்ள தரப்பினர்களை அது தொடர்பில் அறிவுறுத்த வேண்டும். | -மேற் கூறப்பட்டவை - |
| 22 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் | ஏனைய விடயங்களுடன் அரசியலமைப்புச் சட்ட பேரவை மீள அறிமுகப்படுத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றை வலுப்படுத்தல், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பெறுகைகள் ஆணைக்குழு ஆகியவற்றை மீள அறிமுகப்படுத்துவதற்காக சில திருத்தங்களை அறிமுகம் செய்தல். | 31.10.2022 |

**ஆ) பாராளுமன்றித்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட உள்ள சட்டங்கள்**

| சட்டங்கள் | நோக்கம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை (திருத்தச்) சட்டமூலம் (சிறுவர் தொடர்பிலான மரண தண்டனை) | குறித்த நபர் ஒருவர் குற்றம் இழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைந்தவரென நீதிமன்றத்தில் கருத்தாக அமைந்தால் அந் நபருக்கு எதிராக மரண தண்டனையை விதித்தல் அல்லது பதிவிடல் செய்யலாகாது என வெளியீட்டு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொருள் திரிபை நீக்கி சட்டத்தின் 281 பிரிவை திருத்தம் செய்தல். | 2022.07.06 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டம் |
| சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான கட்டளைச் சட்டத் திருத்தம் | 18 வயதுக்குக் குறைந்தவர் சிறுவர் எனும் பொருள் கோடலை அறிமுகம் செய்தல். (சிறுவர் உரிமைகள் குறித்தான உடன்பாடு) மற்றும் 15 வயதை அடையாத மற்றும் 15 வயதை அடைந்த போதிலும் 18 வயது நிரம்பாத சிறுவர்களுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளில் மற்றும் இரண்டாம் நிலை பிரிவை தாபிப்பதற்கான ஏற்பாடுகளை வகுத்தல். | 2022.09.22 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டம் |
| அபாயகரமான அருகி வரும் உயிரினக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள் | அபாயகரமான உயிரின கட்டளைச் சட்டத்தின் சிற்சில ஏற்பாடுகளை திருத்தம் செய்தல், அபாயகரமான உயிரினங்களை அழிப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் மற்றும் பிணை முறியாக குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அதிகரித்தல். | -மேற் கூறப்பட்டவை- |

| | | |
|---|---|---|
| சிறு உரித்துக்கான நீதிமன்ற சட்டமூலம் | 1.5 ரூபா மில்லியனுக்கும் குறைந்த பெறுமதியைக் கொண்ட சச்சரவுகளை கவனத்தில் கொள்ளுதல், வரையறுக்கப்பட்ட கால வரம்புடன் கூடிய நடைமுறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக தரப்பினர்களுக்கு வசதிகளை அளிப்பதற்காக விசேட நடைமுறைகளுடன் கூடிய நீதிமன்றத்தை அறிமுகம் செய்தல். | -மேற் கூறப்பட்டவை- |
| நீதி அமைப்புச் சட்டத்துக்கான திருத்தம் | விசேட சிறு உரித்துக்கான நீதிமன்றத்தை தாபித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய திருத்தங்களுக்கான ஏற்பாடுகளை வகுத்தல். | -மேற் கூறப்பட்டவை- |
| குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவைக்கான திருத்தங்கள் (101 ஆம் அதிகாரம்) (LXVI அத்தியாயத்தை இரத்து செய்தல்) | தனியான விசேட சட்டமாக சிறு விவாத நீதிமன்றங்கள் தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய குடியியல் வழக்கு ஏற்பாட்டு கோவையின் LXVI அத்தியாயத்தை இரத்து செய்தல், சிறு விவாத நீதிமன்றத்துக்கு ஏற்புடைய நடைமுறைகள் அமுலாக்கப்படவுள்ளன. | -மேற் கூறப்பட்டவை- |
| 1990 இல 10 ஐக் கொண்ட மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான திருத்தங்கள் | ஒரு கிராமத்தில், மாகாணத்தின் உள்ளே சிறு உரிமை கோரல் நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்கள், தீர்ப்புக்கள் வழங்கல் மற்றும் உத்தரவுகள் தொடர்பில் அந்த மாகாணத்துக்கான அரசியலமைப்புச் சட்டத்தின் 154 பீ உறுப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களில், மேன்முறையீட்டு மற்றும் மீளாக்க நீதிமன்றங்களின் அதிகாரத்தை அடையாளம் காணல் மற்றும் அவ்வாறான ஏதேனும் சிறிய உரிமை கோரல் நீதிமன்றத்தின் மூலம் மேற் கொள்ளப்படக் கூடிய சம்பவ ரீதியான அல்லது சட்ட ரீதியான அனைத்துத் தவறுகளையும் சரி செய்வதற்காக மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகார வரம்பை அடையாளம் காணல். | -மேற் கூறப்பட்டவை-- |
| நச்சு வகைகள் அபிங் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள் | பிணை தொடர்பான ஏற்பாடுகள், அச் சட்டத்தின் III ஆம் அட்டவணையில் II ஆம் தொகுதியில் I ஆம் பகுதியில் மற்றும் II ஆம் பகுதியில் அடங்கும் மூலப் பொருட்களை அழித்தல், தடுத்து வைக்கும் காலம் தொடர்பில் புதிய ஏற்பாடுகளை அறிமுகம் செய்தல், அடிமையாதல் தடுப்பு மற்றும் மறுவாழ்வுக்கான மருத்துவச் சிகிச்சைகளை வழங்குவதற்கு தன்னார்வலரை சேர்த்துக் கொள்ளல், 18 வயதுக்குக்குக் குறைந்த இளைய குற்றவாளிகளை நன்னடத்தைக்கு கீழ்ப்படுத்துதல், அரச பகுப்பாய்வு அறிக்கை தொடர்பில் கண்களால் காணக் கூடிய ஆதாரங்களின் மதிப்பை வழங்குதல், 2 கிராம் நிகர எடை அல்லது அதற்கும் குறைந்த மூலப்பொருட்களின் போதுமான எடைக்கான சம்பவ அடிப்படையிலான பெறுமதி | உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் சட்ட மூலம் சவாலிடப்பட்டது. |
| மறுவாழ்வு பணியகத்தை தாபிப்பதற்கான சட்டமூலம் | முன்னாள் போராளிகள், பயங்கரவாத குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் போன்றோரை முகாமைத்துவம் செய்வதற்கும், மறுவாழ்வு அளிப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்காகவும் புனர்வாழ்வு பணியகத்தை தாபித்தல் மற்றும் புனர்வாழ்வு நாயக அலுவலகத்தைத் தாபித்தல், ஒழுங்குபடுத்துதல். | உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் சட்ட மூலம் சவாலிடப்பட்டது. |
| மலை நாட்டு விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் | திருமணத்துக்கான குறைந்த பட்ச வயது 18 ஆக இருத்தல் வேண்டும் எனவும், சிறுவர்களின் திருமணத்துக்கான பெற்றோர் சம்மதம் தேவையான மலை நாட்டு விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் II ஆம் பகுதியை இரத்து செய்தல். | ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. |

**இ) அமைச்சரவையின் கொள்கை ரீதியான ஒப்புதல் பெறப்பட்டு, இறுதியாக தயாரிக்கப்பட்டு வருகிறது.**

| சட்டங்கள் | நோக்கம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதிக்கான சட்டமூலம் | சட்ட நடவடிக்கைகளின் போது பிள்ளைகளின் நலனை உறுதிப்படுத்துதல் மற்றும் சட்டத்துடன் தொடர்பு கொள்ளும் போது பிள்ளைகள் தொடர்பில் உரிய சர்வதேச நியமங்களின் கீழ் அமைதல். | நன்னடத்தை அலுவலகர்களிடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. |
| நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான புதிய சட்ட அறிமுகம் | நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை தெளிவாக வரையறுத்தல் மற்றும் குற்றம் இழைக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும், நீதிமன்றம் பலமுள்ள ஜனநாயக பேச்சுக்கு உட்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தல். | அமைச்சின் அவதானிப்புக்கள் அடங்கலாக சட்ட வரைவாளரிடம் திருத்த சட்டமூலம் கிடைக்கும் வரை எதிர்பார்த்திருத்தல். |
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை (323(5) பிரிவை திருத்தம் செய்தல். | மேன்முறையீடுகள் தொடர்பில் சிறையில் அடைக்கப்பட்ட காலப் பகுதியையும் தண்டனையின் பகுதியாக கருதுதல். | சட்ட மூலம் வரைவாளர்களிடம் இருந்து அடிப்படை சட்ட மூலத்தை எதிர்பார்த்திருத்தல். |
| ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் | இலஞ்சம் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்கு பலமிக்க நீதிச் சட்டகத்தை செயற்படுத்துவதற்காக புதிய சட்டத்தை அறிமுகம் செய்தல். | சட்டத்தை வகுப்பதற்காக பரிந்துரைகளை முன் வைப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. |
| குற்றங்களின் மூலம் பெற்ற நிதி சட்டமூலம் | குற்றச் செயல்களில் இருந்து இலாபம் பெறுவதைத் தடை செய்தல், அவற்றை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், குற்றச் செயல்களில் இருந்து கிடைக்கும் இலாபத்தை அறவிட்டு அதனைப் பெற்றுக் கொள்வதைத் தடுத்தல் | சட்ட மூல வரைவாளர்களிடம் இருந்து இறுதிச் சட்டமூலம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| காரணத் தெரிவிப்புச் சட்டம் (குடும்பச் சட்டம்) | திருமணத்தை இரத்து செய்தல், திருமணத்தை முறித்தல் மற்றும் இரு தரப்பினரையும் சட்ட ரீதியாக பிரித்தல் தொடர்பான சட்டங்களையும், நடைமுறைகளையும் திருத்தம் செய்தல் மற்றும் ஒன்றிணைத்தல். | சட்ட வரைவாளரிடம் இருந்து திருத்தச் சட்டம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| வெளிநாட்டு விவாகரத்துக்களை அங்கீகரித்தல் | வெளிநாட்டு விவாகரத்துக்களை அங்கீகரித்தல், திருமணத்தை இரத்து செய்தல் அல்லது இரு தரப்பினரையும் சட்ட ரீதியாக பிரிப்பதற்கான ஏற்பாடுகளை வகுத்தல். | கௌரவ சட்டமா அதிபரிடம் சட்டத்துக்கு அமைவான தகுதிச் சான்றை எதிர்பார்த்துக் காத்திருத்தல். |
| குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவைக்கான திருத்தங்கள் (101 அதிகாரம்) (வழக்குக்கு முன்னைய விசாரணை மாநாடுகள்) | முதன்மை நியதிச் சட்டத்தின் XA ஆம் அத்தியாயத்தை இரத்து செய்து, புதிய அத்தியாத்தை மீளத் தாபித்தல் (குடியியல் சட்ட நூல்களில் வழக்குக்கு முன்னைய விசாரணை சந்தர்ப்பம்) மற்றும் வழக்குக்கு முன்னைய விசாரணைகள் மாநாட்டை அறிமுகப்படுத்தல். | கௌரவ சட்டமா அதிபரின் சட்டத்துக்கு அமைவான தகுதிச் சான்றிதழை எதிர்பார்த்திருத்தல். |
| குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவைக்கான திருத்தங்கள் (101 அதிகாரம்) (VIII ஆம் அத்தியாயம் - அழைப்பாணையை பிறப்பித்தல் மற்றும் ஒப்படைத்தல்) | உத்தரவுப் பத்திரங்கள் தரப்பினரதும், பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினதும் பதிவு முகவரிக்கு / கையடக்க தொலைபேசி இலக்கத்துக்கு மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல், | சட்ட வரைவாளர்களிடம் இருந்து இறுதி சட்டமூலத்தை எதிர்பார்த்திருத்தல். |

| | | |
|---|---|---|
| | அழைப்பு விபர மாற்றங்களை அறிவித்தல், கூரியர் சேவை அல்லது மின்னஞ்சல் ஊடாக அழைப்பாணை ஒப்படைப்பதை அங்கீகரித்தல், அடையாளம் காணும் சாட்சியாளர்களாக மூத்த குடிமக்கள் அடையாள அட்டையை அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்தை உட்சேர்த்தல், இலங்கையினுள்ளும், அதற்கு வெளியேயும் வதிவாளரினால் மாற்றாள் கையொப்பமிடும் பொறிமுறை, அஸ்கிசி செயற்பாட்டாளர்களின் பணிகள், மின்னஞ்சல் ஊடாக அழைப்பாணைகளை அனுப்புவதை உறுதி செய்தல், சிறைச்சாலை பொறுப்பதிகாரிகளின் கடமைக்கு கீழ் அமையாத விடயங்கள் தொடர்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | |
| கடன் இணக்கச் சபை கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள் | கடன் இணக்கச் சபையின் இணக்கங்களை திருத்தம் செய்தல் மற்றும் கடன் இணக்க சபையின் கோரிக்கைகள் கிடைத்ததும் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் | சட்ட வரைவாளர்களினால் முன்வைக்கப்பட்ட சட்டமூலம் கருத்தில் கொள்ளப்பட்டு வருகிறது. |
| போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு (சிகிச்சை அளித்தல் மற்றும் புனர்வாழ்வு அளித்தல்) சட்டத்துக்கான திருத்தம் | தற்போது நிலவும் நடைமுறையை மேம்படுத்துவதற்கான சட்ட திருத்தம் | பாதுகாப்பு அமைச்சின் பதிலுக்காகக் காத்திருக்கப்படுகிறது. |
| புதிய நடுதீர்ப்பு சட்டம் | தற்போது நிலவும் நடுதீர்ப்புச் சட்டத்தை இரத்து செய்தல் மற்றும் மீளத் தாபித்தல். | சட்ட வரைவாளரால் சட்ட மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. |
| முதலீட்டுப் பிணக்குகள் மேல் நீதிமன்றச் சட்டம் | 100 மில்லியன் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப முதலீடுகளில் எழும் அல்லது 50 மில்லியன் ரூபாயை ஆரம்ப பெறுமதியாகக் கொண்ட சச்சரவுகளை விசாரித்து உறுதிப்படுத்துவதற்காக நீதி அதிகாரத்தை வழங்கும் முதலீட்டுப் பிணக்குகள் மேல் நீதிமன்றத்தைத் தாபித்தல். | சட்ட வரைவாளர்களினால் ஆரம்ப சட்ட மூலம் அனுப்பப்படவுள்ளது. |
| 2003 இல 21 ஐக் கொண்ட மத்தியஸ்த (விசேட வகையிலான சச்சரவுகள்) சட்டத்துக்கான திருத்தம் | தற்போது நிலவும் நடைமுறையை மேம்படுத்துவதற்கான சட்ட திருத்தம். | மத்தியஸ்த சபை சட்டம் தொடர்பில் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை எதிர்பார்த்துக் காத்திருத்தல். |
| தண்டனைச் சட்டக் கோவை திருத்தங்கள் | "ஊழல்" குற்றம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. | சட்ட வரைவாளரால் திருத்தச் சட்டமூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. |
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை மற்றும் நீதி அமைப்புச் சட்ட (சட்டவாக்க ஊழல்) திருத்தங்கள் | ஆண் பெண் நடுநிலையை அறிமுகம் செய்தல் மற்றும் குறைந்த பட்ச கட்டாய தண்டனையை நீக்குதல். | சட்ட வரைவாளரிடம் இருந்து திருத்தச் சட்டமூலம் கிடைக்கவுள்ளது. |
| குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவையின் திருத்தங்கள் (167 ஆவது பிரிவு – செவிப்புல மற்றும் விழிப் புல (ஒலி, ஒளி) ஊடகத்தின் ஊடான உள்நாட்டு, வெளிநாட்டு சாட்சியாளர்களின் சாட்சிகளை குறித்தல். | சாட்சியாளர்களின் சாட்சி திறந்த நீதிமன்றத்தில் வாய் மூலமாகப் பெறப்படுதல் வேண்டும் என்பது தொடர்பில் 167A முதல் 167M பிரிவு வரை இலக்கமிடப்பட்டு புதிய ஏற்பாடுகளைச் சேர்த்தல். | சட்ட வரைவாளரிடம் இருந்து திருத்தச் சட்டமூலம் கிடைக்கவுள்ளது. |

| | | |
|---|---|---|
| சமூக அடிப்படையிலான மாற்றங்கள் சட்டத்துக்கான திருத்தங்கள் | இந்தத் திருத்தத்தின் மூலம் 2 வருடங்களுக்குக் குறைந்த சிறைத் தண்டனையைப் பெற்ற சிறைக் கைதிகள் மற்றும் சட்டத்துக்கு மதிப்பளிக்கும் குடிமக்களை உருவாக்குவதன் அபிலாஷையுடன் சமூக மாற்ற ஆணைக்காக சிறு அபராதப் பணத்தைச் செலுத்தாமையால் சிறை வைக்கப்பட்டிருப்பவர்களுக்கான திருத்தத்தை அறிமுகம் செய்தல். | சட்ட வரைவாளரிடம் இருந்து திருத்தச் சட்டமூலம் கிடைக்கவுள்ளது. |
| பிரிவிடுதல் சட்டத்துக்கான திருத்தங்கள் | பிரிவிடுதல் சட்டம் தொடர்பில் ஏற்புடைய சிற்சில ஏற்பாடுகளும், நடைமுறைகளும் காலாவதியானவை. தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. அதனால் பிரிவிடுதல் வழக்குகள் தீர்ப்பதில் தாமதம் ஏற்படுகின்றன. | சட்டமா அதிபரால் சட்டத்துக்கு அமைவானது தொடர்பான சான்று வழங்கப்படவுள்ளது. |
| வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட வளாகத்தின் உரிமையை மீட்டெடுக்கும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | வழக்கமான நடைமுறைகளின் கீழ் சாதாரண வாடகை மற்றும் வெளியேற்ற செயற்பாடுகளின் போது சட்டத்தில் தாமதம் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் மிகக் குறுகிய காலத்தினுள் வாடகை கொடுப்பவருக்கு நிவாரணங்களை வழங்குதல். | சட்டமா அதிபரால் சட்டத்துக்கு அமைவானது தொடர்பான சான்று வழங்கப்படவுள்ளது. |
| குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாத்தல் மற்றும் ஆதரவு அளிக்கும் சட்டம் மீளாக்கம் செய்வதற்கான புதிய சட்ட அமைப்பு | குற்றத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சாட்சியாளர்களின் உரிமைகளையும் உரித்துக்களையும் வகுத்தல் மற்றும் அந்த உரிமைகளையும் உரித்துக்களையும் பாதுகாத்தல், மேம்படுத்தல், மற்றும் உகந்த சர்வதேச நியமங்கள், சிறந்த பயிற்சிகள் மற்றும் நியமங்கள் போன்றவற்றை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வகுத்தல். | சட்டமா அதிபரின் அவதானிப்பு செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், முன்மொழியப்பட்ட திருத்தம் சட்ட வரைவாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**ஈ) அமைச்சரவையின் கொள்கை ரீதியான ஒப்புதலுக்காக முன் வைப்பதற்கு.**

| **தலைப்பு** | **நோக்கம்** | **தற்போதைய நிலவரம்** |
|---|---|---|
| சிறைச்சாலைகள் நிருவாகச் சட்டம் | 1877 ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டதுடன், பல ஆண்டுகள் முழுவதும் சிறைச்சாலைகள் நிருவாகத்தினுள் பல குறைபாடுகள் அந்தக் கட்டளைச் சட்டத்தில் காணப்படுகின்றன.<br><br>அந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், சர்வதேச நியமங்களையும், சிறந்த நடைமுறையை பூர்த்தி செய்வதற்கும் புதிய சிறைச்சாலைகள் சட்டத்தை கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்ட வரைவாளர்களால் வரைவை இயற்றுவதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அவதானிப்புக்களும், பரிந்துரைகளும் எதிர்பார்க்கப்படுகிறது. |
| பொதுப் போக்குவரத்தில் இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் | பொது போக்குவரத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குபவரை தண்டித்தல். | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு கௌரவ அமைச்சரின் ஒப்பந்தத்துக்காக அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 1988 இல 72 ஐக் கொண்ட மத்தியஸ்த சபை சட்டத் திருத்தம் | மத்தியஸ்த ஆணைக்குழுவை நியமித்தல் மற்றும் பிற திருத்தங்களை மேற் கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கு கொள்கை ஒப்புதலை பெற்றுக் கொள்ளுதல். | அமைச்சரவையின் ஒப்புதலை எதிர்பார்த்துள்ளது. |
| புகையிலை சட்டம் (திருத்தம்) | புகையிலை வரியை அதிகரித்தல். | கூட்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் வரைவு அங்கீகாரத்துக்காக சனாதிபதி செயலாளர் அலுவலகத்திக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. |
| விவாக பதிவுக் கட்டளைச் சட்டத் திருத்தம் | விவாக பதிவுக் கட்டளைச் சட்டத்தில் விவாகரத்தை பதிவு செய்தல் மற்றும் திருமண இரத்து தொடர்பான ஏற்பாடுகளை வகுத்தல். வெளிநாட்டு விவாகரத்து தொடர்பான முன்மொழிவுகளை அடையாளங் காண்பதற்கான இடைநிலைத் திருத்தங்கள் | அமைச்சரவையின் தீர்மானங்களை எதிர்பார்த்துள்ளது. |
| குடியியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை திருத்தம் ( ஒரு நபருக்கு இழைக்கப்படும் காயங்களுக்கான சேதம்) | 3 மருத்துவர்களுக்கு மேற்படாத மருத்துவப் பரிசோதனையில் நபர் ஒருவருக்கு ஏற்பட்ட காயத்துக்கான சேதம் தொடர்பில் தான் முன்னிற்பதற்கும், அந்த மருத்துவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும் அதனுள் அடங்கியுள்ள விடயங்களும் வழக்கு விசாரணையின் போது பாவிப்பதற்கு இடமளிப்பதன் மூலம் வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தல் இந்தத் திருத்தம் 429 ஆம் பிரிவாக "மருத்துவப் பரிசோதனைக்கான ஆணைக்குழு" D தலைப்பின் கீழ் சேர்த்தல். | அமைச்சரவையின் தீர்மானங்களை எதிர்பார்த்துள்ளது. |
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை திருத்தம் (மரண விசாரணை XXX அத்தியாயம்) | 30 XXX ஆவது அத்தியாயமான மரண விசாரணை மற்றும் புதிய ஏற்பாடுகளை அறிமுகம் செய்தல். | அமைச்சரவை பத்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை பெற்றபின் அமைச்சரவையிடம் அனுப்பி வைக்கப்படவுள்ளது். |

### 3.1.2 விதிகள், ஆணைகள் மற்றும் ஒழுங்குமுறைகள்.

**அ) வர்த்தமானி பத்திரம் / பாராளுமன்ற அங்கீகாரம்**

| தலைப்பு | நோக்கம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| 2003 இல 21 ஐக் கொண்ட (விசேட சச்சரவுகளை வகைப்படுத்தல்) மத்தியஸ்த சட்டத்தின் கீழ் 2.3 ஆம் பிரிவு மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழ் உள்ள ஆணைகள் | காணி சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக விசேட மத்தியஸ்த சபையை தாபித்தல் | இல 2261/68 ஐக் கொண்ட 2022.01.06 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரம் |
| சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான சட்டம் | பெற்றோருடன் அனுமதிக்கப்பட்டுள்ள பிள்ளைகள், கடுமையாக | இல 2288/15 ஐக் கொண்ட 2022.07.12 ஆம் திகதிய |

| | | |
|---|---|---|
| | நோய்பாய்பட்டுள்ள சிறைக் கைதிகள், சிறைக் கைதிகளை வேறாக்குதல், மற்றும் வகைப்படுத்தல் மற்றும் சிறைக் கைதிகளின் விசேட இடர் மதிப்பீடு போன்றவை தொடர்பில் சிக்கல்களை அடையாளம் கண்டு நிலவும் சிறைச்சாலைகள் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருதல்.<br>திருத்தச் சட்டத்தின் மூலம் மேற் கூறப்பட்ட விடயங்களை தீர்த்து வைப்பதற்கு பல பிரயோகத் தீர்வுகளை கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது. | வர்த்தமானி பத்திரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| 1988 இல 72 ஐக் கொண்ட மத்தியஸ்த சபைச் சட்டத்தின் 04 இலக்க பிரிவின் கீழான ஆணை | நுவரெலியா, காலி, முல்லைத்தீவு மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மத்தியஸ்த சபையைத் தாபிப்பதற்கு | 2022.08.18 ஆம் திகதிய 2293/46 இலக்க வர்த்தமானி அறிவித்தல். |

**ஆ) தயாரிப்புச் செயன்முறை**

| தலைப்பு | நோக்கம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| 2003 இல 21 ஐக் கொண்ட மத்தியஸ்த (விசேட சச்சரவுகள் வகையிடல் சட்டத்தின் 4(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குமுறைகள் | 2021.12.21 ஆம் திகதிய 2259/11 இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தினுள் காட்டப்பட்டுள்ள ஆணை உள்ள விசேட மத்தியஸ்த சபைக்கான மத்தியஸ்தர்களின் சபைக்கான தகைமைகளை வர்த்தமானி பத்திரத்தில் பிரசூரித்தல். | சட்ட வரைவாளர்களால் திருத்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிதி (சட்டங்கள்) தொடர்பான 1978 இல 02 ஐக் கொண்ட நீதி அமைப்புச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குமுறைகள் | ஒவ்வொரு மாகாண சபையாலும் விதிக்கப்படும் நிதிச் சட்டம் தொடர்பான விடயங்களை தீர்மானிப்பதற்கு மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றங்களுக்கு அதிகாரத்தை அளிப்பதற்காக அமைச்சரும், நீதியரசரும் இணக்கம் தெரிவித்த உரிய ஆணை வர்த்தமானி பத்திரத்தில் பிரசூரித்தல். | கிழக்கு மாகாணம் தொடர்பில் நீதியரசரின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல். |

## 3.1.3 குழுக்களின் ஒருங்கிணைப்பு

| பெயர் | ஒப்படைப்பு அதிகாரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| ஊழல் எதிர்ப்புச் சட்டம் | மிகவும் வலுவான சட்டவாக்கத்தினால் நடைமுறையில் உள்ள சட்டங்களை பதிலீடு செய்தல். | சட்ட வரைவுத் திணைக்களத்தினால் சட்ட சான்றிதழை வழங்குவதற்கான புத்தம் புதிய சட்டமூலம் கௌரவ சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| குற்ற விடயங்களான சொத்துக்களை அப்புறப்படுத்தல் தொடர்பான விசேட சட்டம்<br>- குற்றங்கள் தொடர்பிலான விடயங்கள் | பரிந்துரைகளை முன்வைப்பதற்கு சனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட அவர்களின் தலைமையில் குழு ஒன்றை நியமித்தல். | தற்போது குழு விடயம் தொடர்பில் கலந்துரையாடியவாறு உள்ளதுடன், இது வரை 06 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. |
| பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அல்லது பாராளுமன்றத்தில் அமரும் அல்லது அங்கு வாக்களிக்கும் நியமனங்களை தகைமையீனங்களாக்கி தனக்காகவோ அல்லது அரசுக்காகவோ குறித்த உடன்படிக்கை ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் போது கால வரம்புக்கான புதிய சட்டத்தை அறிமுகம் செய்தல். | அரசியலமைப்புச் சட்டத்தின் 91(1)உ இனால் பாராளுமன்ற உறுப்பினருக்கு அல்லது அரசாங்கத்துக்கான அரச நிறுவனத்துடன் குறித்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான தகைமையீனமாகச் சட்டத்தினால் காட்டப்பட்டிருப்பினும், கடந்த 44 வருடங்களாக அவ்வாறான சட்டம் ஒன்று இயற்றப்படவில்லை. அதனால் குழுவினால் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு குழு ஒன்றை நியமித்ததுடன், அதன் மூலம் பாராளுமன்றத்தினுள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கியிருப்பதனால் தகைமையற்றதன் மீதான உரிமைகளை உத்தரவு இடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | குழு அழைக்கப்படவுள்ளது. |

### 3.1.4 இலங்கை சட்ட அறிக்கை வெளியீடு

இலங்கை சட்ட அறிக்கை என்பது உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றால் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்கள் மூலம் முக்கியமான நீதித்துறைக் கருத்துக்களை உள்ளடக்கி பிரசுரிக்கப்படும் தொடர் வெளியீடுகள் ஆகும். வழக்குகளின் உத்தியோகபூர்வ அறிக்கையாக இது கருதப்படுவதுடன், ஏதேனும் ஒரு விசேட சந்தரப்பங்கள் தொடர்பில் முடிவுகளை எடுக்கும் போது சட்டத்தரணிகளால் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது பதிப்பாளர் சபையின் கீழ் தயாரிக்கப்படும் தொடர் செயற்பாடாகும்.

இந்நாள் ஆசிரியர் குழு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்ட அறிக்கைகளை நிறைவு செய்து அரச அச்சகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. பதிப்பாளர் சபை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் அச்சுப் பிரதிகளைச் சரி பார்த்து 2022 ஆண்டுக்குரிய அறிக்கைகளை தயாரித்து வருகிறது.

### 3.1.5 சர்வதேச தொடர்புகளை செயற்படுத்தல்.

- 2001 இல 10 ஐக் கொண்ட சர்வதேச சிறுவர் கடத்தல் தொடர்பான சட்டத்தின் குடியியல் பக்கம்
- 1995 இல 05 ஐக் கொண்ட குற்றவாளி ஒப்படைப்புச் சட்டம்
- 2002 இல 25 ஐக் கொண்ட குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் இந்த நாட்டுக்கு வருகை தரும், இந்த நாட்டிலிருந்து வெளியேறும்
- 2002 இல 39 ஐக் கொண்ட குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம். இந்த நாட்டுக்கு வருகை தரும், இந்த நாட்டிலிருந்து வெளியேறும்
- 2001 இல 10 ஐக் கொண்ட சர்வதேச சிறுவர் கடத்தல் தொடர்பான சட்டத்தின் குடியியல் பக்கங்கள் இலங்கையில் இருந்து வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட குழந்தைகள் தொடர்பில் பெறப்பட்ட கோரிக்கைகள் மீதான முன்னேற்றம்

| குழந்தைகள் அழைத்துச் செல்லப்பட்ட நாடு | கிடைக்கப்பட்ட கோரிக்கை |
|---|---|
| டுபாய் | 01 |

- **1995 இல 05 ஐக் கொண்ட குற்றவாளிகள் ஒப்படைப்புச் சட்டம்**

1995 இல 05 ஐக் கொண்ட குற்றவாளிகள் ஒப்படைப்புச் சட்டத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரஜை இலங்கையில் ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்யும் போதும், இலங்கை பிரஜை ஒரு குறிப்பிட்ட நாட்டில் குற்றத்துக்கான தண்டனையைப் பெற்றால் அவரை இந் நாட்டுக்கு ஒப்படைப்பதற்காக ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

- 2022 ஆண்டினுள் இலங்கையினுள் ஒரு குற்றத்துக்காக தண்டிக்கப்பட்ட ஒரு குறித்த நாட்டின் பிரஜை ஒருவரை அந்த குறிப்பிட்ட நாட்டுக்கு ஒப்படைத்தல் தொடர்பான முன்னேற்றம். – 2022

| பரிமாற்றிக் கொண்ட நாடு | குற்றவாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| தாய்லாந்து | 02 |
| இந்தியா | 02 |

- **2002 இல 25 ஐக் கொண்ட குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட உதவிச் சட்டம்**

குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவிகளை காட்டும் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் நோக்கில் இலங்கை பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தங்களுக்கு கைச்சாத்திட்டுள்ளது. ஒவ்வொரு அரச தரப்பினரும் விசாரணைகளை நடத்துதல், வழக்குத் தாக்கல், வழக்கு விசாரணை செய்து சட்ட ரீதியாக அவற்றை செயற்படுத்துதல் மூலம் குற்றவியல் விடயங்களில் உதவி வழங்கும் விடயப் பரப்பு தொடர்பில் இந்த ஒப்பந்தங்களால் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

- இந்த நாட்டில் இருந்து மற்றோரு நாட்டுக்கும், மற்ற நாடுகளில் இருந்து இந்த நாட்டுக்கும் பரஸ்பர சட்ட உதவி வழங்குவதில் முன்னேற்றம் - 2022

| இல. | நாடு | கிடைத்த வேண்டுகோள் | விடுக்கப்பட்ட வேண்டுகோள் |
|---|---|---|---|
| 1 | அவுஸ்ரேலியா | - | 01 |
| 2 | இந்தியா | 01 | - |
| 3 | பிரான்ஸ் | 03 | - |
| 4 | மாலைதீவு | 01 | 01 |
| 5 | பெல்ஜியம் | - | 01 |
| 6 | பெலரெஸ் | 01 | - |
| 7 | டோஹா கட்டார் | 01 | - |
| 8 | ஐக்கிய இராச்சியம் | 01 | 01 |
| 9 | யுக்கிரேன் | 01 | - |
| 10 | துருக்கி | - | 01 |
| 11 | யுனைடட் அரபி எமிரேட்ஸ் | 01 | - |
| 12 | ஹொங்கொங் | - | 01 |
| 13 | கொரியா | 01 | - |
| 14 | போர்த்துக்கல் | 01 | - |
| 15 | ஓமான் | 01 | - |
| 16 | போலாந்து | 01 | |
| **மொத்தம்** | | **14** | **6** |

- **2000 இல 39 ஐக் கொண்ட குடியியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான பரஸ்பர உதவி சட்டம்**

2000 இல 39 ஐக் கொண்ட குடியியல் மற்றும் வர்த்தக அலுவல்கள் தொடர்பான பரஸ்பர உதவி சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் மூலம் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணைகளை சட்ட செயற்பாடுகளினுள் காட்டப்பட்டுள்ள முகவரிகளுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக ஒப்படைக்கப்பட்டது.

- **2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் மூலம் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை தொடர்பிலான முன்னேற்றம்**

| நாடு | பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை | நாடு | பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 20 | மலேசியா | 04 |
| கனடா | 08 | மாலைதீவு | 02 |
| சீனா | 10 | நியூசிலாந்து | 04 |
| சைப்பிரஸ் | 03 | ஓமான் | 01 |
| டோஹா கட்டார் | 03 | பிலிபீன் | 01 |
| பிரான்ஸ் | 05 | ரஷ்யா | 07 |
| ஜேர்மன் | 20 | சிங்கப்பூர் | 02 |
| இந்தியா | 24 | தைலாந்து | 01 |
| இஸ்ரேல் | 03 | ஸ்பானியா | 03 |
| இத்தாலி | 21 | சுவிஸ்லாந்து | 05 |
| ஜப்பான் | 06 | ஐக்கிய அரபி இராச்சியம் | 07 |
| கொரியா | 04 | ஐக்கிய இராச்சியம் | 17 |
| சவுதி அரேபியா | 08 | அமெரிக்கா | 10 |
| குவைத் | 15 | | |
| **மொத்தம்** | | | **214** |

வெளிநாட்டு நீதிமன்றங்களின் மூலம் இலங்கையில் வாழும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் 2000 இல 39 ஐக் கொண்ட குடியியல் மற்றும் வர்த்தக விவகாரங்களில் பரஸ்பர உதவிகளை வழங்குதல் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட சுமார் 63 அழைப்பாணைகள்/ கோரிக்கைகள் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பட்டுள்ளன.

- 2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் இலங்கையில் வசிக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும்
- சாட்சிகளுக்கு வெளிநாட்டு நீதிமன்றங்கள் பிறப்பித்துள்ள அழைப்பாணைகள் தொடர்பான முன்னேற்றம்

| நாடு | கிடைத்த கோரிக்கைகள் | நாடு | கிடைத்த கோரிக்கைகள் |
|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 01 | மலேசியா | 03 |
| கனடா | 04 | கொரியா | 01 |
| சீனா | 09 | நோர்வே | 04 |
| பிரான்ஸ் | 08 | ஸ்லோவினியா | 02 |
| ஜேர்மன் | 03 | ஸ்கொட்லாந்து | 01 |
| இந்தியா | 13 | சுவிஸ்லாந்து | 08 |
| இத்தாலி | 02 | அமெரிக்கா | 01 |
| ஜப்பான் | 01 | யுக்கிரேன் | 01 |
| போலாந்து | 01 | | |
| **மொத்தம்** | | | **63** |

### 3.1.6. சர்வதேச கடப்பாடுகளை செயற்படுத்தல்

| | அறிக்கையின் பெயர் | கோரிக்கை விடுத்த | நிலவரம் |
|---|---|---|---|
| 01. | நவம்பர் 26 ஆம் திகதி முதல் டிசம்பர் 03 ஆந் திகதி வரை அடிமைத்தனத்துக்கான காரணம் மற்றும் விளைவுகளும் உள்ளிட்ட சமகால நிலவரம் தொடர்பில் சிறப்பு நிருபர் டொமொயா ஒபெகொடாவின் இந்நாட்டு சுற்றுப் பயணம் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 2022.05.05 | 2022.05.23 ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டது. |
| 02. | அறுமஹந்திகே ஜனித் மதுஷங்க தொடர்பில் விசேட மூன்று நடைமுறைகள் குறித்தான கூட்டு அறிவித்தல் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 2021.02.29 | 2022.01.13 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டது. |
| 03. | ஏகாதிபத்திய முறையில் தடுத்து வைத்தல் தொடர்பில் இயக்கக் குழுவின் கடிதம் கிடைத்தமை. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 2021.12.29 | 2022.01.13 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலலாளருக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டது. |
| 04. | கருத்துக்களை ஏற்கும் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் உரிமையை பாதுகாத்தலும், அதனை மேம்படுத்தலும் தொடர்பான சிறப்பு நிருபர் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 2021.12.29 | 2022.01.13 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலலாளருக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டது |
| 05. | நிருவாகம், சட்ட அதிகாரம், மனித உரிமைகள் தொடர்பில் ஐ.ஒ - இலங்கை இயக்கக் குழுக்களுக்கு இடையிலான 6 ஆவது சந்திப்பு | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 2021.12.29 | 2022.01.13 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலலாளருக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டது |

### 3.1.7 நீதித் துறைக்கு ஏற்பான செயலணியும், அதனூடான பங்களிப்பும்

- **ஆட் கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணி**

பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஆட் கடத்தல் வியாபாரத்துக்கு எதிரான செயலணியின் பணிகளுக்கு அமைச்சு வழங்கியுள்ள பங்களிப்பு

அமெரிக்க ஐக்கிய குடியரசு அரச திணைக்களத்துக்கு அனுப்பிய போதைப் பொருள் வியாபாரம் தொடர்பில் 2022 அறிக்கையை தயாரிக்கும் போது நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பங்களிப்பை வழங்கியதுடன், அதனால் இலங்கை 2 ஆம் வரிசை கண்காணிப்புப் பட்டியலில் இருந்து 2 ஆம் வரிசைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

- **பொது மனுக்கள்**

2022 ஆம் ஆண்டுக்கான (செப்டம்பர் 30 ஆந் திகதி வரை) சட்டப் பிரிவின் 9 மனுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**

செவிப்புல காட்சிப்புல (ஒலி ஒளி) இணைப்பியைப் பெற்றுக் கொள்ளல் - 02

## 3.2 தாபனப் பிரிவு

### 3.2.1. அறிமுகம்

அமைச்சின் தாபன மற்றும் நிருவாக அலுவல்கள், அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களினதும் மேற்படி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் நீதிமன்றங்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள் தொடர்பிலான தாபன நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றங்களின் நிருவாக, தாபன நடவடிக்கைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் ஆகிய பிரதான விடயப்பரப்புக்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் தாபனப் பிரிவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பணிகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 3.2.2. அமைச்சின் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள்

அமைச்சின் செயற்பணியை மென்மேலும் பரந்தளவிலும், பலம்மிக்கதாகவும் அமுல்படுத்துவதற்கும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டமைப்பை மீளமைக்கும் செயன்முறை மற்றும் சட்ட மறுசீரமைப்புக்களை நிலைபேறானவாறு பேணிவர வேண்டிய தேவையை கவனத்தில் கொண்டு நிறைவேற்றுத் தரம் முதல் ஆரம்ப தரம் வரையான பதவிகள் தொடர்பான புதிய பதவிகளை ஏற்படுத்தல் மற்றும் காணப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை அதிகரித்தமையும் மேற்கொள்ளப்பட்டன.

### 3.2.3. நீதிமன்றங்கள் மற்றும் அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்

1. 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் அதிகரிக்கப்பட்டதற்கு இசைவாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதி மற்றும் அலுவலக சிற்றூழியர் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு மேற்படி பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்.

2. அமைச்சின் விடயப்பரப்பின் கீழுள்ள நீதிமன்றங்களில் மற்றும் நிறுவனங்களில் காணப்படுகின்ற ஆரம்ப சேவை வகுதியின் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- நீதிமன்றங்களில் காணப்படுகின்ற அலுவலக சிற்றூழியர் பதவிகள் 225 இற்கு துரிதமாக பல்தேவை அபிவிருத்தி உதவியாளர்களை இணைப்புச் செய்தல். (ஏற்கெனவே மேற்படி இணைப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.)
- நீதிமன்றங்களுக்கு ஆரம்ப சேவை வகுதிக்கு உரித்தான பிசுக்கால் மேற்பார்வைத் தலைவி பதவிகள் 16 மற்றும் பிசுக்கால் பியன் பதவிகள் 10 இற்கு ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமை.
- அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களில் காணப்படுகின்ற துரிதமாக நிரப்பப்பட வேண்டிய சாரதி பதவி வெற்றிடங்கள் 08 இற்கு சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்.

3. இதுவரை காலம் நீதிமன்றங்களில் சேவையாற்றி வருகின்ற அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கும் முறையியல் காணப்படவில்லை என்பதுடன்,அலுவலக சிற்றூழியர் பதவிகளின் உள்ளக இடமாற்றத்துக்கு உள்ளக இடமாற்றல் நடவடிக்கைமுறைக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு மேற்படி பதவி தொடர்பான வருடாந்த இடமாற்றங்கள் 90 மேற்கொள்ளப்பட்டமை.

4. இதுவரை காலம் நீதிமன்றங்களில் சேவையாற்றிய அலுவலர்களுக்கு இடமாற்றல் வழங்கும் முறையியல் காணப்படவில்லை என்பதுடன், நீதிமன்றங்களில் சேவையாற்றும் கட்டளை சேவகர், நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர், பிசுக்கால் பியன், பிசுக்கால் நம்பிக்கைப்பொறுப்பாளர் தாய்பியன் பெண் பொறுப்பாளர் ஆகிய பதவிகள் தொடர்பில் முதலில் வருடாந்த இடமாற்றல் கொள்கையொன்றை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினூடாக அங்கீகரித்துக் கொள்ளல் கட்டளை சேவகர்கள் 118 பேர், நீதிமன்ற பாதுகாவலர்கள் 67 பேர், பிசுக்கால் பியன்மார் 20 பேர்,

பிசுக்கால் நம்பிக்கைப் பொறுப்பாளர் தாய்மார் 19 பேருக்கு வருடாந்த இடமாற்றம் பெற்றுக் கொடுத்தமை.

5. நீதிமன்றங்களில் காவல் கடமைக்காக சேவையில் ஈடுபடுத்தும் காவலாளி மற்றும் நீதிமன்ற பாதுகாவலர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்துவது தொடர்பாக நீதிமன்றங்களில் பல்வேறு சிக்கல்கள் நிலவுகின்றமை அவதானிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அது தொடர்பில் தகவல்களை சேகரிப்பதற்று புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டமை. (நீ.அ.1/2008(i))

6. அமைச்சு அலுவலர்களை மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை செலுத்துவது தொடர்பாக உள்ளக சுற்றறிக்கைகள் 02 வெளியிடப்பட்டமை. (நீ.அ.8/2022) மற்றும் (நீ.அ. 03/2022)

7. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை அங்கீகரிப்பதற்கு குழுவொன்றை நியமனம் செய்தல் மற்றும் மேற்படி குழுவின் தீர்மானத்திற்கு அமைய மேற்படி அலுவலர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை அங்கீகரித்தல்.

8. நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாயசபைகளினால் வெளியிடப்படுகின்ற சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களை திருத்தம் செய்வது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு குழுவொன்றை நியமனம் செய்தல் மற்றும் மேற்படி குழுவின் சிபாரிசு செய்யப்பட்ட கட்டணங்கள் தொடர்பில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு சம்பளங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

9. வழக்கு விசாரணைகளின் வழக்கு அறிக்கைகள் மற்றும் கற்புல / செவிப்புல ஒளிப்பதிவுகளின் டிஜிரல் பிரதிகளை வெளியிடுவது தொடர்பில் ஏற்புடைய கட்டணங்கள் சம்பந்தமாக சகல நீதிமன்றங்களையும் விழிப்புணர்வூட்டுவதற்காக நீ.அ.சு. 06/2022 வெளியிடப்பட்டமை.

10. ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகத்தின் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்ய அங்கீகாரம் பெற்றுக் கொண்டமை.

11. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் மொழிபெயர்ப்பாள் பதவிக்கு (MN 04) ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைமுறையை அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல், நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

12. இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரத்துக்காக நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

13. தொழில் நியாயசபைகளின் செயலகத்தின் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த சுருக்கெழுத்தாளர் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்ய அங்கீகாரம் வழங்குதல், கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த சுருக்கெழுத்தாளர்கள் 14 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கியமை.

14. தொழில்நியாய சபைகளின் செயலகத்தின் வருடாந்த இடமாற்றல்கள் 2023 ஐ அங்கீகரித்தல், சுருக்கெழுத்தாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல்.

15. நீதிச் சேவைகள் ஆணைக்குழு, நீதிமன்றம் சாராத அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிறுவகம், குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபைக்கு நி.பி. 71 இன் பதவிகள் (07) ஐ அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

16. சட்ட மாஅதிபர் திணைக்கள்திற்கு சட்டத்தரணிகள் 50 பேரை ஆட்சேர்ப்புச் செய்ய அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன், இவர்களில் 25 பேரை 2022 ஆம் ஆண்டிலும் எஞ்சிய சட்டத்தரணிகள் 25 பேரை 2023 ஆம் ஆண்டிலும் ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த ஆண்டுக்காக 24 பேரை

நியமனம் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

17. இழப்பீட்டுக்கான அலுவலகம், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவ சபைக்கு தவிசாளர்கள் /உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

18. 2022 ஆம் ஆண்டுக்கு அபிவிருத்தி அலுலவர் நியமனங்கள் 210 அமைச்சுக்கு பெறப்பட்டதுடன், இவர்களில் 137 பேர் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

19. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரிக்கைகள் 30 கிடைத்துள்ளதுடன், அதற்குப் பதிலளிக்கப்பட்டுள்ளதுடன், 04 மேன்முறையீடுகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

20. அமைச்சுக்கு நிதிக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் தொடர்பில் முதல் பதிவு ஆணவங்களில் முழுமையான உரித்தை நீக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து இந்த அமைச்சுக்கு கொண்டுவரப்பட்டுள்ள வாகனங்களை இந்த அமைச்சின் பெயருக்கு சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

21. 2022 ஆம் ஆண்டு வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104 விசாரணை நடவடிக்கைகள் சுமார் 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற நிருவாக செலவுத்தலைப்பு தொடர்பில் மோட்டார் வாகனங்களில் இடம்பெற்றுள்ள விபத்துக்கள் தொடர்பாக நி.பி.104 விசாரணை நடவடிக்கைகள் சுமார் 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்திற்கு உரித்தான அகற்றலுக்கு ஒதுக்கப்பட்ட போதும் ஏலத்தில் விற்பனை செய்யப்படாதுள்ள மூன்று வாகனங்களை உயர் கல்வி தொழில்நுட்பவியலை கற்கும் மாணவர்களின் பயனுக்காக பெற்றுக் கொடுக்க அமைச்சு தலையீட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை.

22. 2022 ஆம் ஆண்டில் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் எஞ்சாதவாறு புதுப்பித்தல்கள் மற்றும் சேர்விஸ் பணிகளை நிறைவேற்றல். நீதிமன்ற நிருவாக செலவுத்தலைப்புக்கு 2022 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் எஞ்சாதவாறு புதுப்பித்தல்கள் மற்றும் சேர்விஸ்களை செய்தல்.'

### 3.2.4. எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பணிகள்

1. சட்டவரைஞர் திணைக்களத்தில் காணப்படுகின்ற சம்பள நிலைகளை திருத்தம் செய்தல் மற்றும் மேற்படி திணைக்களம்சார் கட்டமைப்பை மீளமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. அமைச்சினால் நீதிமன்றங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் தாபன நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைக் கோருவதற்கு மற்றும் சகல நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டிய கடிதங்களை சமர்ப்பிப்பதை அமைச்சின் இணையத்தளம் ஊடாக information Portal ஒன்று வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

3. நீதிமன்றங்களில் கடமையாற்றுகின்ற அலுவலர்களின் பதவியணி தகவல்களை ஒன்லையின் முறையியலுக்கு அமையப் பெற்றுக் கொள்வதற்கு முறைமையொன்றை தயார் செய்வதற்கு திட்டமிடல்.

## 3.3. திட்டமிடல் பிரிவு

### 3.3.1 திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள்

திட்டமிடல் பிரிவின் மூலம் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய திட்டங்களை அறிந்துகொள்ளுதல், முன்னேற்ற நிலை பற்றிய சுருக்கம் மற்றும் மேற்பார்வை என்பன செய்யப்படுகின்றன.

- நீதித் துறையுடன் தொடர்புடைய செயற்திட்டங்களை அடையாளம் காணுதல்
- செயற் திட்டங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல்
- வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற செயற்திட்டம் தொடர்பான கருத்துக்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல்
- புதிய செயற் திட்டங்கள் தொடர்பாக ஆரம்ப அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து முன்வைத்தல்
- அமைச்சின் அபிவிருத்திச் செயற் திட்டங்களை அரச முதலீட்டுத் திட்டங்களுக்குள் உட்படுத்துதல்
- அமைச்சு மற்றும் நீதிமன்ற நிர்வாகச் செலவுத் தலைப்புக்களுடன் தொடர்புடைய நிதி வரவு செலவுத் திட்டங்களை முன்வைத்தல்
- வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல்களின் பொருட்டு வரவு செலவுத் திட்ட கருத்துக்களை முன்வைத்தல்
- முன்னேற்ற நிலை பற்றிய சுருக்கங்களை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்
- அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து வரவு செலவு விவாதங்களின் பொருட்டு முன்வைத்தல்
- அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்
- அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் வருடாந்த அறிக்கையின் பொருட்டு தேவையானவிடத்து அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்
- நீதித்துறையுடன் இணைந்த, முறைமையான செயற்பாட்டுத் திட்டங்களைத் தயார்படுத்துதல்
- அபிவிருத்தித் திட்டங்களின் பொருட்டு மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி சங்கங்களைத் தொடர்புபடுத்துதல்
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற் திட்டங்களை பின்தொடரல் செய்தல்
- நீதிமன்ற வழக்குகள் தொடர்பான புள்ளி விபரங்களைச் சேகரித்து வருடாந்த புள்ளிவிபர அறிக்கையினைத் தயாரித்தல்
- பாராளுமன்ற ஆலோசனை சபையின் பொருட்டு பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல்

### 3.3.2 திட்மிடல் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை

#### அ) நீதித் துறையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் மூன்று வருட அபிவிருத்தித் திட்டமிடலை அமுல்படுத்துதல்

நீண்ட காலங்களாக இலங்கை நீதி மன்றங்களில் வழக்குகள் நிறைந்து காணப்படுவதோடு, அத்தகைய வழக்குகளைத் தீர்ப்பதற்கும் நீண்ட காலங்கள் எடுக்கின்றன. 2022.06.30 ஆம் திகதிக்கு இலங்கை நீதி மன்றங்களில் தீர்க்கப்படாது எஞ்சியிருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை 1,094,912 ஆகும்.

இத்தகைய அதிக எண்ணிக்கையிலான வழக்குகளைத் தீர்ப்பதற்கு 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் ஒரு மில்லியனுக்கு 15 ஆகக் காணப்பட்ட அதேவேளை, தற்போதைய நிலையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நீதிபதிகளின் பதவிப் பிரமாணத்தோடு இணைந்து 18 வரையுமாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், இதனைச் சர்வதேச நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மிகவும் குறைந்த வீதமாகக்

காணப்படுகின்ற அதேவேளை, இலங்கையானது சர்வதேசத் தர நியமங்களின் அடிப்படையில் கீழ் மட்ட நிலைமைக்குச் செல்வதற்குச் சில விசேட காரணங்களும் காணப்படுகின்றன. வழக்குகளைத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் செல்வது வெளிநாட்டவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை அதைரியப்படுத்துகின்றது.

கடந்த ஐந்து வருடங்களுக்குள் டிசம்பர் 31 வரை மற்றும் 2022.06.30 ஆம் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டியவ வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:




அவ்வாறே 2022.06.30 ஆம் திகதி வரை தீர்க்கப்பட வேண்டிய ஒவ்வொரு நீதிமன்றங்களுக்குமான வழக்குகளின் எண்ணிக்கை வருமாறு:



இதனடிப்படையில் கடந்த காலங்களில் காணப்பட்ட பல்வேறு நிலைமைகளின் கீழ் கோவையிடப்படும் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் நிறைவுறும் வழக்குகளின் எண்ணிக்கை என்பனவற்றில் வீழ்ச்சியுற்ற நிலையானது காணப்படுவதோடு, தீர்ப்பதற்குக் காணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற ஒரு நிலை காணப்படுவதையும் கீழ்வரும் வரைபின் மூலம் கண்டுகொள்ளலாம்.




**2022 ஆம் ஆண்டின் அரையாண்டு வரையான காலப் பகுதியில் நீதிமன்றங்களில் ஒன்றுசேர்க்கப்பட்ட தகவல்களின் சாராம்சம் வருமாறு:**

| **நீதிமன்றங்கள்** | **எண்ணிக்கை** | **நீதிமன்ற மண்டபம்** | **தீர்ப்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை** | **நீதிபதிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 01 | 04 | 5,236 | 17 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 01 | 10 | 3,506 | 20 |
| சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 22 | 22 | 7,030 | 90 |
| வர்த்தக நீதிமன்றம் | 01 | 04 | 8,018 | |
| விசேட மேல் நீதிமன்றம் | 02 | 02 | 03 | |
| மேல்நீதிமன்றம் (குற்றவியல்) | 34 | 43 | 30,030 | |
| மாவட்ட நீதிமன்றம் | 35 | 63 | 269,378 | 148 |
| மாவட்ட நீதவான் நீதிமன்றம் | 51 | 64 | - | |
| நீதவான் நீதிமன்றம் | 54 | 79 | 764,536 | 104 |
| சிறுவர் நீதவான் நீதிமன்றம் | 02 | 02 | 1,632 | |
| சுற்றுலா நீதவான் நீதிமன்றம் | 22 | 22 | * | - |
| தொழில் நியாய சபை | 39 | 39 | 5,543 | 26 |
| **மொத்த எண்ணிக்கை** | **264** | **354** | **1,094,912** | **405** |

* சுற்றுலா நீதவான் நீதிமன்றங்களின் வழக்கு எண்ணிக்கைகள் நீதவான் நீதிமன்றத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள'ளது.

நீதித்துறையில் நீண்ட காலம் காணப்படுகின்ற தாமதத்தினைக் குறைக்கும் நோக்குடன் நீண்ட காலத் திட்டம் ஒன்று 2020 ஆம் ஆண்டு விருத்தி செய்யப்பட்டது. இதனடிப்படையில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க நீதி நிர்வாகப் பொறிமுறை ஒன்றின் மூலம் நீதி ஆதிபத்தியத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு உபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.




எவ்வாறாயினும் நாட்டினுள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளின் கீழ் இத்திட்டத்தின் இலக்குகளை அடைவது மிகவும் பாரியதொரு சவாலாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் திட்டமிட்டவாறு வெற்றிகரமான நீதி மறுசீரமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இதனடிப்படையில் 2021ஆண்டு 12 சட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் 2022ம் ஆண்டில் 14 சட்ட மறுசீரமைப்புக்கள் உள்ளடங்கலாக இதுவரைக்கும் 26 சட்ட மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்ட வரைபுகள் திணைக்களத்தின் மூலம் மும்மொழிகளிலும் வடிவமைத்து அனுப்பிவைக்கப்பட்ட சட்ட வரைபுகளின் எண்ணிக்கை 196 ஆகும். (மேலதிக தகவல்கள் சட்டப் பிரிவு மற்றும் சட்ட வரைபுகள் திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளன)
- 40 வருடங்களின் பின்னர் மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் எண்ணிக்கையை 14 ஆக அதிகரிக்க முடிந்துள்ளதுடன் அவ்வாறே மாவட்ட நீதவான் நீதிமன்றத்திற்கும் 49 சட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 26 நீதிபதிகள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- மேல்நீதிமன்ற நடுத்தீர்ப்பு ஆசனம் இரண்டால் (2) அதிகரிக்கப்பட்டதோடு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நடுத்தீர்ப்பு ஆசனங்கள் நான்கால் (4) அதிகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, மேலதிக வர்த்தக நீதிமன்றம் ஒன்றும் மாகாண உயர் நீதிமன்றம் ஒன்றும், புதிய மாவட்ட நீதிமன்றங்கள் இரண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகள் ஒரே இடத்தில் தீர்க்கப்பட்ட மாவட்ட நீதவான் நீதிமன்றங்கள் 10 இற்கு புதிய நீதவான் ஒருவரை நியமித்து குற்றவியல் வழக்குகள் வேறாகவும் சிவில் வழக்குகள் வேறாகவும் விசாரிக்கப்படும் நீதிமன்றங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, சுழற்சி முறை நீதிமன்றங்கள் நான்கு (4) நிரந்தர நீதிமன்றங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- அடிப்படை வசதிகளை அதிகரித்தல் தொடர்பான முன்னேற்ற அறிக்கை தொடர்பான பொறியியல் பிரிவின் செயற்பாடுகளின் கீழ் தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளன.
- பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று வழிகளை வலுப்படுத்துதல் தொடர்பாக இணக்க சபை ஆணைக்குழு மற்றும் கடன் இணக்க சபைத் திணைக்களம் என்பவற்றின் கீழ் தகவல்கள் காட்டப்பட்டுள்ளன.

  நாட்டின் பொருளாதார நிலைமை வழமைக்கு திரும்பும் பட்சத்தில் மீண்டும் மீளாய்வு செய்து திருத்தம் செய்யப்பட்ட திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆ) **செயற்பாட்டுத் திட்டத்தினை முன்வைத்தல்**

- 2022 ஆம் வருடத்துக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயார்படுத்தி 2022.02.22 ஆம் திகதி அதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.
- இவ்வமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் ஒதுக்கீடுகளை பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைத்து அதன்பொருட்டு மாதாந்தச் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**இ) வரவு** செலவுத் திட்டத்தை முன்வைத்தல்

2022 ஆம் வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தின் பொருட்டு கட்டட நிர்மாணங்களின் மிகப் பெரிய அளவிலான திட்டங்கள் மற்றும் சிறிய அளவிலான திட்டங்களை கணக்குப் பிரிவுக்கு ஒப்படைப்பதற்கு பொறியியல் பிரிவுடன் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.

ஈ) **முன்னேற்ற அறிக்கையைத் தயார்படுத்துதலும் அதனை முன்வைத்தலும்**

- ஒவ்வொரு மாதமும் அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சி உள்ளடங்கலாக 9 அறிக்கைகள் செயற் திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு காலாண்டுகளுக்குமாக ரூபா 100 மில்லியனை விடவும் அதிகமான செயற் திட்டங்களின் அறிக்கை அடங்கலான 3 அறிக்கைகள் செயற் திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சு மற்றும் அத்தோடு இணைந்த நிறுவனங்களின் மூலதனச் செலவுகளுடன் தொடர்புடைய காலாண்டு அறிக்கைகள் மூன்றினைத் தயார்படுத்தியமை

உ) **முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்**

- நீதி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களின் செயற் திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களைத் தாயர்படுத்தும்போது மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகக் காலாண்டு அடிப்படையில் கலந்துரையாடப்பட்டதோடு, இரண்டாவது காலாண்டின் பொருட்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் 2022.09.05 ஆம் திகதி இடம்பெற்றது.
- நீதி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்ச்சியான கூட்டங்கள் இடம்பெற்றன.
- நீதி அமைச்சுக்கு சொந்தமான செலவுத் தலைப்புக்களுடன் தொடர்புடைய செலவு விபரங்கள் தொடர்பான பொறுப்பு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் முன்னேற்றம் தொடர்பாக மாதாந்த முன்னேற்ற மீளாய்வு தொடர்பான 6 கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது.

**ஊ**) அபிவிருத்திச் செயற் திட்ட மீளாய்வுகள்

**மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அளவலான செயற்திட்டங்கள் (ரூபா மில் 100ற்கும் அதிகமான திட்டங்கள்)**

**தற்போது செய்துவருகின்ற பெரிய அளவிலான வேலைத்திட்டம்**
**(30 செப்டம்பர் 2022 வரை)**



**ஊ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அறிக்கை சமர்பித்தல்**

கம்பஹா, குருநாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புடன் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மூலதன முதலீட்டு வேலைத் திட்டங்களில் உள்ளடக்கப்படும் அனைத்து அபிவிருத்தி முன்னேற்றங்களையும் காலாண்டு அடிப்படையில் முன்வைக்கின்றேன்.

எ) **ஆலோசனைச் சபைக் கூட்டம் நடாத்துதல்**

திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு பிரதான செயற்பாடாகக் காணப்படுவது, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசனை சபைக் கூட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதாகும். இதனடிப்படையில் இவ்வருடம் மூன்றாவது காலாண்டுக் காலப் பகுதியில் அமைச்சின் ஆலோசனை சபைக் கூட்டங்கள் 05 நடாத்தப்பட்டன.

இதனடிப்படையில் கூட்டங்களின் முன்னேற்ற விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| கருத்திற் கொள்ளப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை | - | 17 |
| கருத்திற் கொள்ளப்பட்ட வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | - | 06 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துத் தெரிவிப்பு எண்ணிக்கை | - | 01 |

இக்கூட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

ஏ) வருடாந்த செயற் திறன் அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பவற்றைத் தயாரித்தல்

- 2022 முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- 2021 வருடாந்த செயற் திறன் அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**ஐ) தகவல் அறிந்து கொள்ளும் சட்டம்**

2016 ஆம் அண்டு 16 ஆம் இலக்க தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டத்திற்கு ஏற்ப முன்வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒ) **மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியை மீளமைக்கும் செயற்திட்டம்**

உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியை விரிவாக மீளமைப்புச் செய்யும் செயற் திட்டத்தின் பொருட்டு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி சீன மக்கள் குடியரசு மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் இருகட்சி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த செயற் திட்டம் பிரதான நன்கொடைச் செயற் திட்டமாகக் காணப்படுகின்ற அதேவேளை, இச்செயற் திட்டத்தின் முழுச் செலவு 240 மில்லியன் யுவான்களாகும்.

செயற் திட்டம் தொடர்பாக மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் முகாமைத்துவச் சபை மற்றும் இவ்வமைச்சின் உறுப்பினர்கள் அடங்கிய தொழிநுட்பக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அக்குழு சீன மக்கள் குடியரசின் செயற் திட்ட முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட ஆரம்பத் திட்டம் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, மின்நிலைமாற்றி கொள்வனவு செய்வதன் பொருட்டு தேவையான கொள்முதல் செயற்பாடுகள் இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே, மீளமைப்பு செயற் திட்டத்தின் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்துகொள்ள கொள்முதல் செயற்பாடுகள் சீன மக்கள் குடியரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு இவ்வருட இறுதியில் மீளமைப்புச் செயற் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஓ) **செயற் திறன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்**

நீதி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களின் செயற்திறன் விருத்தி அறிக்கைகளை முன்வைக்கும் வளர்ச்சி அடிப்படை.

| திணைக்களம் | ஆண்டு | பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | ஏனையவை |
|---|---|---|---|
| நீதி அமைச்சு | 2021 | 2022.08.02 | |
| சட்டமா அதிபர் திணைக்களம் | 2020 | 2021.12.07 | |
| | 2021 | பாராளுமன்றத்திற்கு இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை | தயாரிக்கப்படுகின்றது |
| சட்ட வரைபுத் திணைக்களம் | 2021 | 2022.08.10 | |
| சட்ட உதவிகள் ஆணைக்குழு திணைக்களம் | 2021 | 2022.09.21 | |
| அரச பகுப்பாய்வுத் திணைக்களம் | 2021 | **2022.10.28** | |
| கடன் இணக்க சபைத் திணைக்களம் | 2020 | 2021.11.16 திகதியிடப்பட்ட கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது | ஆனால் பாராளுமன்றத்திற்கு இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை |
| | 2021 | பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க அச்சுப் பதிவு வேலைகள் இடம்பெறுகின்றன | |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 2021 | 2022.06.29 | |
| மக்கள் நன்னடத்தைத் திணைக்களம் | 2020 | 2021.10.15 | |
| உயர் நீதிமன்றப் பதிவாளர் காரியாலயம் | 2021 | **2022.10.19** | |

**ஔ) அமைச்சின் கீழ் காணப்படும் அரச வர்த்தக நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை முன்வைக்கப்படும் வளர்ச்சி**

| நிறுவனம் | வருடம் | அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்ற திகதி | பாாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | ஏனையவை |
|---|---|---|---|---|
| இலங்கை நீதிபதிகளின் நிறுவனம் | 2017 | 2022.02.15 | 2022.07.25 | |
| | 2018 | அமைசச்ரவை விஞ்ஞாபனத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | | 2019,2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன |
| மியுயர் | **20**20 | 2022.02.15 | 2022.03.18 | |

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டடத்தொகுதி முகாமைத்துவச் சபை | 2021 | அறிக்கைகளை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | | |
| சட்ட வழங்கல் ஆணைக்கழு | 2020 | 2022.06.21 | 2022.08.22 | |
| | 2021 | | | அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள் ளது |
| குற்றவாளிகள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் அதிகார சபை | 2020 | 2021.12.21 | 2022.08.03 | |
| | 2021 | | | அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள் ளது |
| இழப்பீட்டுக்கான அலுவலகம் | 2017 | 2021.08.03 | 2022.06.24 | |
| | 2018 | அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | | |
| | 2019 | | | |
| | 2020 | | | |
| | 2021 | | | தயாரிக்கப்பட்டு வருகின்றன |
| காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் | 2020 | 2022.02.15 | | அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள் ளதோடு பாராளுமன்றத்திற்கு அனுப்பவதற்கு பிரதிகள் தயாரிக்கப்படுகின்ற ன |
| | 2021 | அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | | அறிக்கை தயார்படுத்தப்பட்டு வருகின்றது |

## 3.4. அபிவிருத்திப் பிரிவு

### 3.4.1. அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பான சுருக்கம்

1. நாடு பூராகவும் அமையப்பெற்றிருக்கும் நீதிமன்றங்கள், நீதி அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்கள், மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை அடையாளம் காணுதல், நிர்ணயித்தல், உடமையாக்கிக் கொள்ளுதல் மற்றும் அத்தியாவசிய தேவைப்பாடுகளின் பொருட்டு கையகப்படுத்திக்கொள்ளுதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
2. கட்டடங்கள் அமைக்கப்படாத நீதிமன்றங்கள், அலுவலகங்கள், நீதவான்களுக்கான விடுதிகள் என்பவற்றின் பொருட்டு பொருத்தமான கட்டடங்களைக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்
3. நீதி அமைச்சுக்கு உடமையாக்கிக் கொள்ளப்பட்ட அல்லது கையகப்படுத்திக்கொண்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து அவற்றைக் கணக்கியல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.
4. நீதிமன்றங்களிலே காணப்படுகின்ற வழக்கு விசாரணை தொடர்பிலான அதிக நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்ளவும், ஒன்றிணைந்ததாகக் காணப்படுகின்ற நீதிமன்றங்களை வேறுபடுத்தவும் தேவையான இடவசதிகள் இல்லாதவிடத்து, அதன்பொருட்டு பொருத்தமான கட்டடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அத்தகைய கட்டடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### 3.4.2. நீதி அமைச்சின் கீழ் காணப்படும் நீதிமன்றங்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுக்குத் தேவையான காணிகளை அடையாளம் காணுதல், அவற்றை தீர்த்து வைத்தல், உடமையாக்கிக் கொள்ளுதல் மற்றும் தேவையின் பொருட்டு கையகப்படுத்திக்கொள்ளும் செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| காணிகளை உடமையாக்கிக் கொள்ளும் அல்லது கையகப்படுத்திக்கொள்ளும் செயற்பாடு – முழுக் காணிகளின் எண்ணிக்கை | 302 | |
| முழுமையான உடமையாக்கிக் கொள்ளும் செயற்பாடுகள் நிறைவுற்றிருக்கும் காணிகளின் எண்ணிக்கை | | 76 |
| இதுவரையில் கையகப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் காணிகளின் எண்ணிக்கை | | 203 |
| • தேவையின் பொருட்டு புதிதாகக் காணிகளை அடையாளம் காணப்பட்டிருக்கும் அளவு | 35 | |
| • பிரதேச செயலகம் / மகாவலி அதிகார சபை மூலம் காணி தொடர்பான அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் | 18 | |
| • காணி தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறாதபோது - காணியினை அளந்து எல்லைகள் குறிப்பிடப்பட்ட நிலவரைபடத்தை வழங்குமாறு பிரதேச செயலகம் / மகாவலி அதிகார சபைக்கு அறிவித்தல் | 22 | |
| • பிரதேச செயலகம் / மகாவலி அதிகார சபையின் மூலம் அளத்தல் கட்டளை விடுக்கப்பட்டதன் பின்னர் முற்பணக் கட்டணம் செலுத்துதல் ( குறித்த நீதிமன்றம் / அமைச்சின் மூலம்) | 05 | |
| • காணி தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் | 85 | |
| • பிரதேச செயலகம் / மகாவலி அதிகார சபையின் மூலம் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உடமையாக்கிக் கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் | 09 | |
| • பிரதேச செயலாளரின் மூலம் குறித்த அனுமதியோடு மாகாணக் காணி ஆணையாளரின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்தல் | 05 | |
| • பிரதேச செயலாளர் மூலம் மாகாணக் காணி ஆணையாளரின் பரிந்துரையுடன் காணி ஆணையாளருக்கு குறித்த விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் | 16 | |
| • காணி ஆயையாளரின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதன் பின்னர் காணி உடமையாக்கிக் கொள்வதன் பொருட்டுத் | 08 | |

| | | |
|---|---|---|
| திகதியொன்றை வழங்குதல் - பிரதேச செயலாளர் | | |
| கையளிப்புச் செய்யும் செயற்பாடு இடம்பெறுகின்ற காணிகளின் எண்ணிக்கை | | 23 |
| காணிப் பரிமாற்றம் | | 04 |
| ஏனையவை | | 07 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை அடையாளம் காணுதல், பிரச்சனைகளைத்தீர்த்து வைத்தல், உடமையாக்கிக் கொள்ளுதல் மற்றும் தேவையின் பொருட்டு கையகப்படுத்திக்கொள்ளுதல் ஆகிய செயற்பாடுகளுக்குச் சமாந்தரமாக அமைச்சுக்கு சொந்தமான காணிகள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்துல் செயற்பாடுகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் நீதிமன்ற வலயங்கள 34 இற்குட்பட்ட இலங்கை முழுவதும் காணப்படுகின்ற அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் விடுதிகள் என்பன அமையப்பெற்றிருக்கும் காணிகள் தொடர்பில் தகவல் தொகுதி ஒன்றைத் தயார்ப்படுத்தி அவற்றை இற்றைப்படுத்துவதான செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துதல்.

## 2. புதிய நீதிமன்றங்கள் மற்றும் விடுதிகளை அமைப்பதற்குக் காணியினை கையகப்படுத்திக் கொள்ளுதல் (23 காணித் துண்டுகள்)

01. ‘‘நீதிமன்றச் சதுக்கம்’’ செயற் திட்டத்துக்காக கொழும்பு பீ.சீ.சீ. (டீசவைளைா ஊநலடழெ ஊழசிழசயவழைெ) நிறுவனத்துக்குச் சொந்தமான இடத்தின் ஒரு பகுதியினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

‘‘நீதிமன்றச் சதுக்கம்’’ செயற்திட்டத்திற்காக கொழும்பு மீயுயர் நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையில் அமையப்பெற்றிருக்கும் பீ.சீ.சீ. கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியின் 6 ஏக்கர் அளவுடைய காணியினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் வெல்ல வீதி பிரதேச செயலாளரிடமிருந்து காணியிணை அபிவிருத்தி செய்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு ‘‘நீதிமன்றச் சதுக்கம்’’ என்னும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரையில் காணி கையகப்படுத்திக்கொள்ளும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இழப்பீட்டு உரிமைப் பரீட்சிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக காணி கையகப்படுத்திக்கொள்ளும் சட்டத்தின் 10 (ை) (அ) பிரிவின் கீழ் இழப்பீடு செலுத்துவதற்காக அரச மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

02. காலி புதிய நீதிமன்றத் தொகுதியில் அமையப்பெற்றிருக்கும் காணியோடு இணைந்ததாகக் காணப்படும் காணித்துண்டுகள் மூன்றினை கையகப்படுத்திக்கொள்ளுதல்.

காலி புதிய நீதிமன்றத் தொகுதியில் அமையப்பெற்றிருக்கும் காணியோடு இணைந்ததாகக் காணப்படும் 3 ஏக்கர் அளவுடைய காணித்துண்டுகள் மூன்றினை நீதிஅமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, தற்போதைய நிலையில் காணியினைக் கையகப்படுத்திக் கொள்ளும் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் காணிகளைக் கையகப்படுத்திக்கொள்வதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகள் தொடர்பில் சோதனைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

03. களுத்துறை புதிய நீதிமன்றத்தை நிர்மாணிப்பதற்கான காணியினைக் கையகப்படுத்திக்கொள்ளுதல்

களுத்துறை புதிய நீதிமன்றத் தொகுதியினை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள களுத்துறை பிரதேச செயலகப் பிரிவின் கட்டுகுருந்தை என்னும் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் 02 ஏக்கர்,

02 றூட், 20.66 பேர்ச் (1.064 ஹெக்டயர்) பரப்பளவு கொண்ட நிலப்பகுதியினை நீதி அமைச்சு கையகப்படுத்தியுள்ளது. தற்போதைய நிலையில் காணியினைக் கையகப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அதனது 9ஆவது பிரிவின் அடிப்படையில் இழப்பீட்டு உரிமை தொடர்பான பரீட்சிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணியினைக் கையகப்படுத்தும் சட்டத்தின் 10(1)(அ) பிரிவின் அடிப்படையில் அறிவித்தல் வெளியிடப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதோடு, இழப்பீடு செலுத்தும் செயற்பாட்டின் பொருட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி அது தொடர்பான உத்தரவைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. நாரம்மலை நடமாடும் நீதவான் நீதிமன்றம் அமையப்பெற்றிருக்கும் காணியினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

நாரம்மலை நடமாடும் நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் றூட்01, பேர்ச் 38.67 அளவுடைய இடப்பகுதியை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக்கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடானது நி.ஓ. 53 இன் கீழ் காணி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் கூட்டு ஒதுக்கீட்டிலிருந்து செலுத்தவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு, கையகப்படுத்துதல் தொடர்பான திட்டம் காணி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

05. நாரம்மலை நடமாடும்நீதவான் நீதிமன்றத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் காணியின் ஒரு பகுதியினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

நாரம்மலை நடமாடும் நீதவான் நீதிமன்றத்தினை நிலையான ஒரு நீதிமன்றமாக அமைக்கும்போது அந்நீதிமன்றம் அமையப்பெற்றிருக்கும் காணியோடு இணைந்ததாக அமைந்திருக்கும் தனியார் காணி ஒன்றின் 80 பேர்ச் அளவுடைய நிலப்பகுதியினை நீதிஅமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதனடிப்படையில் நி.ஒ 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

06. பத்தேகமை நீதிமன்றத்தை விரிவுபடுத்தவதற்காககாணித் துண்டு ஒன்றை கையகப்படுத்திக்கொள்ளுதல்

பத்தேகதை நீதிமன்றத்தை விரிவுபடுத்தவதற்காக 02 ஏக்கர் அளவுடைய காணித் துண்டு ஒன்றை நீதிஅமைச்சுக்கு கையகப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

07. கல்பிட்டி நடமாடும் நீதவான் நீதிமன்றம் அமையப்பெற்றிருக்கும் காணியினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்ளுதல்

கல்பிட்டி நடமாடும்நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் 01 ஏக்கர்,01 றூட், 22பேர்ச் அளவுடைய காணித் துண்டானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதாகக் காணப்படுவதனால் அதனை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனடிப்படையில் நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டடுள்ளது.

08. மீரிகம மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தினை அமைப்பதற்கான காணியினை கையகப்படுத்திக் கொள்ளுதல்

மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் முருகம்பல கிராமத்தில் அமையப் பெற்றிருக்கும் கஹட்டகஹகுருந்துவத்த என்னும் பெயருடைய இடத்தின் 3 ஏக்கர் அளவுடைய நிலப் பகுதியினை கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு நீதி அமைச்சுக்கு வழங்க நியமிக்கப்பட்டுள்ள காணிப் பகுதியினை பிரித்துக் காட்டும் நில வரைபடத்தை பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

09. வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணியினை கையகப்படுத்திக் கொள்ளுதல்.

வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்துக்காக புதிய கட்டடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்குத் தனியார் காணி ஒன்றின் ஒரு பகுதியினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்ட 1 பரப்பு, 38.28 பேர்ச் அளவினைக் காட்டும் நில வரைபடத்தினை பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

10. தங்கல்ல நீதிமன்றக் கட்டடத் தொகுதியினுள் அமையப் பெற்றிருக்கும் காணியினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்.

தங்கல்ல நீதிமன்ற கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காணி ஹம்பாந்தோட்டை மாவட்ட ஆடைக் கைத்தொழிலாளர்களின் கூட்டுறவு கிராமிய சங்கத்திற்கு சொந்தமாகக் காணப்படுவதுடன் அதனைத் தென்மாகாண அபிவிருத்தி ஆணையாளர் மூலம் ஏலமிடப்பட்டபோது வரையறுக்கப்பட்ட ஹம்பாந்தேட்ட மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் காணியினைக் கையகப்படுத்திக் கொள்வதன்பொருட்டு காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

11. உடுகம மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு இரண்டு காணித் துண்டுகளைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

உடுகம மாவட்ட நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் காணி குறிப்பிடப்பட்டிருக்கும் GA/NGD/2016/90 நில வரைபடத்தின் துண்டு இல. J மற்றும் K ஆகிய காணித் துண்டுகள் தனிப்பட்ட இரு காணித் துண்டுகளாகக் காணப்படுவதனால் அந்தந்தக் காணித் துண்டுகளினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதன் பொருட்டு நி. ஒ. 53 இன் கீழ் ஒதுக்கீட்டினைக் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக்காக வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

12. வலப்பனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

வலப்பனை நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் 2 றூட், 39.8 பேர்ச் அளவுடைய காணித் துண்டானது காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமானதாக அறிவிக்கப்பட்டிருப்பதனால் அந்தக் காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் நி. ஒ. 53 இன் கீழ் ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக்காக வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

13. வரக்காபொல மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

வரக்காபொல மாவட்ட நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் 4 ஏக்கர், றூட் 2, பேர்ச் 22 அளவுடைய காணித் துண்டானது காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமானது என அறிவிக்கப்பட்டிருப்பதனால் அந்தக் காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் அந்தக் காணியினைக் கையகப்படுத்திக் கொள்வதற்கு நி. ஒ. 53 இன் கீழ் ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக்காகக வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

14. பசறை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

பசறை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணிப்பதன் பொருட்டு காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமான 2 ஏக்கர் காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் நி. ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணியின் அண்ணளவான மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மூலம் மேற்படி காணித் துண்டின் அளவீட்டு நில வரைபடத்தை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

15. வெலிமட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

வெலிமட நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணிப்பதன் பொருட்டு காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமான 2 ஏக்கர் அளவுடைய காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் காணியினைக் கையகப்படுத்திக் கொள்ளும் சட்டத்தின் 9வது பிரிவின்கீழ் இழப்பீட்டு உரிமை தொடர்பில் பரீட்சிக்கப்பட்டு 10(1)அ பிரிவின் கீழ் காணியின் அண்ணளவான பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதோடு பிரிவு 17 இன்கீழ் இழப்பீட்டைச் செலுத்துவதற்கான குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16. நாலப்பிட்டி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பொருட்டு காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

நாவலப்பிட்டி மாவட்ட நீதவான் நீதிமன்றத்துக்குச் சொந்தமான கட்டடத் தொகுதி அமையப் பெற்றிருக்கும் 60 பேர்ச் அளவுடைய காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

17. அத்தனகல்ல மாவட்ட நீதவான் நீதிமன்றம் அமையப் பெற்றிருக்கும் காணியோடு இணைந்திருக்கும் காணித் துண்டு ஒன்றினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

அத்தனகல்ல மாவட்ட நீதவான் நீதிமன்றத்தை விரிவுபடுத்துவதன் பொருட்டு நீதிமன்றக் காணியோடு இணைந்ததாக அமையப் பெற்றிருக்கும் இலங்கை முதலீட்டு சபைக்குச் சொந்தமான காணியின் 1 ஏக்கர், 4.8 பேர்ச் அளவுடைய காணித் துண்டினை கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதன் பொருட்டு நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

18. கம்பளை நீதிமன்றக் கட்டடத் தொகுதியினை விரிவுபடுத்துவதன் பொருட்டு இணைக்கப்பட்டிருக்கும் காணித் துண்டு ஒன்றினைக் கையகப் படுத்திக் கொள்ளுதல்

கம்பளை நீதிமன்றக் கட்டடத் தொகுதியினை விரிவுபடுத்துவதன் பொருட்டு கம்பளை நகர சபைக்குச் சொந்தமான காணித் துண்டு ஒன்றை நீதி அமைச்சு பெற்றுக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் காணியினைக் கையகப் படுத்தும் சட்டத்தின் பிரிவு 6இன் கீழ் அடிப்படை நில அளவீட்டுத் திட்ட வரைபடத்தைத் திருத்துவதற்காக நில அளவீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அடிப்படை நில அளவீட்டுத் திட்ட வரைபடம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் காணியினைக் கையகப்படுத்திக் கொள்ளும் சட்டத்தின் பிரிவு 7 இன்கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## நீதிபதிகளுக்கான விடுதிகளை நிர்மாணிப்பதன் பொருட்டு

19. ரம்படகல்ல நீதவான் நீதிமன்ற நீதிபதியின் விடுதிக்கான காணியினைக் கையகப்படுத்திக்கொள்ளுதல்

ரம்படகல்ல நீதவான் நீதிமன்ற நீதிபதி அவர்களின் விடுதியினை நிர்மாணிப்பதன் பொருட்டு குருணாகல் மாவட்டம், ரிதீகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட ரிதீ விகாரைக்குச்

சொந்தமான 30.7 பேர்ச் அளவுடைய காணித் துண்டினை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் காணியினைக் கையகப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 2இன்கீழ் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு காணி அளவிடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

20. மாரவில பழைய நீதிபதி விடுதி அமையப் பெற்றிருக்கும் காணியின் ஒரு பகுதியினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்

மாரவில பழைய நீதிபதி விடுதி அமையப் பெற்றிருக்கும் காணி தனியாருக்குச் சொந்தமான காணி என அறிவிக்கப்பட்டிருப்பதால் 1 றூட், 24 பேர்ச் அளவுடைய அக்காணித் துண்டினைக் கையகப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பொருட்டு நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

21. பலப்பிட்டிய நீதிபதி விடுதி அமையப் பெற்றிருக்கும் காணியினை கையகப்படுத்திக் கொள்ளுதல்

2ஏக்கர், 2 றூட், 10.94 பேர்ச் அளவுடைய பலப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி, மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் விடுதி மற்றும் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் விடுதி ஆகியன அமையப் பெற்றிருக்கும் 3 காணித் துண்டுகளை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதன் பொருட்டு நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக காணியின் அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

22. தங்கல்ல நீதிமன்ற நீதிபதிகளின் விடுதிகளை நிர்மாணிக்கும் பொருட்டு காணியினை கையகப்படுத்திக் கொள்ளுதல்

தங்கல்ல மேல் நீதிமன்ற நீதிபதியின் விடுதி, குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி,மாவட்ட நீதிமன்ற நீதிபதி மற்றும் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆகியோரின் விடுதிகளை நிர்மாணிப்பதன் பொருட்டு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 2ரூட், 6.77 பேர்ச் அளவுடைய 3 காணித் துண்டுகளை நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதன் பொருட்டு நி.ஒ. 53 இன் கீழ் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

23. நீதித் துறையின் பொருட்டு பயிற்சி நிலையம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு கம்பஹா மேல் நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் ர்ஊ/26/17 உடன் தொடர்புடைய கம்பஹா மல்வான பிரதேசத்தில் அமையப் பெற்றிருக்கும் காணித் துண்டினைக் கையகப்படுத்திக் கொள்ளுதல்.

இலக்கம் m.g/17/1265/731/011-iv மற்றும் 2017.06.20 ஆம் திகதியை உடைய அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப இல 111/3, கங்கபட பார, மாப்பிட்டிகம கீழ் பிரிவு, மாப்பிட்டிகம, மல்வான எனும் முகவரியில் அமையப் பெற்றிருக்கும் 16 ஏக்கர், 1 ரூட், 8 பேர்ச் அளவுடைய விசாலமான காணியின் 4 ஏக்கர் நிலப் பகுதியினை நீதித்துறை சார்ந்த பயிற்சி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக நீதி அமைச்சுக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பொருட்டு காணியின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சனநெரிசல் மிக்க பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நீதிமன்றங்களை சனநெரிசல் அற்ற பிரதேசங்களில் நிர்மாணிப்பதற்கான செயற் திட்டம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் காணிகளை மாற்றீடு செய்யும் முறைமையின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்படும் நீதிமன்றங்களின் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்படுகின்ற காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளமையினால் அது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. அங்குனகொலபலச நீதிமன்றத்தினை மீள் நிர்மாணிப்புச் செய்தல்
2. குருணாகல் நீதிமன்றத்தினை மீள் நிர்மாணிப்புச் செய்தல்
3. மாவனெல்ல நீதிமன்றத்தினை மீள் நிர்மாணிப்புச் செய்தல்
4. அம்பாந்தோட்டை நீதிமன்றத்தினை மீள் நிர்மாணிப்புச் செய்தல்

**3.4.3. கட்டங்கள் அமைக்கப்படாத நீதிமன்றங்கள், நிறுவனங்கள், நீதிமன்ற விடுதிகள் என்பவற்றின் பொருட்டு கட்டடங்களைக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளுதல்.**

- நீதி அமைச்சினை மீளமைப்புச் செய்தல்
- சர்வதேச நடுத்தீர்ப்பு மையத்தினை நடாத்திச் செல்லுதல்
- குருணாகல் மாகாண குடியியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம்
- பூகொட மாவட்ட / நீதவான் நீதிமன்றம்
- தெல்தெனிய மாவட்ட / நீதவான் நீதிமன்றம்
- மொறவக்க மாவட்ட / நீதவான் நீதிமன்றம்
- நிரந்தர நீதிபதி மூவரடங்கிய மேல் நீதிமன்றம் (ட்ரயல் அட் பார்)
- வத்தளை தொழில் நியாய சபை
- மாத்தறை தொழில் நியாயசபை
- காலி தொழில் நியாய சபை
- இரத்மலானை தொழில் நியாய சபை
- பொரளை தொழில் நியாய சபை
- குருணாகல் தொழில் நியாயசபை
- தலவாக்கலை தொழில் நியாய சபை
- காலி கடன் இணக்க சபை
- இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் காணமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
- குருணாகல் கடன் இணக்க சபை

நீதிபதிகளின் பொருட்டு விடுதிகளைக் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளுதல் (விடுதிகள் 70).

| மாவட்டம் | தயார்படுத்தப்பட்டிருக்கும் குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | மேல் நீதிமன்றம்,குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளின் விடுதி | மாவட்ட நீதிபதி / மேலதிக மாவட்ட நீதிபதிகளின் விடுதி | நீதவான் நீதிமன்ற நீதிபதி / மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதிகளின் விடுதி | எண்ணிக்கை |
| கொழும்பு | 0 | 2 | 6 | 8 |
| அவிசாவளை | 0 | 0 | 1 | 1 |
| இரத்தினபுரி | 1 | 4 | 3 | 8 |
| கண்டி | 3 | 2 | 2 | 7 |
| நுவரெலியா | 1 | 2 | 1 | 4 |
| காலி | 1 | 1 | 0 | 2 |
| தங்கல்ல | 1 | 2 | 0 | 3 |
| குளியாப்பிட்டி | 0 | 0 | 2 | 2 |
| களுத்துறை | 0 | 2 | 1 | 3 |
| அநுராதபுரம் | 0 | 0 | 3 | 3 |
| கேகாலை | 0 | 4 | 1 | 5 |
| கம்பஹா | 0 | 4 | 2 | 6 |
| சிலாபம் | 0 | 4 | 0 | 4 |
| பாணந்துறை | 0 | 4 | 2 | 6 |
| மாத்தளை | 0 | 2 | 1 | 3 |
| மாத்தறை | 0 | 0 | 1 | 1 |
| குருணாகல் | 1 | 1 | 0 | 2 |
| பொலநறுவை | 0 | 2 | 0 | 2 |
| **மொத்தம்** | **8** | **36** | **26** | **70** |

**3.4.4. நீதி அமைச்சுக்கு உடமையாக்கிக் கொள்ளும் அல்லது கையகப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகள் நிறைவுற்றிருக்கும் காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீட்டுச் செயற்பாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

1. திஸ்ஸமகாராம மாவட்ட நீதவான் நீதிமன்றம்
2. பலபிட்டிய மாவட்ட நீதவான் நீதிமன்றம்
3. கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம்
4. மகியங்கனை மாவட்ட நீதவான் நீதிமன்றம்
5. இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி விடுதி
6. தெல்தெனிய மாவட்ட நீதவான் நீதிமன்றம்
7. கம்பளை மாவட்ட நீதவான் நீதிமன்றம்
8. நாவலப்பிட்டிய மாவட்ட நீதவான் நீதிமன்றம்
9. கம்பஹா மாவட்ட நீதவான் நீதிமன்றம்
10. கம்பஹா குடியியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம்
11. பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்றம்
12. அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம்
13. சம்மாந்துறை மாவட்ட நீதிமன்றம்
14. சம்மாந்துறை நீதவான் நீதிமன்றம்
15. கல்முனை மாவட்ட நீதவான் நீதிமன்றம்
16. கடுவெல மாவட்ட நீதவான் நீதிமன்றம்
17. இறக்காமம் காதி நீதிமன்றம்
18. மகர மாவட்ட நீதவான் நீதிமன்றம்
19. காலி புதிய நீதிமன்ற நிர்மாணிப்புக்கள் நடைபெறுகின்ற இடம்
20. களுவாஞ்சிக்குடி நடமாடும் நீதவான் நீதிமன்றம்
21. பலபிட்டிய நீதிபதி விடுதி அமைந்துள்ள காணித் துண்டு 03
22. திருகோணமலை நீதிமன்றத் தொகுதி
23. மாவனெல்லை நீதவான் நீதிமன்றம்

## 3.5. பொறியியற் பிரிவு

### 3.5.1. அறிமுகம்

வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கவாறு நியாயத்தை நிலைநாட்டுவதற்கு நீதிமன்றக் கட்டமைப்புக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுப்பது இந்த அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள முக்கியமானதொரு பொறுப்பாகும். அதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுப்பதும், காணப்படுகின்ற வசதிகளை மேம்படுத்துவதும், பேணிவதுவதும் பொறியியல் பிரிவின் முக்கிய செயற்பணியாகும்.

அதன் கீழ் புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தல், நீதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்தல், புதுப்பித்தல் மற்றும் பேணிவரும் நடவடிக்கைகள் போன்ற முக்கியமான பல செயற்பணிகள் இப்பிரிவின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பின் கீழ் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அ) அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் பிரதானமாக பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது,

- வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான நிர்மாணக் கருத்திட்டங்கள்
- வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் சிறியளவிலான கருத்திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் நிர்மாணக் கருத்திட்டங்கள்.
- வரவு செலவுத்திட்ட பிரேரணைகளுக்கு வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்பு மற்றும் மறுசீரமைப்புக் கருத்திட்டங்கள்.
- வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் மூலம் மறுசீரமமைப்பு செலவு விடயத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் ஏற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படும் புதுப்பித்தல் கருத்திட்டங்களாகும்.

இந்த ஆண்டின் கருத்திட்டங்களின் பொழிப்பு பின்வருமாறாகும்.

| | 2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய ஏற்பாடுகள் (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கு செலவினம் (ரூ.மி.) | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| பாரியளவிலான கருத்திட்டங்கள் | **1794.60** | **502.03** | **27.97%** |
| சிறியளவிலான நிர்மாண கருத்திட்டங்கள் | **140** | **63.74** | **45.53%** |
| மறுசீரமைப்புக் கருத்திட்டங்கள் | **600** | **308.27** | **51.38%** |
| வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் கீழ் | | | |
| செலவுத் தலைப்பு 110 – நீதி இல்லம் | **1365** | **643.29** | **47.13%** |
| செலவுத் தலைப்பு 228 - மூன்று வருடக் கருத்திட்டம் | **963** | **350.23** | **36.36%** |
| **மொத்தம்** | **4862.6** | **1867.56** | **38.41%** |

### 3.5.2. 2022.01.01 முதல் 2022.09.30 வரை ஆண்டில் நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டின் செலவினம் (ரூ.மி.) | குறிப்பு |
|---|---|---|---|
| ரம்படகல்ல நீதவான் நீதிமன்றத்தின் ஆவணக்காப்பகம், வழக்குத் தடயப் பொருட்கள் அறை, அலுவலகத்தைக் கொண்ட புதிய கட்டிடம் மற்றும் நீர்த் தாங்கிக்கோபுரம் | 14.57 | - | செலவாகியுள்ள தொகை ரூ.மி. 12.78 ஆகும். இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| பொத்துவில் மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்திற்கு வழக்குத் தடயப்பொருட்கள் அறை, நன்னடத்தை அலுவலகம், சட்ட உதவி அலுவலகம், சமுதாய சீர்திருத்த அலுவலகம் மற்றும் குடும்ப ஆலோசனை அலுவலகம் | 23.02 | 2.70 | செலவாகியுள்ள தொகை ரூ.மி. 22.68 ஆகும். இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| அக்கரைப்பற்று மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்திற்கு வழக்குத் தடயப்பொருட்கள் அறை, நன்னடத்தை அலுவலகம், சட்ட உதவி அலுவலகம், சமுதாய சீர்திருத்த அலுவலகம் மற்றும் குடும்ப ஆலோசனை அலுவலகம் | 21.89 | 0.49 | செலவாகியுள்ள தொகை ரூ.மி. 19.59 ஆகும். இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| நாஉல நீதவான் உத்தியோகபூர்வ இல்லம் | 14.18 | - | செலவாகியுள்ள தொகை ரூ.மி. 14.29 ஆகும். இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| நாவலப்பிட்டி நீதவான் உத்தியோகபூர்வ இல்லம் | 16.57 | - | செலவாகியுள்ள தொகை ரூ.மி. 16.47 ஆகும். இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. |



ரம்பொடகல்ல நீதவான் நீதிமன்றக் கட்டிடம்



அக்கரைப்பற்று மாவட்டநீதவான் நீதிமன்றக்கட்டிடம்



நாஉல நீதிபதி உத்தியோகபூர்வ இல்லம்



பொத்துவில் நீதிமன்றக் கட்டிடம்

**3.5.3. 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கருத்திட்டங்கள்**

தற்போது நிலவும் சவால்மிக்க பொருளாதார நிலைமைக்கு மத்தியில், இக்கருத்திட்டங்களை விலைகள் மாற்றமடைவதற்கு உட்பட்டு முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| கருத்திட்டம் | கருத்திட்டக் காலம் | ஒப்பந்த தொகை (ரூ.மி.) | 2021.12.31 ஆம் திரட்டிய செலவினம் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டுக்கு திருத்திய ஏற்பாடு (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டுககு செலவினம் (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் % | 2022.09.30 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| காலி நீதிமன்றக் கட்டிடத்தொகுதி எஞ்சிய பகுதி | 2020-2022 | 996.84 | 327.81 | 218.44 | 102.00 | 46.69% | 49% |
| இரத்தினபுரி நீதிமன்றக் கட்டிடத்தொகுதி | 2018-2023 | 2,380.5 | 1,018.36 | 550 | 142.64 | 25.93% | 85.6% (திருத்தப்படும் விடயப்பரப்புக்கு அமைய) |
| வெலிமட நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் | 2019-2022 | 428.72 | 242.58 | 250 | 28.65 | 11.46% | 75% |
| தெல்தெனிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி | 2019-2022 | 307.25 | 99.53 | 75 | 34.75 | 46.33% | 52% |
| பூகொட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி | 2018-2022 | 377.8 | 113.27 | 60 | 14.37 | 23.95% | 30% |
| கந்தளாய் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் | 2021-2024 | 263.81 | 46.05 | 90 | 64.59 | 71.76% | 10.10% |
| வாகரை புதிய நீதிமன்றக் கட்டிடம் | 2020-2022 | 50.02 | 28.91 | 10 | 7.05 | 70.5% | 80% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஹெல்பொட புதிய நீதிமன்றக் கட்டிடம் | 2020-2022 | 51.23 | 24.52 | 8 | 3.16 | 39.5% | 80% |
| நாரம்மல சுற்றுலா நீதவான் நீதிமன்ற அலுவலகக் கட்டிடம் | 2020-2022 | 31.28 | 24.93 | 15 | 8.65 | 57.66% | 96% |
| சிலாபம் இரட்டை உத்தியோகபூர்வ இல்லம் | 2020-2022 | 31.10 | 16.24 | 15 | - | 0% | 60% |
| பாணந்துறை இரட்டை உத்தியோகபூர்வ இல்லம் | 2021-2023 | 34.56 | 11.47 | 10 | 1.28 | 12.8% | 60% |
| இரட்டை உத்தியோகபூர்வ இல்லம் - மட்டக்களப்பு | 2021-2023 | 36.78 | 12.46 | 12 | 8.84 | 73.66% | 62% |
| இரட்டை உத்தியோகபூர்வ இல்லம் - குருநாகல் | 2021-2022 | 39.90 | 5.29 | 10 | 2.07 | 20.7% | 65% |
| இரட்டை உத்தியோகபூர்வ இல்லம் - குருநாகல் | 2021-2022 | 34.77 | 10.15 | 10 | 4.14 | 41.4% | 70% |
| நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் கட்டிடத்தை நவீனமயப்படுத்தல் | 2021-2022 | 113.32 | 32.67 | 25 | - | 0 | 30% |
| நிக்கவெரட்டிய முன்பூர்த்தி செய்த நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 107.94 | 46.52 | 60 | 25.48 | 42.46% | 68% |
| புத்தளம் முன்பூர்த்தி செய்த நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 122.82 | 24.56 | 90 | 41.95 | 46.61% | 65% |
| சம்மாந்துறை முன்பூர்த்தி செய்த நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 44.65 | 14.35 | 30 | 8.31 | 27.7% | 66% |
| மனப்பிட்டி முன்பூர்த்தி செய்த நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 49.96 | 8.51 | 40 | 21.28 | 53.2% | 80% |
| குச்சவெளி முன்பூர்த்தி செய்த நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 73.08 | 24.74 | 50 | 19.56 | 39.12% | 50% |
| பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தின் ஆவணக்காப்பகம் மற்றும் வழக்குத் தடயப்பொருட்களின் அறையைநிர்மாணித்தல் | 2021-2022 | 32.92 | 8.84 | 25 | 5.95 | 23.8% | 50% |
| வெல்லவாய் புதிய நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 58.81 | 9.57 | 40 | 2.52 | 6.3% | 35% |
| ஹிங்குரக்கொட மாவட்ட / நீதவான் நீதிமன்றக் கட்டிடம் | 2021-2022 | 104.40 | - | 100 | 25.31 | 25.31% | 10% |
| தம்புளை நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2022 | 60.90 | 16.48 | 60 | 6.48 | 27% | 20% |
| மாத்தளை நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2021-2023 | 561.47 | 143.25 | 120 | 43.41 | 26 | 14.25% |

### 3.5.4. 2022 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. | 2022.09.30 ஆம் திகதிக்கு செலவினம் ரூ.மி. | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| வலபனை நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல் * | 320.50 | 72.10 | 4.65% |
| மஹவ மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணித்தல் | 35.07 | 14.66 | 55% |
| தெஹிஅத்தகண்டிய மாவட்ட நீதிமன்ற கட்டிடத்தை நிர்மாணித்தல் | 69.00 | 13.16 | 8% |
| கெக்கிராவ மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணித்தல் | 112.59 | 25.97 | 12% |
| வாழைச்சேனை முன்பூர்த்தி செய்யப்பட்ட நீதிமன்றத்தை நிர்மாணித்தல் | 149.82 | 52.03 | 28% |
| மஹவ மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணித்தல | 37.50 | 15.23 | 10% |
| மொனராகலை நீதிமன்ற கட்டிடத்தை நிர்மாணித்தல் | 101.26 | 20.55 | 40% |
| கலவானை சுற்றுலா நீதவான் நீதிமன்ற கட்டிடத்தை நிர்மாணித்தல் | 34.66 | - | 20% |
| வரகாப்பலை மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் | 80.61 | - | 1% |
| பகமூன நீதிமன்ற கட்டிடத்தை நிர்மாணித்தல் | 33.86 | 3.84 | 10% |
| நீதி இல்லம் கருத்திட்ட பூமியில் காணப்படுகின்ற அகற்றப்பட்ட முன்பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்கள் இரண்டையும் மாத்தறை புதிய நீதிமன்ற வளவில் தாபித்தல் | 12.20 | 6.55 | 90% |

* இந்த நீதிமன்றத்தை நிர்மாணித்தல் மற்றும் காணப்படுகின்ற நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் அத்தியாவசியமாக உள்ளதனால், பொருளாதார நிலைமைகள் சீரடையும் வரை இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மந்தகதியில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 3.5.5. புனரமைப்புக் கருத்திட்டம்

### 2022 மேல் நீதிமன்ற பெறுகையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| மேல் நீதிமன்ற வலயம் | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் ரூபா மில்லியன் | | | | | 2022.09.30 ஆம் திகதிக்கு செலவினம் ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| | காலாண்டு 1 | காலாண்டு 2 | காலாண்டு 3 | காலாண்டு 4 | மொத்தம் | |
| அம்பாறை | - | 0.2 | - | - | 0.2 | 0.00 |
| அநுராதபுரம் | 0.6 | 10 | 5 | 2 | 17.6 | 14.8 |
| அவிசாவளை | - | 0.007 | - | - | 0.007 | 0.007 |
| பதுளை | 0.022 | - | 0.08 | - | 0.1 | 0.1 |
| மட்டக்களப்பு | - | - | 1 | - | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 13.8 | 22.2 | 35.4 | 0.2 | 71.6 | 52 |
| சிலாபம் | 1.6 | 0.2 | - | - | 1.8 | 0.21 |
| காலி | 0.51 | 8.3 | 22.5 | 24.6 | 55.9 | 19.6 |
| கம்பஹா | 0.6 | 0.18 | 1.77 | 2.5 | 5.05 | 0.86 |
| ஹோமாகம | - | 4.3 | 2.5 | 2.2 | 9 | 0.00 |
| யாழ்ப்பாணம் | 0.03 | 0.38 | - | 1.17 | 1.58 | 0.3 |
| கல்முனை | - | 0.86 | - | - | 0.86 | 0.6 |
| களுத்துறை | 1.2 | 0.26 | 2.5 | 1.1 | 5.06 | 2.5 |
| கண்டி | 1.3 | - | 0.96 | - | 2.2 | 2.3 |
| கேகாலை | 0.9 | - | 0.9 | - | 1.8 | 1.8 |
| குருநாகல் | 0.9 | 9.5 | 2.5 | - | 12.9 | 4.4 |
| மாத்தறை | 0.1 | 14.9 | 1.8 | - | 16.8 | 15.9 |
| மொனராகலை | - | - | - | - | - | 0 |
| நீர்கொழும்பு | 0.04 | 0.9 | 0.78 | - | 1.7 | 0.56 |
| நுவரெலியா | - | - | 0.01 | - | 0.01 | 0.01 |
| பொலன்னறுவை | 0.039 | - | 0.027 | - | 0.066 | 0.067 |
| புத்தளம் | - | - | - | - | - | 0.00 |
| இரத்தினபுரி | - | 0.048 | - | - | 0.048 | 0.035 |
| தங்காலை | 0.7 | 0.3 | 0.005 | - | 0.005 | 1 |
| திருகோணமலை | - | - | - | - | - | 0.00 |
| வவுனியா | 1.6 | - | - | - | 1.6 | 1.6 |
| **மொத்தம்** | **23.941** | **72.535** | **77.732** | **33.77** | **207.97** | **118.69** |

அமைச்சின் பெறுகையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் (2021 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அமுல்படுததப்பட்டு வருகின்றவை)

| **கருத்திட்டம்** | செலவின மதிப்பீடு (ரூ.மி.) | **2021.12.31 ஆம் திகதிக்கு** செலவினம் (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கு செலவினம் (ரூ.மி.) | பௌதீக முன்னேற்றம் **100%** |
|---|---|---|---|---|
| அம்பாறை நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 8.00 | - | 4.2 | 85% |
| அநுராதபுரம் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 31.1 | 10.4 | 17 | 70% |
| அவிசாவளை நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 6.8 | 6.5 | 1.4 | 100% |
| பதுளை குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 4.9 | 1 | 3.8 | 100% |
| பதுளை மேல் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 3.4 | 2.1 | 0 | 100% |
| பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தின் திறந்த | 3.2 | 1.4 | 0 | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | | | | |
| வாழைச்சேனை மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 1.7 | 1.8 | 0 | 100% |
| மட்டக்களப்பு நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 3.5 | 1.7 | 0.17 | 100% |
| மாரவில நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 10.6 | 10.9 | 0.74 | 100% |
| சிலாபம் மேல் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 3.9 | 2.6 | 1.1 | 100% |
| காலி மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 6.7 | - | 0 | 0% |
| கம்பஹா குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 6.2 | 1.4 | 1.9 | 90% |
| கம்பஹா குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 1.8 | - | 0.69 | 20% |
| மஹர நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 12.1 | - | 2.8 | 40% |
| மஹர நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 15.3 | 14.1 | 1.5 | 100% |
| மாவட்ட நீதிமன்றமாக மாற்றியமைப்பதற்காக தற்போது காணப்படுகின்ற மஹர நீதவான் நீதிமன்றத்தினை மேம்படுத்தல் | 0.6 | 0.49 | 0 | 100% |
| அத்தனகல்ல மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 11.8 | - | 2.6 | 40% |
| அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.5 | | 1.5 | 100% |
| யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 27.1 | 15.7 | 0 | 55% |
| அக்கரைப்பற்று மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.8 | 4.3 | 0 | 100% |
| சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.1 | 5.4 | 1 | 100% |
| கல்முனை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 8.7 | 8.9 | 2.2 | 100% |
| களுத்துறை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.6 | 1.6 | 1 | 100% |
| கண்டி நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 28.5 | 22.4 | 1.1 | 100% |
| தம்புளை மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 14.6 | - | 0.85 | 20% |

| | | | | |
|---|---|---|---|---|
| மாவனெல்ல மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 7.1 | 2 | 3.4 | 100% |
| கேகாலை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 24.3 | 6.6 | 0 | 0% |
| வரகாப்பொல மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 21 | 16.6 | 11.7 | 100% |
| ஹெட்டிபொல நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 10.1 | 8.4 | 3.3 | 100% |
| ரம்படகல்ல நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 1.2 | 1 | 0.12 | 100% |
| குளியாப்பிட்டி நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 21.1 | 6.7 | 3.7 | 40% |
| பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.2 | 3.5 | 0 | 100% |
| வாரியபொல மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.7 | - | 0.54 | 40% |
| நாரம்மல நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.6 | - | 1.8 | 100% |
| தெய்யந்தர நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 6.1 | 3.9 | 0 | 100% |
| மினுவங்கொட மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 20.7 | 5 | 8.6 | 65% |
| நீர்கொழும்பு நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 12.3 | - | 0 | 0% |
| வெலிசர மாவட்ட நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.3 | | 0 | 70% |
| நுவரெலியா நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.7 | 2.5 | 3.7 | 100% |
| ஹிங்குரக்கொட மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 10.6 | 10.2 | 2.1 | 100% |
| பொலன்னறுவை மேல் நீதிமன்றத்தை புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 17.7 | - | 16.5 | 85% |
| ஆனமடுவ நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 3 | 3.1 | 0.15 | 100% |
| குளியாப்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 2.3 | 2.5 | 0 | 100% |
| புத்தளம் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 9.3 | 8.1 | 1.9 | 100% |
| கலவானை நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.7 | 6.1 | 0.75 | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| எம்பிளிப்பிட்டிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 15.1 | - | 10.3 | 75% |
| பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 11 | 5.8 | 5.2 | 85% |
| வலஸ்முல்ல மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 5.4 | 3.5 | 9.45 | 96% |
| புதுக்கடை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 986.8 | 151.3 | 178.9 | 56% |

### 3.5.6. எதிர்காலத் திட்டங்கள்

இன்றைய இலங்கையின் பொருளாதார நிலைமைக்கு மத்தியில் சவால்மிக்க சூழலில், அரச நிதியைப் பயன்படுத்துவதை மிகவும் பொறுப்புடன் பொது மக்களின் முன்னுரிமைத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், குறிப்பாக அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தல் எனும் தலைப்புடன் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இற்கமைய இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படவிருந்த கருத்திட்டங்கள் மற்றும் அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்து கருத்திட்டங்களை, நிலவும் பொருளாதார நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது பௌதீக முன்னேற்றம் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிர்மாணிப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணிப்புக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் எஞ்சிய நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட பின்னர் இவ்வாறு தற்காலிகமாக இடைநிறுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேற்படி கருத்திட்டங்கள் பின்வருமாறாகும்.

01. நீதி இல்லம் கருத்திட்டம்
    இக்கருத்திட்டமானது 04 கட்டங்களைக் கொண்டதாகும். அதாவது,
    - நீதவான் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் - பயன்படுத்தக்கூடிய வகையில் மூன்று மாடிகள் வரை நிர்மாணித்த பின்னர் தற்காலிகமாக நிறுத்தல்.
    - மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத் தொகுதி மற்றும் நீதி அமைச்சின் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் - தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள துளையிடல் (பைலின்) வேலைகளுக்கு இடம்பெறுகின்ற பாதிப்பை தடுத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு முறையியலை மேற்கொண்ட பின்னர் தற்காலிகமாக இடைநிறுத்தல். (இதற்கு 2023 ஆம் ஆண்டில் தேவையான ஏற்பாடுகளைக் குறிப்பிட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயார் செய்யப்பட்டு வருகின்றது.)
    - உத்தியோகபூர்வ இல்லங்களின் கட்டிடத் தொகுதி – நிர்மாண நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

02. மூதூர் நீதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல்
03. கல்முனை நீதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல்
04. கிண்ணியா நீதிமன்றக் கட்டிடம்
05. நொச்சியாகம நீதிமன்றக் கட்டிடம்
06. கல்பிட்டி நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
07. மொனராகலை நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

08. பகமுன நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
09. குளியாட்பிட்டி நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
10. சிலாபம் நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
11. தம்புளை நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
12. கலவானை சுற்றுலா நீதவான் நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
13. எம்பிலிப்பிட்டிய முன்பூர்த்தி செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
14. மாத்தளை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்
15. மாரவில மேலதி நீதவான் நீதிமன்றத்தை நிர்மாணித்தல்
16. வரகாப்பலை மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்
17. ஹட்டன் மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்
18. நுவெலியா நீதிமன்றத்தின் நிர்மாணிப்பு

மதியுரை சேவைகள் (items 19–34):

19. ஹொரன நீதிமன்றத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்
20. கல்கிசை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்
21. கண்டி நிதிமன்றத்திற்கு புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்
22. மாவனெல்ல மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தின் நிர்மாணிப்பு
23. மதுகம நீதிமன்றத்தின் நிர்மாணிப்பு
24. பஸ்ஸர நீதிமன்றத்தின் நிர்மாணிப்பு
25. பெல்மடுல்ல நீதிமன்றத்தின் நிர்மாணிப்பு
26. கேகாலை நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
27. மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
28. கடுவளை நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
29. அத்தனகல்ல நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
30. மினுவங்கொட நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
31. அவிசாவளை புதிய நீதிமன்றத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்
32. திருகோணமலை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்
33. களுத்துறை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்
34. மொரவக்க நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்

புனரமைப்புக் கருத்திட்டங்கள் (items 35–40):

35. காலி மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ள கட்டிடத்தின் பின்பக்கத்தை புதுப்பித்தல்
36. பலபிட்டி உத்தேச புதிய குடியியல் மேல்நீதிமன்றத்தை நிர்மாணித்தல்
37. பத்தேகம நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை புதுப்பித்தல்
38. நீர்கொழும்பு பழைய நீதவான் நீதிமன்றத்தை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல்
39. ரக்வானை சுற்றுலா விடுதியை புதுப்பித்தல்
40. ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

## 3.6. மறுசீரமைப்பு பிரிவு

நீதி அமைச்சினால் மேற் கொள்ளப்படும் துரித மறுசீரமைப்புத் திட்டத்திற்கு இணங்க, நீதி அமைச்சினால் மேற் கொள்ளப்படும் மறுசீரமைப்பு தொடர்பான சகல பணிகளையும் ஒன்றிணைப்புச் செய்வதற்காக 2020 இல் மறுசீரமைப்பு பிரிவு தாபிக்கப்பட்டது.

சட்ட மறுசீரமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் போன்றவற்றைத் துரிதப்படுத்துவதற்காக அமைச்சரவையின் ஒப்புதலுடன் அதற்கெனவே அர்ப்பணிப்புடன் செயற்படும் விசேட அலகொன்று மறுசீரமைப்புப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது. அதற்கமைய, பின்வரும் பிரிவுகள் தொடர்பான பொறுப்புக்கள் மறுசீரமைப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**விசேட அலகு**

- குற்றவியல் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பான துணைக்குழு
- குடிசார் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பான துணைக்குழு
- வர்த்தக சட்ட மறுசீரமைப்பு தொடர்பான துணைக்குழு
- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பான துணைக்குழு
- டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் நீதித்துறை தன்னியக்கமாக்கல் தொடர்பான துணைக்குழு

வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் மேற் கொள்ளப்படுகின்ற செயற்திட்ட ஒன்றிணைப்பு அலகு

- சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய குடியரசு நிறுவனத்தினால் (USAID) நிதியுதவி அளிக்கும் பயனுள்ள மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் தொடர்பிலான செயற்திட்டம் (EET)
- ஐரோப்பிய ஒன்றியத்தினால் (EU) நிதியுதவி அளிக்கப்படும் சட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (JORE)
- ஐரோப்பிய ஒன்றியத்தினால் (EU) உதவியளிக்கும் பயனுள்ள பிணக்கு தீர்க்கும் செயற்திட்டம் (SEDR)
- நல்லிணக்க வலுவூட்டல் செயற்திட்டம் /SCOPE
- சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய குடியரசு நிறுவனத்தினால் (USAID) நிதியுதவி அளிக்கும் SCORE செயற்திட்டம் (நல்லிணக்கம்)
- கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOICA) மன உளைவு (GAD) தொடர்பில் சட்ட மருத்துவ அடிப்படையிலான ஔடத பகுப்பாய்வு குறித்தான அறிவு விருத்தி

நியமனத்தை வழங்கும் அலகு

- சமாதான நீதவான்கள்
- சத்தியப்பிரமாண ஆணையாளர்
- திடீர் மரண பரிசோதகர்
- உத்தியோகபூர்வமற்ற நீதவான்கள்
- சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்

சிறப்புச் செயற்திட்டங்கள் / ஒப்படை

- நீதித் துறை தன்னியக்கமாக்கல் செயற்திட்டம்
- வீடியோ (காணொளி) மாநாட்டு செயற்திட்டம்
- நீதித்துறை பார்வையிடல் செயற்திட்டம்
- இலங்கை சர்வதேச நடுதீர்ப்பு மையம் ஒன்றை செயற்படுத்தல்.

### 3.6.1. விசேட அலகு

### குடிசார் சட்ட மறுசீரமைப்பு தொடர்பிலான துணைக்குழு

* குடிசார் வழக்கு ஏற்பாட்டுக் கோவையில் 154 அ பிரிவு தொடர்பில் சட்ட வரைபு வர்த்தமானி அறிவித்தலில் பிரிசூரிக்கப்பட்டுள்ளது.
* குடிசார் வழக்கு ஏற்பாட்டுக் கோவையில் 167 பிரிவு தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் கொள்கை ரீதியான ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
* உத்தேச டிஜிட்டல் சட்டத்தில் பல அத்தியாயங்கள் டிஜிட்டல் சட்டக் குழுவினால் இறுதியாக தயாரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| அழைப்பாணையை பாரமளித்தல் மற்றும் அளவு வரையறை செயற்படுத்தும் சேவை செயற்தொடருக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | அழைப்பாணை பிறப்பித்தல் மற்றும் பாரமளித்தல் தொடர்பிலான குடிசார் / குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவையின் பிரிவு திருத்தச் சட்ட வரைவு குழுவினால் மேற் கொள்ளப்பட்ட இறுதி அவதானிப்புக்கள் மீள அனுப்பி வைக்கப்பட்டதுடன், அது நீதி அமைச்சிடம் முன்னிலைப்படுத்தப்பட்டது. |
| நன்னடத்தை மற்றும் வளர்ப்புப் பெற்றோர் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | இறுதி அறிக்கையை தயாரிக்கும் செயற்பாட்டில் குழு ஈடுபட்டுள்ளது. |
| வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்கள் பரஸ்பர ரீதியான அமுலாக்கக் கட்டளைச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | இறுதி அறிக்கை அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. |
| நொதாரிசு கட்டளைச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | * பாரிய நன்றியுணர்வு இன்மையின் கீழ் மீளப் பெற முடியாத நன்கொடை உறுதிகளை இரத்து செய்யும் சட்டம் மற்றும் இறுதி விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தை வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரித்தல். |
| | * நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் சிற்சில ஏற்பாடுகளுக்கான சிறு திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |
| | * ஆவண பதிவு சட்டத்தை வர்த்தமானி பத்திரத்தில் பிரசூரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| | * அட்டோணி உத்தரவுப் பத்திரக் கட்டளைச் சட்டம் 2022.04.20 ஆந் திகதிக்கு அமைச்சரவையிடம் அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| | * ஊழல் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் சட்ட வரைவு சட்ட வரைவாளர்களால் தயாரிக்கப்பட்டு இறுதி வரைவு கிடைக்கப்பட்டுள்ளது. |
| குடும்பச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | * வெளிநாட்டு விவாகரத்தை ஏற்றுக் கொள்ளும் சட்டத்தின் இறுதி சட்ட வரைவு குழுவிற்குக் கிடைத்துள்ளதுடன், அது தொடர்பிலான அவதானிப்புக்கள் சட்ட வரைவாளர் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| | * சட்ட வரைவாளர் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்ட திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின், இறுதி சட்ட வரைவு குழுவினால் நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| கடன் நிவாரண கட்டளைச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | சட்ட வரைவாளர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் இறுதிச் சட்ட வரைவை குழு எதிர்பார்த்தவாறு உள்ளது. |
| வீட்டு வாடகைச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | குழு இறுதி சட்ட வரைவை எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. |

| | |
|---|---|
| கூட்டுரிமை சொத்துச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | அறிக்கை வரைவு செய்யப்பட்ட வண்ணம் உள்ளது. |
| பிரிவிடுதல் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | சட்ட வரைவாளர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் இறுதிச் சட்ட வரைவை குழு எதிர்பார்த்தவாறு உள்ளது. |
| உரிமைப் பதிவுச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | இறுதி அறிக்கை நீதி அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், ஆலோசனைக் குழு தொடர்பிலான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| காணிச் சட்டம் தொடர்பான ஆலோசனைக் குழு | |
| காணி இருப்பை விரைவாகக் கையகப்படுத்தும் மீளாய்வு ஆலோசனைக் குழு | காணி இருப்பை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை வகுப்பதற்கான சட்டத்துக்கு ஏற்புடைய வரைவு குறித்து குழு உறுப்பினர்களின் அவதானிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகிறது. |
| ஊடக ஒழுங்கு முறை மற்றும் தனியுரிமைச் சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | கலைக்கப்பட்டுள்ளது. |

### வர்த்தக சட்ட மறுசீரமைப்பு தொடர்பான துணைக்குழு

| | |
|---|---|
| இலத்திரனியல் வர்த்தக சட்டத்துக்கான மீளாய்வு ஆலோசனைக் குழு | பணிப் பட்டியலின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் |
| கடல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவக் குழாம் | பணிப் பட்டியலின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் |
| தொழிலாளர் சட்ட மீளாய்வு ஆலோசனைக் குழு | ஆரம்ப பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. |
| இலங்கையில் அறிவுசார் சொத்துச் சட்டத்துக்கு ஏற்புடைய சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவக் குழாம் | ஏற்புடைய சட்டத்திற்கு தேவையான மறுசீரமைப்பை வரைவு செய்வதற்காக மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் உறுதிப்படுத்தல் ஆலோசனைக் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. |
| கம்பனிச் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவக் குழாம்<br>இலங்கையின் நடுதீர்ப்புக்கு ஏற்புடைய சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவக் குழாம் | தற்போது வரைவு செய்யப்பட்ட வண்ணம் உள்ளது.<br>குழுவிடம் இறுதியாக தயாரிக்கப்பட்ட திட்டங்கள் கிடைக்க உள்ளன. |
| வங்கி மற்றும் நிதி சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவக் குழாம் | தற்போது வரைவு செய்யப்பட்ட வண்ணம் உள்ளது. |

### குற்றவியல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான துணைக்குழு

| திட்டங்கள் | தற்போதைய நிலவரம் |
|---|---|
| 2006 ஆண்டு 6 ஆம் இலக்க பணக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | நிதி அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நீதி அமைச்சின் அவதானிப்புக்களை முன் வைப்பதற்காக குழு அவதானிப்புக்களை எதிர்பார்த்துள்ளது. குழுவின் அவதானிப்புக்கள் நிதி விசாரணை அலகின் மற்றும் நிதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. |
| **PODD** இக்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | சட்ட வரைவைத் தயாரிக்கும் போது குழுவின் அவதானிப்புக்கள் கருத்திற் கொள்ளப்படும். அச் சட்ட வரைவு வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசூரிப்பதற்கும், பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் |

| | |
|---|---|
| | அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. |
| சட்டவாக்க பெண் வன்புணர்ச்சி | சட்ட வரைவு தயாரிக்கும் போது குழுவின் அவதானிப்புக்கள் குறித்தும் கருத்திற் கொள்ளப்பட்டன. வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசூரிப்பதற்காக அங்கீகாரத்தை எதிர்பார்த்து அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையினால் வழங்கிய ஆலோசனைகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படும். |
| ஆபாசத் தடை சட்ட வரைவு | சட்ட வரைவு செய்யும் போது குழுவின் அவதானிப்புக்கள் கருத்திற் கொள்ளப்பட்டதுடன், ஏப்பிரல் மாதத்தின் ஆரம்பத்தில் சட்ட வரைவு தொடர்பாக மேலும் விவாதிப்பதற்காக சில தரப்பினர்கள் அழைக்கப்பட்டனர். |
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவைக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் - வழக்குக்கு முன்னான விசாரணை | சட்டம் வகுக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் சில அவதானிப்புக்களும் கருத்தில் கொள்ளப்பட்டு உட்சேர்க்கப்பட்டது. |
| குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் புதிய சட்டங்களை பதிலீடு செய்தல். | குழுவின் அவதானிப்புக்களும் கருத்திற் கொள்ளப்பட்டதுடன், சட்டமா அதிபரிடமிருந்து சட்டத்துக்கு அமைவானது தொடர்பான சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 1979 இல 15 ஐக் கொண்ட குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவையில் திருத்தம் (அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழ் சந்தேக நபர் / குற்றம் சுமத்தப்பட்டவர் நீதிமன்றத்தில் தனிப்பட்ட ரீதியாக முன்நிற்க வேண்டிய தேவை இல்லை) | குழுவின் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும். |
| அபாயகரமான மிருகக் கட்டளைச் சட்டம் | சட்ட வரைவு வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசூரிப்பதற்கும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமான அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| மிருக சித்திரவதை கட்டளைச் சட்டம் | உத்தேச மிருக நலன்புரி சட்டத்தின் மூலம் சித்திரவதை கட்டளைச் சட்டத்தின் பரிச்சின்ன வீம எனும் விடயத்தை அடிப்படையாகக் கொண்டு நீதி அமைச்சரினால் அமைச்சரவை பத்திரம் நீக்கப்பட்டப்பட்டது. (மிருக நலன்புரி சட்டத்தின் பிரதி ஒன்றும் குற்றவியல் சட்ட மறுசீரமைப்புக்கான துணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.) |
| ஹோட்டல் காப்பாளர் பொறுப்புக் கட்டளைச் சட்டம் | குழுவின் அவதானிப்புக்கள் விடயப் பொறுப்புக்குரிய நேரடி அமைச்சான சுற்றுலாத் துறை அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக அவ் அமைச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சுற்றுலாத் துறை அதிகார சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள உரிய கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்யும் செயற்பாட்டில் இந்த முன்மொழிவு குறித்து கவனத்தில் கொள்வதாக நீதி அமைச்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| பிணை சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | எதிர்வரும் காலங்களில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகள் | உரிய திணைக்களத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. |
| தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தில் | உத்தேச திருத்தம் தொல்பொருளியல் |

| | |
|---|---|
| முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், உரிய நிறுவனம் அந்தத் திருத்தத்தை மேற் கொள்வதற்கு இணக்கத்தை தெரிவிக்கவில்லை. |
| வீட்டு வன்முறைச் சட்டத்துக்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | அவதானிப்புக்கள், நேரடி அமைச்சான மகளிர் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சிடம் அனுப்பு வைக்கப்பட்டது. குடிசார் சட்ட மறுசீரமைப்புக்கான துணைக்குழுவின் அவதானிப்புக்களும் அந்த அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மகளிர் அலுவல்கள் தொடர்பிலான இராஜாங்க அமைச்சினால் சட்ட வரைவின் சட்டத்துக்கு அமைவானது குறித்தான சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. |
| குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவைக்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை மற்றும் தண்டனைச் சட்டக் கோவைக்குக் திருத்த முன்மொழிவுக்கான உத்தேச திருத்தங்களின் 1 ஆவது சட்ட வரைவு விசேட குழுவின் தலைவருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய வரைவுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான துணைக்குழு**

- குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவையை திருத்தம் செய்வதற்கான ஆதரவு வழங்கல்.
- மாத்தறை புதிய நீதிமன்ற கட்டிட வளாகத்தினுள் மேலதிக நீதிமன்றம் ஒன்றை தாபிப்பதற்கு திட்டமிடல்.
- இரத்தினபுரி நீதிமன்ற கட்டிட வளாகத்தினுள் சட்டத்தரணிகளுக்கான அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடல்.
- நீதிமன்ற கட்டிடத் தொகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சிக்கல்களை அடையாளம் காணல்.
- சட்டப் பணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள சிக்கல்களை அவதானித்தல்.

**டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் நீதித்துறை தன்னியக்க மயப்படுத்தல் துணைக்குழு**

- டிஜிட்டல் மயப்படுத்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கண்காணிப்புப் பொறிமுறையை தாபிக்கும் சாத்தியக்கூறுகளை கலந்துரையாடல்.
- நிகழ்நிலை தொழிநுட்பத்தின் ஊடாக வழக்கு விசாரணைகளை மேற் கொள்வதற்கு வலய சட்டத்தரணிகளை பழக்கப்படுத்துவதற்காக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல்.

### 3.6.2. வெளிநாட்டு நிதியுதவி அளிக்கும் செயற்திட்டங்கள்

சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரிவுகளை உள்ளடக்கிய விரிவான ஆவணம் ஒன்று வெளிநாட்டு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ''சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களின் சந்திப்பு'' உரிய இராஜதந்திர சேவை ரீதியிலும், சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களின் முகவர்கள் என்ற ரீதியிலும் கல்வி அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், நீதி அமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி, சட்டமா அதிபர் உள்ளிட்ட சிறப்பு அதிதிகளின் பங்களிப்புடன் 2021.04.01 ஆந் திகதி ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. பின்னூட்டல் கூட்டங்கள் அடிக்கடி இடம்பெற்றதுடன், நீதி அமைச்சின் மறுசீரமைப்புப் பிரிவு வெளிநாட்டு நிதியுதவி அளிக்கும் செயற்திட்டங்களை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களின் சந்திப்பின் பின், ஒவ்வொரு சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களையும் வெவ்வேறாக தனித் தனியே எடுத்து தொடர்ச்சியாக தொடர்பைப் பேணிச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கு கலந்துரையாடப்பட்டது. மேலும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய செயற்திட்டங்கள் இந்தப் பிரிவினால் மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

| செயற்திட்டத் தின் பெயர் (சுருக்கமாக) | செயற்திட்டம் | மதிப்பீட்டுச் செலவினம் | செயற்திட்டத் தின் காலம் | தற்போதைய நிலவரம் | செயற்திட்டத்தின் பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| USAID-EEJ | வினைத்திறனான மற்றும் பயனள்ள நீதி செயற்திட்டம் | 15 மில்லியன் அமெரிக்க டொலர் | 5 வருடங்கள் (2022 – 2021) | செயற்படுத்தும் கடிதத்தை கையொப்பமிடுதல். | நோக்கம் :<br>நீதி நிலைநாட்டுவதை வலுப்படுத்தல்.<br>தகைமையுள்ள, நீதிப் பொறிமுறையின் செயற்பாட்டாளர்களின் தொழில் தன்மையை பலப்படுத்தல். |
| USAID-SCORE | சமூக ஒன்றிணைப்பு மற்றும் மறுசீரமைப்புச் செயற்திட்டம் | 19 மில்லியன் அமெரிக்க டொலர் | 5 வருடங்கள் (2018 – 2023) | செயற்படுத்தும் கடிதம் கையொப்பம் இடப்பட்டுள்ளதுடன், தற்போது செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளது. | ஒன்றிணைப்பின் ஊடாக இலங்கையரின் அடையாளத்தை மேம்படுத்தல்<br>சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை குறைத்தல்.<br>சமூக நம்பகத் தன்மையை மேம்படுத்தல். |
| EU - JURE | நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 18 (EU) மில்லியன் யூரோ மற்றும் ஒரு மில்லியன் (UN) UNDP:யூரோ, 11 மில்லியன் UNICEF யூரோ | 4.5 வருடங்கள் (2022 – 2026) | ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஆர்வம் உள்ளோருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்ட வண்ணம் உள்ளன. (இரு தரப்பினருக்கும், தலைப்பு ரீதியில்) முன்னுரிமை மற்றும் தலையீடு மற்றும், தலையீட்டு உபாயமார்க்கமான மோதல்கள் தொடர்பில் இணக்கம் நீடிக்கப்பட்டுள்ளது. | விளைவு<br>1: அனைவருக்கும் நீதிக்கான அணுகல் மேம்படுத்தப்பட்டுள்ளது, குறிப்பாக பெண்கள், ஏழைகள் மற்றும் ஆபத்தான சூழலில் உள்ளவர்<br>விளைவு 2: பொறுப்புக் கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் நீதி அமைப்பினுள் நம்பகத் தன்மையை மேம்படுத்தல்.<br>விளைவு 3: நீதித் துறையின் வினைத்திறன் மற்றும் அதன் நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. |
| EU-SCOPE | இலங்கையின் சமூக ஒன்றிணைப்பு மற்றும் ஒற்றுமையை வலுப்படுத்தல் | 11 மில்லியன் யூரோ, (8 மில்லியன் யூரோ, 3 மில்லியன் யூரோ AA) | 3 வருடங்கள் (2022 – 2025) | PSF பரிந்துரை செய்வதற்கு NDP இடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இது குறித்து திருத்தங்களும், விவாதங்களும் மேற் | - வன்முறைக்கும், பகிஷ்கரிப்புக்களுக்கும் பதிலளிப்பதில் சமூக மற்றும் நிறுவன ரீதியான நம்பகத் தன்மையும், திறன்களும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.<br>- தகவல் அடிப்படையிலான அரச உரையாடல்கள், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளது,) | இணக்கங்கள், பன்முகத் தன்மை வலுப்படுத்தப்பட்டுள்ளன.<br>- பொருளாதார ஊக்கமளிப்பு மற்றும் இனங்களுக்கிடையான ஒத்துழைப்புக்குமான தேசிய மத்தியஸ்த மூல நிகழ்ச்சித் திட்டம். |
| EU- SEDR | வினைத்திறனாக பிணக்குகளைத் தீர்த்தல் (SEDR) ஒத்துழைப்பு வழங்குதல் மத்தியஸ்த சபை ஆணைக்குழு (SIRIDE செயற்திட்டத்தின் கீழ்) | 7 மில்லியன் யூரோ | (2020 – 2024) | அமைச்சரவைப் பத்திரம் - MBC இக்கான நிதி பங்களிப்பு | நீதி அமைச்சின் கீழ் மத்தியஸ்த மூலச் சபை ஆணைக்குழுவுக்கு இணக்க தேசிய மத்தியஸ்த மூல நிகழ்ச்சித் திட்டம் |
| KOICA | சட்டவியல் ஔடதங்களின் அளவை கட்டியெழுப்புதல் வலுப்படுத்தல்<br><br>இலங்கையின் குற்றவியல் நீதித் தொகுதி தொடர்பான பகுப்பாய்வு | 4 மில்லியன் அமெரிக்க டொலர் | 4 வருடங்கள் (2021 – 2024) | தற்போது செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளது. | - அபாகரமான ஔடத மற்றும் சட்ட மருத்துவ நச்சுவியல் ஆய்வு கூடங்களுக்கு ஆய்வு கூட உபகரணங்களை மேம்படுத்தல்.<br>- அபாயகரமான ஔடத மற்றும் சட்ட மருத்துவ நச்சுவியல் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.<br>- டிஜிட்டல் மயப்படுத்தல் பகுப்பாய்வு செயற்பாடு மற்றும் சாட்சி முகாமைத்துவம். |
| JICA | இலங்கையில் நீதி கிட்டுவதில் உள்ள நியாயமான அணுகலை வலுப்படுத்தல் | 60 மில்லியன் JPY | | PSF இனால் NDP இடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| PR 01 | யாழ் மாவட்டத்தினுள் மழை நீரை சேகரிக்கும் 2889 நீர்த் தாங்கிகளை நிர்மாணித்தல். | 299,011,991 மதிப்புள்ள இலங்கை ரூபாய் | 3 வருடங்களுக்கு கையொப்பம் இடப்பட்டுள்ளது. (2017 – 2024 வரை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது) | அமைச்சரவைப் பத்திரம் - புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தை நீடிப்பு செய்தல் | |
| ICRC | உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டம் | | | செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | - சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை செயற்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.<br>- அழுத்தங்களுக்கு உள்ளானவர் மற்றும் சுகந்தரத்தை இழந்துள்ளவர்களுக்கு பேணல் மீளாய்வு<br>-காணாமல் போனவர்களின் சிக்கல்களுக்கு தொழிநுட்ப உதவி<br>-காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உளவியல் மற்றும் வாழ்வாதார ஆதரவு வழங்குதல். |
| UNODC | இலங்கை தொலை நிலை நீதித் தொகுதியின் தொழிற்பாட்டை மேம்படுத்தல் : நிகழ்நிலை வாயிலாக வழக்கு விசாரணைகளை மேற் கொள்ளுதல் மற்றும் நடமாடும் நீதிமன்றங்கள் | 520000 அமெரிக்க டொலர் | 2020 – 2022 | செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | மேற் கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டம் :<br>-மாற்ற வலய செயற்பாடு மற்றும் புலம்பெயர்வு கடத்தல்களுக்கு எதிரான விளைவுகளை வலுப்படுத்தல். (STARSOM)/Canada 2021 மார்ச் - 2022 டிசம்பர் 200,000 அமெரிக்க டொலர்<br>-நீதி நிலைநாட்டல் செயற்பாட்டை வலுப்படுத்தல் - நீதிக்கான அணுகலை ஊக்குவித்தல் மற்றும் பெண்களுக்கான சட்ட உதவிகள் PBF/ 2020 டிசம்பர் - 2022 ஜூன் 350,000 அமெரிக்க டொலர்.<br>-சிறைக் கைதிகளிடையே கொவிட் - 19 நோய்த் தொற்றை முகாமைத்துவம் செய்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்தல். INL/ 2020 செப்டம்பர் - 2022 ஆகஸ்ட் / 500,000 அமெரிக்க டொலர்.<br>-இலங்கையின் நீதித் துறையில் தொலை நிலைச் செயற்பாட்டை ஊக்குவித்தல் நிகழ்நிலை ஊடாக வழக்கு விசாரணை மற்றும் நடமாடும் நீதிமன்றங்கள் / INL/ 2021 ஏப்பிரல் - 2025 ஜனவரி 200,000 அமெரிக்க டொலர்.<br>-MLE முகவர் நிறுவனங்களில் மற்றும் சட்டப் பயிற்சிகளை நடத்தி கடல் சார் குற்றங்களைக் கண்டறிதல், விசாரணைகளை நடத்துதல் மற்றும் வழக்குத் தொடுத்தல் தொடர்பில் குற்றவியல் சட்ட அதிகாரிகளின் அறிவை மேம்படுத்தல் INL/ 2020 செப்டம்பர் - 2023 ஏப்பிரல் 45,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | அமெரிக்க டொலர். |
| ABD | வர்த்தக சட்டம் முதலீட்டு மற்றும் ஒப்பந்தங்களை அமுல்படுத்துவது குறித்து கவனத்தைச் செலுத்தி சட்டப் பிரிவின் வினைத் திறனை வலுப்படுத்தல். | | | நவீனகரமான வதிவிட பணிப்பட்டறைகள் சிலவற்றின் தோற்றத்தில் இந்தக் கலந்துரையாடல்களையும், மீளாய்வுகளையும் மேம்படுத்துவதற்கு நீதி அமைச்சும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் எதிர்பார்க்கின்றது. தரப்பினர்களின் பங்களிப்புடன் கலந்துரையாடல் இடம்பெற்றதோடு துறையின் ஊடாக செயற்படுத்தக் கூடிய தரப்பினரின் உபாயமார்க்க செயற்பாட்டுத் திட்டமே அதன் எதிர்பார்த்த பெறுபேறாக அமைந்தது. | |

### 3.6.3. நியமனம் வழங்கும் பிரிவு

**சமாதான நீதவான்கள்**

1978 ஆண்டு 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் கீழ் நீதி அமைச்சரால் சமாதான நீதவான்கள் நியமிக்கப்படுவர்.

**சத்தியப்பிரமாண ஆணையாளர்**

சத்தியப்பிரமாணக் கட்டளைச் சட்டத்தின் 12(1) பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் சத்தியப் பிரமாண ஆணையாளர்களாக நியமிக்கப்படுவர். கொவிட் - 19 தொற்று நிலையின் காரணத்தால் அமைச்சின் இணையத் தளத்தின் ஊடாக சத்தியப் பிரமாண ஆணையாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான வசதிகள் அளிக்கப்பட்டதுடன், நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகளின் பெயர் பட்டியல் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டது.

**திடீர் மரண விசாரணை அதிகாரி**

குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவையில் 108 ஆவது பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் திடீர் மரணங்கள் தொடர்பில் மரண விசாரணைகளை நடத்துவதற்காக திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படுவர். கொவிட் - 19 தொற்று நிலை காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகத் தேர்வுகளை நடத்த முடியாத நிலையில், தற்காலிக அடிப்படையின் கீழ் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. சகல விசாரணை அதிகாரிகளினதும் தரவுகளை உள்ளடக்கிய தரவுத் தளம் ஒன்று அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டதுடன், திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு எதிரான பொது முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக நிகழ்நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக முறைப்பாட்டு முகாமைத்துவத் தொகுதி ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**உத்தியோகபூர்வமற்ற நீதவான்கள்**

நீதி அமைச்சரால் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் உத்தியோகபூர்வமற்ற நீதவான்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**சத்தியப்பிரமாண மொழிபெயர்பாளர்**

எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர் நியமிக்கப்படுகின்றனர்.

**2022.01.01 முதல் 2022.09.30 வரை வழங்கப்பட்ட புதிய நியமனங்கள்.**

| நியமனங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| சமாதான நீதவான்கள் | 2434 |
| சத்தியப்பிரமாண ஆணையாளர் | 348 |
| திடீர் மரண விசாரணை அதிகாரிகள் | 16 |
| உத்தியோகபூர்வமற்ற நீதவான்கள் | 18 |
| சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர் | 167 |

### 3.6.4 விசேட செயற்திட்டங்கள் / ஒப்படைகள்

**நீதித்துறை தன்னியக்க மயமாக்கல் செயற்திட்டம்**

நீதித்துறை தன்னியக்க மயமாக்கல் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2021 பெப்ரவரி மாதம் நீதி அமைச்சு, தொழிநுட்ப அமைச்சு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தகவல், தொலைத்தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்துக்கிடையே கைச்சாத்திடப்பட்டது.

நீதி அமைச்சினால் e-8 கோவை தொகுதி, வழக்கு முகாமைத்துவத் தொகுதி மற்றும் வழக்கு பிரதிகள் தொகுதி உள்ளிட்ட சட்ட ஆவணங்கள் முற்றாக தன்னியக்கப்படுத்துவதை இலக்காகக் கொண்டு நீதித்துறை தன்னியக்க மயமாக்கல் செயற்திட்டத்துக்கான பெறுகை நடைமுறை வெற்றிகரமாக முற்றுப் பெற்றது. முன் தகுதிச் செயன்முறையின் பின், விலை கோரல் ஆவணங்கள் முன் தகுதி பெற்ற விலை மனுத் தாரர்களுக்கு வழங்கப்பட்டன.

செயற்திட்டத்தின் முன்னோடி கட்டம் மற்றும் 11 கட்டத்தில் 100 நீதிமன்ற கூடங்கள் உள்ளடக்கப்படும். எஞ்சியவை நீதிமன்ற செயற்திட்டத்தின் 111 ஆம் கட்டத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்துக்கான ஆலோசனைப் பங்களிப்பு தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.

நீதிச் சேவை ஆணைக்குழு, நீதிபதிகள், பதிவாளர்கள், பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம், அரச பகுப்பாய்வுத் திணைக்களம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற தொடர்புபட்ட பங்காளர்களின் பங்களிப்புடன் 2021 ஆண்டில் பங்காளர்களுக்கான ஆலோசனை பணியமர்வு இடம்பெற்றது.

புத்தாக்க அணுகுமுறையில் நுழைந்தவாறு முன் தகுதி பெறுபேறுகள் இணைய வழி முறையினூடாக பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பல கூட்டங்கள் நிகழ்நிலை தொழிநுட்பத்தின் வாயிலாக இடம்பெற்றது. பங்காளர்களின் பல ஆலோசனை பணியமர்வுகள் நிகழ்நிலை அடிப்படையிலான பணியமர்வுகளாக இடம்பெற்றன.

**வீடியோ (காணொளி) மாநாட்டு செயற்திட்டம்**

அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அமைய, 23 நீதிமன்றங்கள் மற்றும் 12 சிறைச்சாலை வளாகங்களுக்கு இடையே வீடியோ (காணொளி) மாநாட்டு வசதிகளை தாபிப்பதற்கான ஒப்பந்தம் இலங்கை தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் Lanka Government Network ஊடாக இணைக்கப்பட்டதோடு. காணொளி மாநாட்டு வசதிகள் Lanka Government Cloud ஊடாக வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| நீதித்துறை தன்னியக்க மயப்படுத்தல் | • பெறுகை ஒப்பந்தங்களை வழங்குவற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி அமைச்சரவை பத்திரம் |

| | |
|---|---|
| | முன்வைக்கப்பட்டது.<br>• 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானத்தின் ஊடாக அது அங்கீகரிக்கப்பட்டது.<br>• பின் - தகுதியை முன் வைத்தல் 2022 மார்ச்சு 16 ஆம் திகதி நடைபெற்றதுடன், டயலொக் பிரோட்பாண்ட் நெட்வேர்க் (பிரைவெட்) லிமிடட் இன் கூட்டு வியாபாரத்தினால் முன்வைக்கப்பட்டது.<br>• இல 2022/03 ஐக் கொண்ட 2022.04.26 ஆம் திகதிய வரவு செலவு சுற்றறிக்கையில் 3(ii) பிரிவின் கீழ் நாட்டில் நிலவும் நிதி நிலை காரணமாக செயற்திட்டத்தை கைவிடப்பட்ட காரணத்தால் விழிப்புணர்வூட்டும் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| வீடியோ (காணொளி) மாநாட்டு செயற்திட்டம் | • நீதி அமைச்சு மற்றும் தொழிநுட்ப அமைச்சின் நிதித் தளும்பல்களின் காரணத்தால் செலவின அதிகரிப்பதைத் தடுப்பதற்காக செயற்திட்டத்தின் அளவைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br>வீடியோ (காணொளி) மாநாட்டுச் செயற்திட்டம் தொடர்பான மீளாய்வுக் கருத்துக்காக TEC இன் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகிறது. |

**நீதித்துறை பார்வையிடல் திட்டம்**

நீதிமன்றங்களில் நிலவும் அவசர புனரமைப்புக்கள் மற்றும் உபகரணங்களின் தேவைகளை அடையாளம் காண்பதற்காக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நீதி அமைச்சினால் அவசரத் தேவைகளை அடையாளம் காண்பதற்காக சகல நீதிமன்றங்களுக்கும் பார்வையிடல் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சின் சகல பதவிநிலை தரங்களைச் சேர்ந்த அலுவலகர்களும் நீதிமன்றங்களுக்கு சென்று பார்வையிடுவதற்கு ஈடுபடுத்தப்படுவர். நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டம் ஏற்கனவே முற்றுப் பெற்றதோடு, 10 நீதிமன்ற வலயங்களில் அவசரத் தேவைகளாக நிலவும் மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் தேவைகள் விரைவாக நிறைவேற்றப்பட்டன.

அமைச்சினால் 40 மில்லியன் ரூபாய் மரத் தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் வழங்கப்பட்டது. அதற்கிடையே, நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அடையாளம் காணப்பட்ட அவசர புனரமைப்புப் பணிகள் உரிய பிரதேச செயலாளர்களின் ஊடாக மேற் கொள்ளப்பட்டன.

## இலங்கை சர்வதேச நடுதீர்ப்பு மையத்தின் செயற்பாடு

இலங்கை சர்வதேச நடுதீர்ப்பு மையம், நன்கு பயிற்சி பெற்ற பங்காளர் முகாமைத்துவ கூட்டுடைமையுடன் சுயாதீன, தன்னிறைவு பெற்ற நிறுவனமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்காலத்தில் துறைமுக நகரில் எழக் கூடிய நடுதீர்ப்புத் தேவைகளுக்கான சேவை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகளைக் கோரியுள்ளதுடன், பிரயோகிக்கக் கூடிய சிறந்த முகாமைத்துவ மாதிரி தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக விசேட உத்தியோகபூர்வக் குழு ஒன்று அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, இது குறித்து பரஸ்பர ரீதியான நன்மைகள் கிட்டக் கூடிய கூட்டுடைமையை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு கொழும்பு துறைமுக நகரின் பொருளாதார ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதற்கமைய இலங்கை சர்வதேச நடுதீர்ப்பு மையத்தினுள் சர்வதேச வர்த்தகப் பிணக்குகள் தீர்வு மையம் ஒன்றை தாபிப்பதற்கான பங்குடைமையை ஆரம்பிப்பதற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, நீதி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளது. இதைத் தவிர அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கும், நீதி அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## 3.7 சிறைச்சாலை அலுவல்கள் பிரிவு

### 3.7.1. அறிமுகம்

சிறைச்சாலை அலுவல்கள் பிரிவினால் சிறைச்சாலை நிருவாகம் பரந்தளவில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு சிறைச்சாலை அலுவலர்களின் தொழில்சார் சிக்கல்களைத் தீர்த்துவைத்து சிறையில் உள்ளவர்கள் விடுதலை பெறும் போது நல்ல பிரசைகளாக சமூகத்தில் இணைக்கும் நோக்கத்துடன் புனர்வாழ்வளிப்பு செயன்முறையை மென்மேலும் முறையான வகையில் மேற்கொள்ளத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், சிறைச்சாலைகளின் நெரிசல் நிலை தொடர்பில் இனங்காணப்பட்டுள்ள பிரதான மாற்றுவழிமுறையாக சமுதாய சீர்திருத்த முறையை விஸ்தரிப்பதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு மற்றும் போதைவஸ்துக்கு அடிமையாகி நீதிமன்றத்தினால் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற ஆட்களை சமூகத்திற்கு பயனுள்ள ஆட்களாக புனர்வாழ்வளிப்பதற்கும், புனர்வாழ்வளிக்கும் காலப்பகுதி நிறைவடைந்து சமூகமயப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களின் வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு பொருளாதார, சமூக மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்தத் தேவையான கொள்கைகளை தயார் செய்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய,பின்வரும் பணிகள் இப்பிரிவினால் அமுல்படுத்தப்படுகின்றன.

I. சிறைச்சாலை மறுசீரமைப்பு நடவடிக்கைகள்
II. உரிமப்பத்திரத்தின் மீது கைதிகளுக்கு விடுதலை அளிக்கும் நடவடிக்கைகள்
III. உரிமப்பத்திர நிபந்தனைகளை மீறும் கைதிகள் பற்றிய நடவடிக்கைகள்
IV. கைதிகளை வீட்டுக்கு விடுமுறையில் அனுப்பும் நடவடிக்கைகள்
V. விடுதலை பெறவுள்ள இளம் தவறாளிகள் சம்பந்தமான நடவடிக்கைகள்
VI. சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலைய்கள் தொடர்பிலான காணிகளை கொள்ளல், சாட்டுதல் செய்துகொள்ளல், உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளல் மற்றும் விடுவித்தல் நடவடிக்ககைள்
VII. சிறைச்சாலைகள் திணைக்களம், புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் நிர்மாணிப்புகள் தொடர்பிலான பணிகள்.
VIII. சிறைச்சாலை அலுவலர்களின் பிணைகளை தீர்மானிப்பது தொடர்பிலான நடவடிக்கைகள்
IX. கைதிகளின் கோரிக்கைகள் சம்பந்தமான நடவடிக்கைகள்
X. சிறைச்சாலை நிறுவனங்களின் கணிப்பீட்டுக் குழுக்கள் பற்றிய நடவடிக்கைகள்
XI. கைதிகளின் மீளாய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள்
XII. கைதிகளின் நெரிசலை குறைப்பதற்கான மீளாய்வு முறையியல் மற்றும் விசேட விடுதலை அளிப்பதற்கான பொறிமுறையை தயார் செய்தல் மற்றும் அதன் கீழ் கைதிகளுக்கு விடுதலை அளித்தல் மற்றும் தண்டனைக் காலத்தை குறைக்கும் நடவடிக்கைகள்
XIII. கைதிகள் மற்றும் போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு பரந்ததொரு முறையியலை தயார் செய்யும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல்.
XIV. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் கீழ் இயங்கிவரும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
XV. அமைச்சின் கீழ் உள்ள சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் மற்றும் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம் தொடர்பான அலுவலர்களின் சகல தாபன மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.

### 3.7.2 2022.01.01 இலிருந்து 2022.09.30 வரையான முன்னேற்றம்

#### 3.7.2.1 நகரத்தின் மத்தியில் தாபிக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளை நகரத்துக்கு வெளியேயுள்ள பிரதேசங்களுக்கு கொண்டு செல்லல்.

மிக அதிகமான கைதிகளின் நெரிசலைக் கொண்ட வெலிகட சிறைச்சாலைத் தொகுதியை களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள ஹொரன பிரதேச செயலாளர் பிரிவின் மில்லனிய பிரதேசத்திற்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டத்தின் கீழ் வெலிகட சிறைச்சாலை, மெகசின் சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, பெண்கள் பிரிவு மற்றும் சிறைச்சாலை வைத்தியசாலை ஆகியவற்றை அக்காணியில் தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிறைச்சாலை தலைமையத்தை பத்தரமுல்ல பிரதேசத்தில் தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டத்தை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் இந்த அமைச்சு ஆகியன இணைந்து அமுல்படுத்துகின்றன.
தங்காலை சிறைச்சாலையை அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேசத்திற்குக் கொண்டு செல்லும் கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு ரூபா மில்லியன் 4656 ஆன தொகை செலவானது.

#### 3.7.2.2 விசேட மன்னிப்பளிக்கும் பொறிமுறையைத் தயார் செய்தல்.

கைதிகளின் நெரிசலை குறைப்பதற்கு பொது மன்னிப்பளிக்கும் கொள்கைசார் செயன்முறைக்கு மேலதிகமாக மீளாய்வு முறையியல் ஊடாக விசேட மன்னிப்பளிக்கும் பொறிமுறையொன்றை தயார் செய்வது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் கீழ் விடுதலை அளிக்க அல்லது தண்டனைக் காலத்தை குறைப்பதற்கு தகுதி பெற்றுள்ள கைதிகளின் தகவல்கள் மற்றும் மரண தண்டனையை ஆயுட் தண்டனையாக மாற்றியமைக்க குழு சிபாரிசு செய்துள்ள கைதிகளின் அறிக்கை இந்த அமைச்சின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### 3.7.2.3 விசேடமாக இனங்காணப்பட்டுள்ள கைதிகளை பலத்த பாதுகாப்பு சிறைச்சாலைகளுக்கு அனுப்புதல்.

சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் இந்த அமைச்சு எதிர்நோக்கியுள்ள பிரதான சவாலொன்றாக இருப்பது சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் குற்றச் செயல்களை வழிநடாத்துவது, போதைவஸ்து வியாபாரம் செய்வது, கப்பம் பெறுவது மற்றும் வேறு சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். தற்போது மேற்படி சட்டவிரோத நடவடிக்கைகள் நல்ல முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இனங்காணப்பட்டுள்ள கைதிகள் பூஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டு பலத்த பாதுகாப்புடனான சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தகவல் கிடைக்கின்ற கைதிகள் பாதுகாப்பான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அங்குனகொலபெலெஸ்ஸ போன்ற சிறைச்சாலைகளில் தடுத்துவைத்து சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை அலுவலர்களின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பின் கீழ் தடுத்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அங்குனகொலபெலெஸ்ஸ, பூஸ்ஸ மற்றும் ஏனைய சிறைச்சாலைகளுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 3.7.2.4 வீரவில போதைவஸ்து புனர்வாழ்வளிப்பு நிலையத்தை தாபித்தல்.

போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி சிறைப்படுத்தப்படுகின்ற கைதிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதானது அதிக சிறைச்சாலை நெரிசலுக்கு முக்கிய காரணமாக இந்த அமைச்சு இனங்காணப்பட்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ் போதைவஸ்துக்களுக்கு அடிமையான தவறாளிகளான ஆட்களுக்கு முறையான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது மிகவும் கடினமானதாகும். இதற்குத் தீர்வாக வீரவில சிறைச்சாலையில் போதைவஸ்துக்கு அடிமையான தவறாளிகளான ஆட்களுக்கு சிகிச்சை

மற்றும் புனர்வாழ்வளிக்கும் நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை ரூபா மில்லியன் 11.5 செலவிடப்பட்டுள்ளது.

### 3.7.2.5 உரிமப்பத்திரத்தின் மீது கைதிகளுக்கு விடுதலை அளித்தல் மற்றும் நன்னடத்தை அடிப்படையில் கைதிகளின் தண்டனைக் காலத்தை தளர்த்தல்.

சிறைச்சாலைக்குள் நன்னடத்தையைக் கொண்ட தமது புனர்வாழ்வு நடவடிக்கைகளை நல்ல முறையில் மேற்கொண்டுள்ள கைதிகள் பெரும் எண்ணிக்கையானோருக்கு விடுதலை அளிப்பது 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய கைதிகளை உரிமப்பத்திரத்தின் மீது விடுதலை செய்தல், நன்னடத்தை அடிப்படையில் கைதிகளின் தண்டனைக் காலத்தை தளர்த்துதல் மற்றும் கைதிகளை வீட்டு விடுமுறைக்கு அனுப்புவதும் மேற்கொள்ளப்பட்டது.

| தொடர் இல. | தண்டனை தளர்த்தப்பட்ட முறை | விடுதலை பெற்ற எண்ணிக்கை 2022.01.01 – 2022.09.30 |
|---|---|---|
| 1. | உரிமப்பத்திரம் மீது விடுதலை செய்தல் | 42 |
| 2. | வீட்டு விடுமுறையில் அனுப்புதல் | 247 |
| 3. | நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்தல் | 227 |
| 4. | விசேட தினங்களில் கைதிகளை விடுதலை செய்தல் | 1017 |

### 3.7.2.6 புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தை நிர்மாணித்தல்

2022 ஆம் ஆண்டில் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தில் பின்வருமாறு நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

| தொடர் இல. | நிர்மாணிப்பு | மொத்த செலவினம் (ரூ.ச.) |
|---|---|---|
| 1. | கந்தக்காடு வைத்தியசாலையின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்யும் சேவை | 2,532,196.96 |
| 2. | கந்தக்காடு நிலையத்தில் மலசலகூடக் கட்டமைப்புக்கள் 03 ஐ நிர்மாணிக்கும் சேவை | 1,849,750.00 |
| 3. | சேனபுர நிலையத்தில் பொலிஸ் விடுதியை நிர்மாணித்தல் | 15,777,000.00 |
| 4. | சேனபுர நிலையத்தில் புனர்வாழ்வு பெறுவோருக்கு குளிப்பதற்கான இடத்தை நிர்மாணித்தல் | 18,735,000.00 |
| 5. | சேனபுர நிலையத்தின் தலைமை அலுவலகம், மற்றைய அலுவலகக் கட்டிடத்தை புதுப்பித்தல் | 3,444,000.00 |
| 6. | இரஹுந்தகெட்டுவெவ புனர்வாழ்வளிப்பு நிலையத்தை சூழ்ந்ததாக பாதுகாப்பு வேலி நிர்மாணித்தல் | 3,884,271.00 |

### 3.7.2.7 சிறைச்சாலை நிருவாகத்தின் மறுசீரமைப்பு.

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளை காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறுமீண்டும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒட்டுமொத்த திணைக்களத்தையும் மீளமைக்க வேண்டியதன் அவசியத்தன்மை இதற்கு முன்னர் இனங்காணப்பட்டிருந்ததனால் அதற்கமைய 2022 ஆம் ஆண்டு தொழில்சார் தகைமைகளைக் கொண்ட பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கையாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பதவியின் வெற்றிடங்கள் 05 ஐ நிரப்புவதற்கு

நேர்முகப் பரீட்சை நடாத்தி முடிக்கப்பட்டு உரிய கோப்புகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் (ஒழுக்கம்) பதவிக்கு 18 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

### 3.7.3. எதிர்காலத் திட்டங்கள்

1. 2020 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை நிலைமையின் காரணமாக சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம், அருகே உள்ள கட்டிடம், நலன்புரிக் கட்டிடம், பிரதான களஞ்சியம், சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் சமையலறை உபகரணங்கள் சேதமடைந்தன. இந்த அமைதியின்மை நிலைமை பற்றி விசாரணை செய்வதற்கென நியமனம் செய்யப்பட்ட ஐவர் கொண்ட குழுவினால் சிறைச்சாலையின் நெரிசலைத் தடுப்பதற்கான சிபாரிசுகள், கைதிகளின் நலன்புரிக்கான சிபாரிசுகள் மற்றும் சிறைச்சாலை நிருவாகம் பற்றிய சிபாரிசுகள் என்ற வகையில் மூன்று விடயங்களின் கீழ் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் போது சிறைச்சாலை நிருவாகத்துக்கான சிபாரிசுகளில் மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படும் போது இடம்பெறக்கூடிய இழப்புக்களை குறைத்துக் கொள்ளக்கூடியவாறு சிறைச்சாலைக்குள் அமைந்துள்ள அலுவலகம், களஞ்சியம் மற்றும் வைத்தியசாலையை சிறைச்சாலை வளவுக்கு வெளியே தாபிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய சேதமடைந்த கட்டிடங்களை சிறைச்சாலைக்கு வெளியே தாபிக்க தேசிய திட்டமிடமிடல் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் அதனை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2. சிறைச்சாலைகளினால் கழிவு நீர் முறையற்ற விதத்தில் அகற்றப்படுவதன் காரணமாக மேற்படி நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களை சூழ்ந்ததாக சூழல் கட்டமைப்புக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்நிலைமை கைதிகளின் துப்பரவேற்பாடு தொடர்பிலும் சிக்கலை உருவாக்கக் காரணமாக அமைந்துள்ளது. இந்நிலைமைக்குத் தீர்வாக சிறைச்சாலை நிறுவனங்களில் மலசல மற்றும் கழிவு நீரை கொண்டு செல்லும் கட்டமைப்பை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்களுக்கான பற்றாக்குறைக்கு தீர்வாக சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் (புனர்வாழ்வு) ஆகிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கும்,II இன் ஜேலர், IIஇன் புனர்வாழ்வளிப்பு அலுவலர் மற்றும் உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் (புனர்வாழ்வு) ஆகிய பதவிகளுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 06/2006 இற்கமைய தயார் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையை அங்கீகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

4. சிறைச்சாலைகளின் நெரிசலை குறைப்பதற்கான மாற்று வழிமுறையாக சமுதாயஞ்சார் சீர்திருத்த செயன்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சமுதாயஞ்சார் சீர்திருத்தத்துக்கு சிறு தவறாளிகளை ஈடுபடுத்துவதன் மூலம் குறித்த நபரின் தொழில், குடும்பம் மற்றுமு் சமூக அந்தஸ்தை பாதுகாப்பது இடம்பெறுகின்றது. உளவியல் மற்றும் உடல்சார் ஆரோக்கியத்தைப் போன்று சிறைப்படுத்தப்படாமை காரணமாக தவறாளிகள் வேறு கடுமையான தவறுகளுடன் சம்பந்தப்படுவது இடம்பெறாமை காரணமாக அவர்கள் திட்டமிட்ட குற்றச்செயல்களை மேற்கொள்ளும் குற்றவாளிகளாக மாறுவதை தடுத்துக் கொள்ள முடியும். எனவே, சிறைச்சாலை நெரிசலை குறைத்துக் கொள்வதற்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தை மென்மேலும் காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொள்ள இந்த அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதன் கீழ் 2023 ஆம் ஆண்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தரவுகளின் எண்ணிக்கையை 15,000 ஆக அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.8 தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு

### 3.8.1 அறிமுகம்

**1) தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் கடமைகள் மற்றும் பணிகள்**

i. நாட்டிற்குள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தினையும் நீடித்த அமைதியையும் மேம்படுத்தல் மற்றும் அதற்கான கொள்கை கட்டமைப்பு ஒன்றினை தயாரித்தல்.
ii. தேசிய ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு தாக்கம் செலுத்தும் தடைகளைக் கண்டறிதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு இடை அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் ஒருங்கிணைத்தல்.
iii. வெளிக்கள ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்.
iv. இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வினை மறுசீரமைப்பதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்சசித்திட்டங்களை அறிமுகம் செய்து செயற்பாட்டினை உயர்த்துதல்.
v. பிரதான தேசிய மொழி மற்றும் இணைப்பு மொழியை பயன்படுத்தி இனங்கிடையிலான கலாசார,சமூக மற்றும் சமய பின்னணியின் பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

**2) தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினூடாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள்**

தேசிய ஒருமைப்பாட்டு பிரிவின் ஊடாக, இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வினை மறுசீரமைப்பதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்பாட்டினை உயர்த்துவதற்கு மற்றும் இனங்களுக்கிடையில் கலாசார, சமூக மற்றும் சமய பின்னணியின் பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதற்குரியதும் இலங்கை சமூகத்தில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் இனக்குழுக்களின் பாரம்பரியம், பரஸ்பரம் மற்றும் கலாசாரம் பாதுகாக்கப்பட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 2021 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட பாதீட்டிற்மைய பிரதான நான்கு கருத்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.8.2 தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டத்தின் முன்னேற்றம் (2021.09.30 திகதியில்)

**1. நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் - செலவினத் தலைப்பு - 110-01-05-02-2509**

வெவ்வேறு இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு, சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய சகவாழ்வு, கலாசாரம், கலை, மொழி, சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகள், விளையாட்டு மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களை வலுவூட்டுதல் போன்ற பரந்த எல்லைக்குள் விரிந்து காணப்படும் நோக்கங்களுடன் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**ஓரங்கட்டப்பட்ட பாடசாலை சிறுவர்களை வலுப்படுத்தல்**

நம் நாட்டு அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி உரிமை வழங்குவதில் பொருளாதாரம், சமூகம், முரண்பாடு அல்லது பன்முகத்தன்மை அல்லது



தெவிநுவர பிரதேச செயலக பிரிவின் ஓரங்கட்டப்பட்ட பாடசாலை சிறுவர்களை வலுப்படுத்துவதற்கு பாடசாலை உபகாணங்களை வமங்குகல்

மதம் அல்லது ஜாதி காரணமாக அல்லது எந்த அநீதியாலும் ஓரங்கட்டப்படுவதை (ஒதுக்கப்படுதல்) தடுப்பதில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

வறுமை, இயலாமை அல்லது வேறு காரணங்களால் ஒதுக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் கஷ்டப்பட்ட பாடசாலையைச் சேர்ந்த குழந்தைகளுக்கு சாதாரண குழந்தைகளைப் போலவே கல்வி வாய்ப்புக்களை வழங்குவதில் பல்வேறு சிரமங்களை எதிர்க்கொள்கின்றனர். அவர்களின் கல்வி தொடர்பான அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் ஓரளவாவது வழங்கப்படும் எனறு எதிர்ப்பார்க்கப்படுகிறது.



கங்க இஹல கோரளை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஓரங்கட்டப்பட்ட பாடசாலை சிறுவர்களை வலுப்படுத்தல் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.

**2 நல்லிணக்கத்தை நோக்காக கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்.- (செலவினத் தலைப்பு 110-01-05-13-2509)**

**பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டம் (குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள்)**

சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களின் மத்தியில் மிகவும் ஆதரவற்ற சூழ்நிலையை எதிர்கொள்ளும் ஒரு குழுவாக பெண்தலைமைத்துவ குடும்பத்தவரை கருதலாம். பெண்தலைமைத்துவ குடும்பத்தில் உள்ள பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் கவனம் செலுத்த வேண்டும். கணவன் இழந்த, விவாகரத்து பெற்ற, கைவிடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட, ஊனமுற்ற, திருமணமாகாத அல்லது பல்வேறு காரணங்களுக்காக கணவனால் பாதுகாக்கப்படாத குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி மற்றும் சுயதொழில் பயிற்சியளித்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம் இவை எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேற்கூறியவை தவிர, போதைப்பொருள் அல்லது மதுவுக்கு அடிமையான கணவர் அல்லது சில சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அல்லது சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு சுயதொழில் உதவி வழங்குதல் இதன்மூலம் மேற்கொள்ளப்படும். வடகிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களுக்கு இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்காக சுயதொழில் உதவியினை வழங்குதல்.

| கால வரையறை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீ தொகை(ரூ) |
|---|---|---|---|
| 2022.01.01<br>2022.09.30 | 89 | 106 | 14,174,764.05 |

**3. நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டம். (செலவினத் தலைப்பு 110-01-05-19-2509)**

குறைந்த வருமானம் மற்றும் குறைந்த வசதிகள் காரணத்தால் ஓரங்கட்டப்பட்டவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணமுடிகிறது. இப்பிரதேசங்களில் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் அதிக எண்ணிக்கையானோர் வாழ்வதோடு, பொருளாதார வலுவூட்டலினூடாக அவர்களின் வாழ்வாதார நிலையினை உயர்த்துவதற்கான வழிமுறைகள் இக்கருத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

அதனூடாக, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதார உயர்த்துவதற்காக 2022.09.30 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கால வரையறை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீ தொகை(ரூ) |
|---|---|---|---|
| 2022.01.01<br>2022.09.30 | 59 | 90 | 4,756,490.00 |



வடகிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண்தலைமைத்து குடும்பங்களுக்கு விவசாய பொருட்களை வழங்குதல்



வடகிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண்தலைமைத்து குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி பொருட்கள் வழங்குதல்

### 3.8.3. 2022.01.01 முதல் 2022.09.30 வரையானகருத்திட்டங்களின் சுருக்கம்

| தொடர் இல | செயல்ப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் | செயல்ப்படுத்தப்பட்ட செயல்முறைகள் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீ தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | ஓரங்கட்டப்பட்ட பாடசாலை சிறுவர்களை வலுப்படுத்தல் | பெற்றோரை இழந்த அல்லது ஒற்றை பெற்றோரை உடைய வறுமையால் அவதியுறும் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் | 15 | பாடசாலை சிறுவர்கள் 902 | 3,149,210.00 |
| 02 | பின்தங்கிய பாடசாலைகளுக்கு | • புத்தக அலுமாரிகளை வழங்குதல் | பாடசாலை | பாடசாலைகள் 03 மாணவர்கள் | 850,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் வழங்குதல் | • தொடர்பு சாதனங்களை வழங்குதல்<br>• நூலக வசதிகளை வழங்குதல்<br>• பாடசாலை பௌதீக வளங்களை வழங்குதல்<br>• தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்<br>• புத்தகங்கள் மற்றும் அலுமாரிகளை வழங்குதல்<br>• மேசைகள் மற்றும் கதிரைகள் வழங்குதல் | கள் 3 | 826 | |
| முழுத் தொகை | | | **18** | | **3,999,210.00** |

### 3.8.4. 2022.09.30 திகதிக்கு ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு சுருக்கம்

| தொடர் இல | செலவினத் தலைப்பு | விபரம் | 2022 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு (ரூ)மில் | 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ)மில் | 2022.09.30 திகதிக்கு செலவிடப்பட்ட ஒதுக்கீட்டு தொகை (ரூ)மில் |
|---|---|---|---|---|---|
| 1. | 110-01-05-02-2509 | சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | 18.00 | 7.77 | 3.99 |
| 2. | 110-01-05-13-2509 | நல்லிணக்கத்தினை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 40.00 | 28.00 | 25.93 |
| 3. | 110-01-05-14-2509 | மாவட்ட ரீதியில் மறுசீரமைப்பு குழுக்களை அமைத்தல் | 15.00 | 2.33 | 4.81 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | 110-01-05-19-2509 | நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டம் | 24.00 | 7.61 | 4.76 |
| | | **மொத்தம்** | 97.00 | **45.71** | **39.48** |

**3 தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவினால் செயற்படுத்தப்படும் விசேட கருத்திட்டம்**

### 3.8.5. 2022.09.30 திகதிக்கு ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு சுருக்கம்

### 3.1 நீதிக்கான அணுகல் - நடமாடும் சேவை
(Access to Justice-Mobile Service)



வட மாகாணத்தில் நீதிக்கான அணுகல் - நடமாடும் சேவையினை செயற்படுத்தப்பட்டது. (யாழ்ப்பாணம்)

இலங்கையர்கள் எனும் போது பல்லினங்கள், பல் கலாசாரங்கள், பன் மதங்கள் மற்றும் பன்மொழிகளால் ஆன பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள். அவ் மக்கள் குழுக்களுக்கிடையே தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவது நீதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அப் பணியினை மேலும் வெற்றியடைய செய்வதற்காக அனைத்து இலங்கையர்களும் ஒரே தேசமாக எழுதல் வேண்டும். அதன்பிரகாரம் அனைத்து பிரஜைகளினாலும் இனம், மதம், கலாசாரம் மற்றும் மொழி வகையில் நிகழும் பன்மைத்தன்மையினை இனங்கண்டு சட்டத்தை மதிக்கும் சமுதாயத்தினை கட்டியெழுப்புவதுடன் சமூக நியாயத்திற்காக சட்டத்தை செயற்படுத்துதல், சட்டத்தினை பாதுகாத்தல் மற்றும் சட்டத்தினை செயற்படுத்தும் நிறுவனங்கள், உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சட்டத்திற்கு கீழ்ப்படியும் சூழலை உருவாக்குதல் வேண்டும்.



வட மாகாணத்தில் நீதிக்கான அணுகல் - நடமாடும் சேவையினை செயற்படுத்தப்பட்டது. (கிளிநொச்சி)

அச்சூழலை உருவாக்குவதற்காக தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவினால் அனைத்து இனப்பிரிவுகளுக்கும் அத்தியாவசியமான சட்டரீதியான ஆலோசனைகள் மற்றும் சட்ட ஆவணங்களை வழங்குவதற்காக நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்கு இணையான நிகழ்ச்சித்திட்டங்களும் வடமாகாணத்தில் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது நீதி அமைச்சின் கீழ் செயற்படுத்துவதற்கு வெளிநாட்டு உதவி கருத்திட்டமான

SOCIAL COHESION AND RECONCILIATION PROGRAM (SCORE) (USAID), STRENGTHENING RECONCILIATION PROGRAM IN SRI LANKA (SRP )(GIZ) கருத்திட்டங்களுக்கான நிதி உதவி மற்றும் மாவட்டச் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்த நடமாடும் நிகழ்ச்சித்திட்டம் மூலம் சுமார் 2900 பயனாளிகள் சமூகமளித்து சேவைகளை பெற்றுச் சென்றுள்ளனர். பொதுமக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்குவதற்காக நீதி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு மேலதிகமாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, சிறுதொழில் அபிவிருத்தி பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியன நடமாடும் சேவைக்கு சேவைகளை வழங்கி செயற்பாட்டு ஆதரவினை வழங்கியது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தினால் காணாமல் போனோர் தொடர்பான நட்டஈட்டு உரிமையை பூரணப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்கள், நட்டஈட்டு உரிமையைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவது. தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள முழுமையற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களை இற்றைப்படுத்துதல் நட்டஈட்டினை பெற்றுக்கொள்வதற்காக காணாமல் போனமைக்கான சான்றிதழை வழங்குவதற்கான சிபார்சினை பெற்றுக்கொள்ளுதல் விசேடமாக காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினால் வழங்கப்பட்ட சேவைகளில் ஒன்றாகும்.

அதற்கு மேலதிகமாக இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் ரூபா.10 மில்லியன் இழப்பீட்டு காசோலையை 996 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன், 820 முழுமையற்ற கோவைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூபா.550,000 வாழ்வாதார உதவியாக 11 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவைக்கு இணையாக நீதி அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் செயற்படும் நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் கீழ் மட்டத்திலுள்ள அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டும் 05 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

அவ்வாறே அதற்கு இணையாக வட மாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களிலும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினால் விசாரணை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் அங்குள்ள 328 விசாரணைகள் அந்த நிறுவனங்களினால் நிறைவு செய்ய முடிந்தது. சட்ட உதவி ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட சட்டம் தொடர்பான அடிப்படை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வூட்டப்பட்டதுடன் 900 பேர் பங்குபற்றியிருந்தனர்.

வடமாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலாளர்களுடன் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அது தொடர்பான அமைச்சுகளின் உடனடி கவனத்திற்கு கொண்டுசெல்வதற்குரிய கீழே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன.

- வனவிலங்கு சரணாலயம் மற்றும் வனப்பாதுகாப்பு எல்லை தொடர்பான பிரச்சினை
- வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்
- காங்கேசன்துறை மற்றும் தூத்துக்குடிக்கு இடையிலான போக்குவரத்துக்காக படகு சேவையினை செயற்படுத்துதல்
- யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தினை விஸ்தரிப்புச் செய்தல்
- சட்டவிரோதமாக மணல் அகழ்வினை தடுத்தல் (கிளிநொச்சி)
- காணி தொடர்பான பிரச்சினை

மேற்குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் 2022 மார்ச் மாதம் கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்களினதும் கௌரவ நீதி அமைச்சர் அவர்களினதும் தலைமையில் கலந்துரையாடப்பட்டதுடன் 2022.08.25ம் திகதி கௌரவ நீதி அமைச்சர் அவர்களின் தலைமையில் பின்னூட்டக் கூட்டம் நடாத்தப்பட்டது. மேலும், கௌரவ நீதி அமைச்சினால் மே மாதத்தில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கள அவதானிப்பு சுற்றுலாவின் போது இந்தியா அகதிகளின் மீள் குடியேற்றம் தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. அதன்பிரகாரம், அதற்காக விசேட குழு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டு அது தொடர்பான பிரச்சினைகளுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.9 நிதிப் பிரிவு

### 3.9.1. நிதிப் பிரிவின் செயற்பணி :

நிதி அமைச்சு, நீதிமன்ற நிருவாகம், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம் தொடர்பிலான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பிலான கணக்குகளைப் பேணிவருவது நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது,

1. வினைத்திறன்மிக்க மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பிலான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்
3. நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நிதியைப் பயன்படுத்தல்.
4. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு
5. கணக்கீடு மற்றும் அறிக்கையிடல்
6. கணக்காய்வு வினாக்களுக்கான விடைகளை வழங்குதல் மற்றும் பாராளுமன்ற குழுக்கள் போன்றவற்றுக்குத் தேவையா தகவல்களை தயார் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.9.2. நிதிப் பிரிவின் உப பிரிவுகள் :

மேலுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக நிதிப் பிரிவு பின்வரும் 04 உப பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்றது.

1. கொடுப்பனவு
2. நீதிமன்ற நிருவாகம்
3. கணக்குகள்
4. பெறுகை

மேற்படி ஒவ்வொரு பிரிவினதும் பணிகள் பின்வருமாறாகும்.

#### 1. கொடுப்பனவுப் பிரிவின் பணிகள்

1. 110 - நீதி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் தொடர்பிலான சகல கொடுப்பனவு நடவடிக்கைகளும்
   - i. அமைச்சர் பதவியணி
   - ii. அமைச்சின் நிருவாகம்
   - iii. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
   - iv. தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க பிரிவு
   - v. தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாடு
   - vi. சிறைச்சாலை அலுவல்கள் பிரிவு
2. சம்பளம் தயார் செய்யும் நடவடிக்கைகள்
3. செலவுப் பேரேட்டுக் கட்டுப்பாடு
4. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பில் கட்டுப்பாட்டு நாயத்திற்குத் தேவையான அறிக்கைகளை வழங்குதல்.
5. மாதாந்த கணக்குக் பொழிப்புகளை திறைசேரிக்கு அறிக்கையிடல்
6. கட்டுநிதி முகாமைத்துவம்

## 2.நீதிமன்ற நிருவாகப் பிரிவின் பணிகள்

1. 228 – நீதிமன்ற நிருவாக செலவுத் தலைப்பின் கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் தொடர்பிலான கணக்கு நடவடிக்கைகள்
    i. நீதிமன்ற நிருவாகம்
    ii. தொழில் நியாயசபைகள்
2. நீதிமன்ற வலயங்கள் 26 இன் கணக்கு நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.
3. நீதிமன்றங்களின் தேவைகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் கட்டுநிதியை விடுவித்தல்
4. நீதிமன்றங்களின் வருமானங்கள் மற்றும் செலவினங்களை மாதாந்த கணக்குப் பொழிப்பு மூலம் திறைசேரிக்கு அறிக்கையிடல்
5. சொத்துக்களின் மாற்றங்கள் தொடர்பில் கணக்குகளில் பதிவு செய்து அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடல்
6. உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை வழிநடாத்துவதற்கு தத்துவமளித்தல்
7. உள்ளக மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு வினாக்களுக்கு விடையளித்தல்.
8. அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நீதிமன்றக் கட்டிடங்களின் நிர்மாணிப்புகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகள்.

### 3. கணக்குகள் பிரிவின் பணிகள்

1. 110 மற்றும் 228 இற்கு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்தல்.
2. வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல்
3. அரசாங்க அலுவலர்களின் முற்பண ''பீ'' கணக்கு தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. செலவினங்களை மீளாய்வு செய்து வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
5. திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிசார் மற்றும் கணக்கு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
6. வருடாந்த பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஏலம் விடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்குதல்.
7. நீதிமன்றங்களினால் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்குதல்.

### 4. பெறுகை பிரிவின் பணிகள்

1. அமைச்சின் சகல பொருட்கள் மற்றும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள்
2. நீதிமன்றங்களுக்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்யத் தேவையான ஏற்பாடுகளை விடுவித்தல்
3. நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்தல்.
4. பெறுகை குழுவின் செயலாளர் என்ற வகையில் குறித்த கூட்டங்களை ஒழுங்கு செய்தல், அறிக்கைகளைத் தயார் செய்தல் மற்றும் அங்கீகாம் பெற்றுக் கொள்ளல்.

### 3.9.3. 2022.09.30 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்

**செலவுத் தலைப்பு 110 – நீதி அமைச்சு**

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கான செலவினம் (ரூ.மி.) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 2,686.5 | 1,324.3 | 49.29% |
| மூலதன செலவினம் | 5,519.6 | 675.97 | 12.25% |
| **மொத்தம்** | **8,206.1** | **2,000.27** | **24.38%** |

**செலவுத் தலைப்பு 228 – நீதிமன்ற நிருவாகம்**

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கான செலவினம் (ரூ.மி.) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 8,748.45 | 6,471.02 | 73.72% |
| மூலதன செலவினம் | 2,200.15 | 1,224.14 | 55.64% |
| **மொத்தம்** | **10,948.60** | **7,695.16** | **70.28%** |

**வருமானம் சேகரித்தல் - செலவுத் தலைப்பு 228 நீதிமன்ற நிருவாகம்**

| வருமான விபரம் | 2022 மதிப்பீடு (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கு வருமானம் சேகரித்தல் (ரூ.மி.) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| தண்டப்பணம் மற்றும் அரசுடைமையாக்குதல் பற்றிய வருமானம் சேகரிப்பு | 800 | 966.74 | 120.84 |
| வட்டி வருமானம் | 40 | 41.93 | 104.83 |
| விற்பனைக் கட்டணம் - ஏனைய பெறுகைகள் | 70 | 107.62 | 153.74 |
| விற்பனைக் கட்டணம் - நிருவாக ரீதியான கட்டணங்கள் - நானாவித | 150 | 172.14 | 114.76 |
| கட்டிட வாடகை | 35 | 30.52 | 87.19 |
| நிலையான சொத்து விற்பனை ஏனையன | 12 | 14.49 | 120.77 |
| **முழு மொத்தம்** | **1,107** | **1,333.44** | **120.46** |

**வைப்புக்களின் பெறுகை மற்றும் கொடுப்பனவு - செலவுத் தலைப்பு 228 நீதிமன்ற நிருவாகம்**

| விபரம் | 2022.09.30 ஆம் திகதிக்கு வைப்புக்களின் பெறுகை (ரூ.மி.) | 2022.09.30 ஆம் திகதிக்கு வைப்புக்களை செலுத்தல் (ரூ.மி.) |
|---|---|---|
| பிணை வைப்பு | 619.11 | 258.41 |
| மூன்றாம் தரப்பினர்களுக்கு மீளச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்துவைக்கப்பட்ட வைப்புக்கள் | 4,478.52 | 3,3619.77 |
| மாகாண சபைகளுக்கு வருமானங்களை அனுப்புதல் | 3,151.82 | 2,808.14 |
| ஒப்பந்த வைப்புக்கள் | 104 | 25.82 |
| **கேள்வி வைப்புக்கள்** | **3.01** | **3.06** |
| **முழு மொத்தம்** | **8,356.46** | **36,715.20** |

### 3.9.4. 2022.09.30 ஆம் திகதிக்கு பெறுகை நடவடிக்கைகளின் முன்னேற்றம்

01. 2022 ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் அமைந்தள்ள நீதிமன்றங்களில் கைவிரல் அடையாள இயந்திரங்களை புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் நடவடிக்கைகளுக்குத் தேவையான பெறுகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. புதிய 11 நீதிமன்றங்களுக்கு தளபாடம் மற்றும் கணினி அம்சங்களை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றி மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூ.மி. 21 செலவிடப்பட்டுள்ளது,

03. நீதிமன்றங்களின் தளபாடம் மற்றும் அலுவலகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2022.01.01 ஆம் திகதி முதல் 2022.09.30 ஆம் திகதி வரை பெற்றுக் கொடுக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் அளவுகள் பின்வருமாறாகும்.

நீதிமன்றங்களுக்கு ரூ.மி. 12

தொழில் நியாய சபைகளுக்கு ரூ.மி. 1

## 3.10 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள், மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை, நீதிபதிகள் பயிற்சி நிறுவகம் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகிய நியாயாதிக்க நிறுவனங்கள், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை, புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம் ஆகிய நிறுவனங்கள், அமைச்சின் செலவுத் தலைப்பின் உதவிக் கருத்திட்டமொன்றாக இயங்கிவருகின்ற மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதி நிருவாக செலவுத் தலைப்பின் கீழ் இயங்கிவருகின்ற மேல் நீதிமன்றங்கள், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேற்படி செலவுத் தலைப்பின் உதவிக் கருத்திட்டமொன்றாக இயங்கிவருகின்ற தொழில் நியாய சபைகள் செயலகங்கள் ஆகியவற்றின் கணக்காய்வு நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளகக் கணக்காய்வின் போது முறைமைசார் கணக்காய்வு சம்பந்தமாக விசேட கவனத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2022 ஆம் ஆண்டுக்கு எமது பிரிவினால் தயார் செய்யப்பட்ட அச்சுறுத்தல் அடிப்படையிலான உள்ளகக் கணக்காய்வு திட்டத்திற்கு அமைய 2022 சனவரி 01 முதல் 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை பின்வரும் கணக்காய்வு விசாரணைகள் நடாத்தப்பட்டன.

- 05 மேல் நீதிமன்றங்கள்
- 09 மாவட்ட/நீதவான் நீதிமன்றங்கள்
- 04 மாவட்ட நீதிமன்றங்கள்
- 12 நீதவான் நீதிமன்றங்கள்
- 04 குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள
- 03 திணைக்களங்கள்
- நீதி அமைச்சில் 04
- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகம்
- காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
- விசேட விசாரணைகள் 10
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02

2022 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு கணக்காய்வு விசாரணைகள் 53 ஐ மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக அத்திகதிக்கு 44 கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டன.
உள்ளகக் கணக்காய்வின் போது குறிப்பாக முறைமை கணக்காய்வு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதுடன்,உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகப் பரிசோதனை தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. கணக்காய்வு அலகுகள் 243 இல் கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கைக்கு மத்தியில் தேவைப்பாட்டுக்கு அமைய அச்சுறுத்தல் முன்னுரிமை அடிப்படையில் கணக்காய்வுகள் திட்டமிடப்படுகின்றன.

அடுத்து வரும் காலாண்டில் திருத்திய கணக்காய்வுத் திட்டமொன்றை தயார் செய்து கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்துவதற்கும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், திருத்திய கணக்காய்வு திட்டத்திற்கு அமைய எஞ்சியுள்ள கணக்காய்வுகள் நடாத்தப்படவுள்ளன.

## 04. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை

### 4.1 சட்டமா அதிபர் திணைக்களம்

**நோக்கு**

இலங்கைக்காகவும் அங்கு வாழ்கின்ற சகல மக்களுக்காகவும் நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்காக பயனுள்ளவாறு பதிலளிக்கும் செயற்பாட்டின் முன்னோடி அரச நிறுவனமாக செயல்படுதல்

**பணி**

- இலங்கையின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்புடனும் அபிமானத்துடனும் நேர்மையாகவும் செயலாற்றுதல் மற்றும் எம்மால் இயன்றளவில் இலங்கை மக்களுக்கு சேவை செய்தல்
- சமுதாய மற்றும் பொருளாதார சுபீட்சம், சம சந்தர்ப்பங்கள் மற்றும் மனிதநேயத்தை ஊக்குவிக்கும் முயற்சியின் போது இலங்கை மக்களுக்காக நீதி, பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரபட்சமின்றியும் நீதியாகவும் இலங்கையின் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முயற்சிக்கும்.

**நோக்கம்**

- இலங்கை அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காகத் தேவையான சகல சட்ட முறையான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை உடனடியாக வழங்கல் மற்றும் அரசாங்கத்தின் விரிவான குறிக்கோள்களை விஸ்தரிப்புச் செய்யும் செயற்பாட்டின் போது விசேடித்த பணியொன்றை நிறைவேற்றுதல்.

#### 4.1.1 அறிமுகம்

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட ஆலோசகர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது “ஏ” வகுப்பு திணைக்களம் என்பதுடன் நீதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரச பங்களிப்பு நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்கூறப்பட்ட அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா

அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, மேலதிக அவசரகால சட்டத்தின் கீழ் கடமைகளை மேற்கொள்ள மேலதிக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற அலகு ஆகியன தாபிக்கப்பட்டுள்ளன.

### 4.1.2 சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள்

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கல்
- உயர் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல்
- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- குற்றவியல் பிரிவு
- சிவில் பிரிவு
- அரச சட்டத்தரணிகள் பிரிவு
- உயர் நீதிமன்றப் பிரிவு
- கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இனங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- பொதுமக்கள் மனு அலகு (இப் பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப் பிரிவு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத் திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

### 4.1.3 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு பிரிவுகளினதும் முன்னேற்றம்

| பிரிவுகள் | வழக்குகளின் வகைகள் | 2021 இல் உள்ள வழக்குகள் | 2022.01.01-2022.09.30 கோவையிடப்பட்ட வழக்குகள் | 2022.09.30 முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் | 2022.09.30 இல் மீதியாகவுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| சிவில் * | CE/MC | | 73 | 00 | |
| | CA/LT | | 08 | 00 | |
| | CA/MC | | 06 | 01 | |
| | மொத்தம் | | **87** | **01** | |
| | CA/DC | அரச சட்டத்தரணிகள் | 351 | அரச சட்டத்தரணிகள் | அரச சட்டத்தரணிகள் |
| | CA/HC | | 346 | அரச சட்டத்தரணிகள | |
| | CA/CA | | 460 | அரச சட்டத்தரணிகள | |
| அரச சட்டத்தரணிகள் | சிவில் பிரிவிலிருந்து - எல் | **11,589** | **1,208** | **896** | **11,901** |
| குற்றவியல் | குற்றவியல | **6,390** | **2,076** | **2,065** | **(6401-92)** 6,309** |
| உயர் நீதிமன்றப் பிரிவு | SC FR, SC Writ, SC SD<br>SC Contempt of court | 847 | 442 | 244 | **1,045** |
| கூட்டுத்தாபனப் பிரிவு | ஓப்பந்தங்கள் மற்றும் அறிவுரைகள் | **8134** | **1912** | **988** | **9058** |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | சிறுவர் துஷ்பிரயோகம் | **2,448** | **(1,484 +1129) 2613** | **2,046** | **3,015** |
| பொது மக்கள் மனுக்கள் பிரிவு | குற்றவியல/ சிவில் | **1,258** | 949 | 772 | **1,435** |
| மொத்தம் | | **30,666** | **9,315** | **7,012** | **(32,941-92)32,849** |

*சிவில் பிரிவில் இருந்து முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. CA/DC, CA/HC & CA/CA இவைகள் சிவில் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டு அரச சட்டத்தரணிகள் பிரிவில் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

** 01/01/2022 முதல் 15/08/2022 வரையிலான முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைக் கோப்புகள் அல்ல எனவே 92 கழிக்கப்பட்டுள்ளது.

***சிவில் பிரிவில் பதியப்பட்ட அதிகமான வழக்குகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றன என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

### 4.1.2 2022.01.01 - 2022.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூபா மில்) | 2022.09.30 வரையான செலவு (ரூபா மில்) | 2022.09.30 நிதி ரீதியான முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 1,593.63 | 1,165.42 | 73.13% |
| மூலதன செலவினம் | 273.81 | 93.75 | 34.24% |
| **மொத்தம்** | **1,867.44** | **1,259.17** | **67.43%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.2. சட்ட வரைஞர் திணைக்களம்

**நோக்கு**

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்குத் துணைபுரிதல்.

**பணி**

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

### 4.2.1 அறிமுகம்

இத்திணைக்களமானது, அமைச்சின் விடயங்களும் அமைச்சின் கடமைகளும் தொடர்பில் 2020.08.09 ஆந்தேதிய 2187∴27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதியமைச்சின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முடிபுகளுக்கும் இணங்கப் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுகின்ற நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வுசெய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

**4.2.2. சட்டமூலங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைஞர் திணைக்களத்தின் பிரதான பணிகள் பின்வருமாறாகும்:-**

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கு மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதலும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதலும்ளூ

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து) அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்ளூ

(3) சட்டங்களைத் வரைதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்ளூ

(4) அவசியமானவிடத்து மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்ளூ

(5) தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களை (கூட்டிணைத்தற் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

(6) சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும், மாகாணசபை நியதிச சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின்கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின்மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின்மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம், வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

### 4.2.3 2022.01.01 இலிருந்து 2022.09.30 வரையான முன்னேற்றமீளாய்வு

#### 4.2.3.1 வேலைகள் முடித்துக்கொண்டுள்ள கோவைகளின் விபரம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | 01.01.2022 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட சட்ட மூலங் களாகச் சமர்ப்பிக்கப்பட்டு,ஆனால் சட்டத் துறைத் தலைமை யதிபதியினது அல்லது ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங் களினதும் அவதானிப்புகள் அல்லதுஅறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவுள்ளகோரிக்கைகளின் எண்ணிக்கை | 2022.01.01 அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன் கொணர்ந்த மீதி) | ஆண்டினுள் திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | இவ்வாண்டிலும் முன்னையஆண்டுகளிலும் மூன்று மொழிகளிலும் பூரத்தி செய்யப்பட்டு இயைபானதிறத்தவர்களுக்குதிருப்பிஅனுப்பப்பட்டவையும் மற்றும் மேலதிகதிருத்தங்களுக்காகபுதியஅறிவுறுத்தல்களுக்காக மீள்அனுப்பப்படவையும் | மொத்தம் |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும் .சட்டவாக்கங்களின் திருத்தமும்) | 202 | 29 | 30 | 05 | 266 |
| தனிப்பட்டஉறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்) சட்டமூலங்கள் | 13 | 13 | 14 | 02 | 42 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலைமற்றும் திருத்த) | 125 | 48 | 134 | 19 | 326 |
| மாகாணசபைகளின்.நியதிச்சட்டங்கள் | 09 | 01 | 01 | 0 | 11 |
| **மொத்தம்** | 349 | 91 | 179 | 26 | 645 |

| | (7) | (8) | (9) | | (10) |
|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட்டு 30.09.2022 இயைபான திறத்தவர்களுக்கு திறத்த வர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டவையுமான கோரிக்கைகள் (பலதடவைகள் வெளியே அனுப்பப்பட்டவையுமான இறுதி வரைவுகள், ஒவ்வொரு தடவையும் அனுப்பப்பட்ட வரைவு உள்ளடங்கலாக | நீண்டகாலமாக அறிவுறுத்தலின் மையால் மூடப் பபட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 30.09.2022 அன்றுள்ளவாறு முதனிலை அல்லது பூர்த்தி செய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டமாதிபர் அல்லது ஏனைய அமைச்சுககளினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லது அறிவுறுத்தல்களுக்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளவையுமான கிடைக்கப்பெற்றுள்ளவையுமான கோரிக்கைகளின் எண்ணிக்கை | | 30.09.2022 அன்றுள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வரைவுகள் தொடர்பிலான கோரிக்கைகளின் எண்ணிக்கை |
| | | | சட்டமாதிபர் | ஏனைய அமைச்சுககளினதும் திணைக்களங்களினதும் | |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும் சட்டவாக்கங்களின் திருத்தமும்) | 45 | 70 | 20 | 103 | 28 |
| தனிப்பட்டஉறுப்பினர்களின் (கூட்டிணைத்தல்)சட்டமூலங்கள் | 03 | 0 | 31 | | 08 |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் திருத்தம். (முதனிலைமற்றும் திருத்த) | 148 | 22 | 114 | | 42 |
| மாகாணசபைகளின் நியதிச்சட்டங்கள் | 0 | 0 | 11 | | 0 |
| **மொத்தம்** | 196 | 92 | 279 | | 78 |

### 4.2.4. 01.01.2022 தொடக்கம் 30.09.2022 வரையான காலப்பகுதியில் வேண்டுகோள்கள் மற்றும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள்

| கோவைகள் | 01.01.2022 தொடக்கம் 2022.09.30 வரையான காலப் பகுதியில் வேண்டுகோள்கள | மும்மொழிகளில் அனுப்பப்பட்ட சட்டங்கள் |
|---|---|---|
| சட்டமூலங்கள் வரைதல் | 30 | 45 (இந்த வருடத்திற்கு முந்திய வருடங்களிலும் 2022 வருடத்தில் கிடைக்கப்பெற்ற கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது) |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் | 14 | 03 |

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட சட்டங்கள் | | (இந்த வருடத்திற்கு முந்திய வருடங்களிலும் 2022 வருடத்தில் கிடைக்கப்பெற்ற கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது) |
| துணைநிலை சட்டங்கள் (கட்டளைகள், சட்டங்கள், நியதிகள்) | 134 | 148 (இந்த வருடத்திற்கு முந்திய வருடங்களிலும் 2022 வருடத்தில் கிடைக்கப்பெற்ற கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது) |
| மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள் | 01 | 0 |
| **மொத்தம்** | **179** | **196** |

### 4.2.5. 2022.01.01 இலிருந்து 2022.09.30 வரையிலான நிதி முன்னேற்றறிக்கை

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாடுகள் (ரூபா.மி) | 30.09.2022 அன்றுள்ளவாறான செலவினம் (ரூபா.மி) | 30.09.2022 அன்றுள்ளவாறான முன்னேற்றறிக்கை % |
|---|---|---|---|
| மீண்டும் வரும் செலவினம் | 135.68 | 96.55 | 71% |
| மூலதனச் செலவினம் | 1.15 | 0.005 | 0.44% |
| **மொத்தம்** | **136.83** | **96.55** | 70.56% |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.3 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1969ம் ஆண்டின் 03ம் இலக்க இலங்கை சட்டஆணைக்குழு சட்டத்தின்மூலம் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பிரதான அரசாங்க நிறுவனமாகும். சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் பிரதான பணி தேவையான நிருவாக மற்றும் ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதாகும்.

**நோக்கு**

- நல்லாட்சிக்காக சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல்.

**செயற்பணிகள்**

- சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்துவதற்காக 1969 ம் ஆண்டின் 03 ம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்தல்.

### 4.3.1 நோக்கமும் தொழிற்பாடுகளும்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் சட்ட மறுசீரமைப்பை விருத்திசெய்வதாகும். அதற்காக சட்டஆணைக்குழு பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

I. சட்டத்தை குறியீடுசெய்தல்
II. முரண்பாடுகளை ஒழித்தல்
III. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல்
IV. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
V. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
VI. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
VII. மறுசீரமைப்பதற்காக காலத்திற்குகாலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்
VIII. ஏனைய நாடுகளின் சட்டமுறை சம்பந்தமான தகவல்களை பெறல்
IX. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதை, பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
X. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கை முறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகத் தயார் செய்தல்.
XI. சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியமொழிகளில் சட்டத்தை குறியீடுசெய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

### 4.3.2 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான முன்னேற்றம்

| நீதிமன்றங்கள் சட்டத்தை மழுங்கடிப்பது குறித்த முன்மொழியப்பட்ட பரிந்துரையின் வரைவாளரால் மசோதா மீதான விசாரணைகள் | |
|---|---|
| பின்னணி | MOJ(L)497/2021 இல 30/06/2022 தேதியிட்ட கடிதம் நீதி அமைச்சகத்தின் கோரிக்கையின் பேரில் விவாதிக்கப்பட்டது. |
| தற்போதைய நிலை | இவ் வரைவு தொடர்பான சட்ட ஆணையத்தின் பரிந்துரை 2022.07.22 ஆம் தேதி நீதி அமைச்சின் சட்டப்பிரிவுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. |
| **நீதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட போக்குவரத்துச் சட்டம் குறித்த உத்தேச சட்டம்** | |
| பின்னணி | சட்ட ஆணைக்குழுவால் முன்மொழியப்படும் என எதிர்பார்க்கப்படும் திருமணச் சட்டத்தில் கொண்டு வரப்படும் திருத்தங்களுக்கு முன்னர் சட்ட ஆணைக்குழுவின் தலைவர் தற்போது முன்மொழியப்பட்டுள்ள நீதி அமைச்சின் வரைவை ஆய்வு செய்ய |

| | |
|---|---|
| | வேண்டும் என பரிந்துரைத்தார. |
| தற்போதைய நிலை | வரைவு குறித்து விவாதிக்கப்பட்டது.<br>விவாகரத்து, பாதுகாவலர் மற்றும் இழப்பீடு ஆகியவற்றுக்கான நடைமுறையை முன்மொழிய வேண்டும் என்பது தலைவர் உள்ளிட்ட சட்ட ஆணையத்தின் கருத்து.<br>சட்ட ஆணைக்குழு புதிய தீர்மானத்தை முன்வைக்க உத்தேசித்துள்ளதாக மாண்புமிகு நீதி அமைச்சருக்கு தெரிவிப்பதாக சட்ட ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.<br>அதன்படி, செப்டம்பர் 5, 2022 அன்று, ZOOM தொழில்நுட்பத்தின் மூலம் இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சட்ட ஆணையக் கூட்டம் பயன்படுத்தப்பட்டது. |
| **சமூக ஊடகங்களில் சட்டம் மற்றும் தனியுரிமைக்கான உரிமை பற்றிய முன்மொழிவுகள்** | |
| பின்னணி | சமூக ஊடகங்கள் மற்றும் தனியுரிமைக்கான சட்டத்தில் புதிய சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும் என்று சட்ட ஆணைக்குழு பரிந்துரைத்தது. |
| தற்போதைய நிலை | 15 செப்டம்பர், 2022 அன்று, ZOOM தொழில்நுட்பத்தின் மூலம் இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சட்ட ஆணைக்குழுக் கூட்டம் பயன்படுத்தப்பட்டது. |
| **தனியுரிமைக்கான உரிமை** | |
| பின்னணி | தனிப்பட்ட சூழ்நிலையில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை அதில் உள்ளவரின் அனுமதியின்றி சமூக வலைதளங்களில் வெளியிடுவதன் சட்ட நிலை குறித்து விசாரித்தல் |
| தற்போதைய நிலை | ஒப்பந்த மற்றும் வணிக அடிப்படையில் ஒரு நபரின் படத்தை சேதப்படுத்துதல்.<br>கட்சிகளுக்கு இடையிலான பொறுப்பு மற்றும் கடமைகளின் தன்மை<br>• பொது நபர்கள் - பத்திரிக்கை சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் உரிமையில் சமரசம் செய்யக்கூடாது.<br>• வணிக அடிப்படையில் பயன்படுத்தவும்.<br>• ஒருவரின் தனிப்பட்ட உருவத்திற்கு தீங்கு விளைவிக்கும் நோக்கம்<br>• பாலியல் உள்ளடக்கத்தின் புகைப்படங்கள் மூலம் அச்சுறுத்தல்<br>• தீங்கு விளைவிக்கும் நோக்கம் நிரூபிக்கப்பட வேண்டும்.<br>• சமூக ஊடகங்கள் பற்றிய புதிய தலைமுறையின் நேர்மறையான பார்வைகள் ஒடுக்கப்பட வேண்டும்.<br>• புதிய தொழில்நுட்ப கணினி மென்பொருளின் நேர்மறையான நன்மைகளுக்கு தீங்கு விளைவிக்காத நெகிழ்வான விதிகள் இருக்க வேண்டும். |

### 4.3.2 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கம் (ரூபா. மில்.) - 2022 | 2022-09-30 செலவு (ரூபா. மில்.) | 2022-09-30 (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 17.70 | 11.20 | 63% |
| மூலதன செலவினம் | 1.21 | 0.081 | 7% |
| **மொத்தம்** | **19** | **11** | **70%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.4 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

**நோக்கு**

**நியாயமான சட்டத்தை மதிக்கின்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்**

**செயற்பணிகள்**

**நீதிமன்றங்கள், சட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்ட மருத்துவ, மற்றும் உணவு விஞ்ஞானம் பற்றிய பகுப்பாய்வு, அறிவுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்.**

### 4.4.1. அறிமுகம

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களமானது, சட்ட விஞ்ஞானப் பிரிவு மற்றும் உணவு விஞ்ஞானப் பிரிவு ஆகிய பிரதான இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், இது இலங்கையிலுள்ள ஒரே அரச தடயவியல் சட்ட ஆய்வுகூடமாகும். வெடிமருந்துகள், தீப்புலனாய்வு, எரிபடைத்துறை, போதைவஸ்து, நீர்ப்பாயவியல் மற்றும் DNA, நஞ்சியல், சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள், கணினி டிஜிட்டல் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பல்வேறு வழக்குப் பிரிவு ஆகிய பிரதான எட்டுப் பிரிவுகளைக் கொண்டதாக சட்ட விஞ்ஞாபனப் பிரிவு இயங்கிவருகின்றது.

இந்தத் திணைக்களம் சேவைகளுக்கான நிறுவனமொன்றாகும் என்பதுடன், நீதிமன்றம், பொலிஸ் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதார திணைக்களம், துறைமுக அதிகாரசபை மற்றும் வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வழக்குத் தடயப்பொருட்கள் மற்றும் வேறு மாதிரிகளை விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்து பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்கிவருகின்றது. இதற்கு மேலதிகமாக பல்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உணவு, மதுபானம், பால் மற்றும் நீர் சார்ந்த மாதிரிகளின் தன்மையை பரிசோதனை செய்து அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் நீதிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான ஆவணங்களைப் பரிசோதித்து அறிக்கைகளை சமர்ப்பிப்பது சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், நாட்டில் இடம்பெறுகின்ற கொலைகள், வன்புணர்ச்சி, துப்பாக்கிப் பிரயோகம், தீவிபத்து, பயங்கர வீதி விபத்துக்கள் போன்ற பயங்கரமான குற்றச் செயல்கள் சம்பந்தமான குற்றவியல் இடங்களை ஆய்வு செய்வதற்கு அலுவலர்களின் நிபுணத்துவ உதவியும் பொலிஸ் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பிரபுக்களான இராஜதந்திரிகளுக்கான உணவுகளைப் பரிசோதிப்பது நஞ்சியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நீதிமன்றத்தில் நிபுணர் சாட்சியாளர்களாக பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்பாக எமது அலுவலர்கள் நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களிலும் நிபுணத்துவ சாட்சியங்களைப் பெற்றுக் கொடுக்கின்றார்கள்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றுள்ள அலுவலர்கள் அரச அனுசரணை பெறுகின்ற நிறுவனங்களுக்கு விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக உணவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் பல்வேறு தரநியமங்களின் வகைப்படுத்தல்களை தயார் செய்வதற்கும் மேற்படி அலுவலர்கள் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றார்கள். பாதுகாப்பு அமைச்சுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்களை கொள்வனவு செய்யும் போதும், வேறு நிறுவனங்களுக்கு உச்சதொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போதும் தொழில்நுட்பக் குழுக்களுக்கு நிபுணத்துவ உதவியைப் பெற்றுக் கொடுப்பதும் குறித்த அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.4.2. பகுப்பாய்வு அறிக்கைகளின் முன்னேற்றம் (2022.01.01 முதல் 2022.09.30 வரையான முன்னேற்றம்)

| பிரிவு | 2022.01.01 எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2022.01.01-2022.09.30 வரை கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2022.01.01-2022.09.30 வரை அறிக்கையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2022.09.30 திகதிக்கு அறிக்கையிடப்பாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| போதைவஸ்து மற்றும் உளக்கோளாறு நடத்தைப் பிரிவு | 1,390 | 13,507 | 11,199 | 3,698 |
| துப்பாக்கி மற்றும் எரிபடைவியல் பிரிவு | 221 | 322 | 350 | 193 |
| வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல் பிரிவு | 163 | 606 | 561 | 208 |
| நீதிமன்ற நஞ்சியல் பிரிவு (நச்சு வகைகள்) | 1,383 | 1,975 | 2,310 | 1,048 |
| நீதிமன்ற நீர்ப்பாயவியல் மற்றும் மரபணு பிரிவு (DNA) | 2,567 | 1,435 | 1,079 | 2,923 |
| சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் பிரிவு - H | 80 | 508 | 493 | 95 |
| டிஜிரல் (Digital) குற்றவியல் பிரிவு - HD | 878 | 653 | 598 | 933 |
| பல்வகை நீதிமன்ற அம்சங்கள் | 365 | 346 | 434 | 277 |
| மதுபானப் பிரிவு | 392 | 5,155 | 4,727 | 820 |
| மதுசாரம் மற்றும் புகையிலைப் பிரிவு | 192 | 2,189 | 2,246 | 135 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிப் பிரிவு | 21 | 2,922 | 2,895 | 48 |
| பல்வேறு உணவு வகைகள் | 48 | 642 | 677 | 13 |
| **மொத்தம்** | **7,700** | **30,260** | **27,569** | **10,391** |

## 4.4.3. வேறு நடவடிக்கைகள்

| பணி | எண்ணிக்கை |
|---|---|
| நீதிமன்றங்களில் சாட்சியமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் | 214 நாள் |
| குற்றச்செயல்கள் இடம்பெற்ற இடங்களில் பங்கேற்ற சந்தர்ப்பங்கள் | 421 நாள் |
| நஞ்சியல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்ற விசேட பிரபுக்களின் VIP உணவுப் பரிசோதனை | 05 அலுவலர் நாள் |
| விரிவுரைகளை நடாத்தல் | 22 நாள் |
| உள்நாட்டு பயிற்சி | 859 அலுவலர் நாள் |
| பட்டப் பின் படிப்புக்கு வெளிநாடு செல்லும் அலுவலர்களின் எண்ணிக்கை (ஐக்கிய இராச்சியம்) | 01 |

* யூன் மாதம் 15 முதல் ஆகஸ்ட் மாதம் 15 வரை ஒரு மாதத்திற்கு 02 நாட்கள் எனும் சேவை முறை அமுல்படுத்தப்பட்டது. (16/2022, 16/2022(1) மற்றும் 16/2022(11) சுற்றறிக்கைக்கு அமைய)

## 4.4.4. செயலாற்றுகை தொடர்பான எதிர்கால திட்டம்

2020 ஆம் ஆண்டின் இறுதி முதல் நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியை அடுத்து இரசாயனப் பண்டங்கள் மற்றும் நுகர்வுப் பண்டங்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மேலும் போக்குவரத்து அசௌகரியங்கள் காரணமாக அலுவலர்களின் வருகையும் சேவை முறையின் கீழ் அமுல்படுத்தப்பட்டதனால், அறிக்கையிடவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. 2023 ஆம் ஆண்டில் இந்த நிலைமையை முடிந்தளவு தவிர்த்துக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

4.4.5. 2022-01-01 தொடக்கம் 2022-09-30 **வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூ.மி.) | **2022.09.30** திகதிக்கு செலவினம் (ரூ.மி.) | **2022.09.30**திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 416.3 | 300.25 | 72% |
| மூலதன செலவினம் | 201.5 | 24.76 | 12% |
| **மொத்தம்** | **617.8** | **325.01** | **52%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.5. கடன் இணக்க சபைத் திணைக்களம்

**நோக்கு**

அசையா சொத்து சம்பந்தப்பட்ட கடனை திருப்பி செலுத்துவதற்கு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ஒரு நிவாரண ஏற்பாட்டை வழங்குதல்.

**செயற்பணிகள்**

கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீது பெறப்பட்ட கடன்களை குறைந்த வட்டி வீதத்துடன் தவணைமுறையில் செலுத்துவதன்மூலம் பிணையாக வைக்கப்பட்ட விவசாய நிலங்கள், வீடு போன்ற அசையா சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கடன்பட்டோருக்கு சட்டப் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கல்

**குறிக்கோள்**

அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அடைவு முறிகள், நிபந்தனையுடன் கூடிய உறுதி மற்றும் அறுதி என்பவற்றின் மீதான கடன்களை மீளச் செலுத்துவதன்மீது தீர்வொன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவுதல்.

### 4.5.1 அறிமுகம்

1941ம் ஆண்டின் 39 ம் இலக்க கடன் இணக்க சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களமானது காணி, நெல்வயல்கள், பெருந்தோட்டங்கள், வீடுகள் போன்ற அசைவற்ற ஆதனங்களின் உறுதியை நிபந்தனையுடன் பிணைவைத்து பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமும் சத்தியக்கடதாசி மற்றும் காசோலை போன்ற ஆவணங்களின்மீது பெறப்பட்ட பிணையற்ற கடன்களின் மூலம் ஏற்பட்ட கடன்சுமைக்கு உள்ளான மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. 1999ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்த சட்டம் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காகவே எழுதப்பட்ட அறுதியுறுதிகளின் மீது இச்சபை இடையீடு செய்வதற்கு வழிவகுத்து இதன் நிவாரண உதவி நடவடிக்கைகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது.

மேற்படி சபையின் கடமை நடவடிக்கைகள் பொதுவான ஒரு நீதிமன்றத்தில் நிலவும் விதத்திலும் பார்க்க வேறு ஒரு விதமாக இருக்கும். சபையின் முன்னிலையில் கைச்சாத்திடும் ஒப்பந்தங்கள்

தரப்பினர்கள் அவரவர்களது விருப்பத்திற்கு அமைய கைச்சாத்திடும் ஒப்பந்தங்களே அன்றி சபையின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது அல்ல. அவ்வாறெனினும் நியாயமற்ற வகையிலான வட்டியினை அளவில் குறைப்பதற்கு சபையினால் முன்வைக்கப்படும் நியாயமான முன்மொழிவுகளை கடன் உரித்தாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனின் அது தொடர்பாக கட்டளைகள் சட்டத்தின் கீழ் கடனாளிகளுக்கு சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கும் சபைக்கு அதிகாரம் உண்டு.

அவ்வாறே கடன் உரித்துடைய தரப்பினர் இறுதி விசாரணைக்காக வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய விசாரணைக்காகச் சமூகமளிக்கவில்லை எனின் ஒரு தரப்பு வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். எனினும், பதிவுத் தபால் மூலம் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஊடாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் கடன் உரித்தாளருக்கு அறிவித்து கடன் உரித்துடைய தரப்பினர் வேண்டுமென்றே விசாரணைக்குச் சமூகமளித்தலைத் தவிர்ப்பதாக சபை உறுதியாக அறிந்து கொண்டால் மாத்திரமே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் அவ்வாறான சான்றிதழ் ஒன்றினை வழங்குவதன் ஊடாகக் கிடைக்கும் நன்மை கடனாளிக்கு உரித்தானதாகும். வேறு ஒரு நீதிமன்றத்தில் இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி சான்றிதழினை உரிய நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தால் கடன் தொகையினைப் மீட்டு எடுப்பதற்காக ஆகக் கூடியது 10 வருட காலத்திற்கு உட்பட்ட வகையில் காலம் ஒன்றினை வழங்குவதற்கும் வட்டியினை ஆகக் குறைந்த வட்டி வீதம் வரை குறைப்பதற்கும் வழக்குகளுக்குரிய எந்தவொரு கட்டணத்தினையும் கடன்காரரிடமிருந்து அறவிடாமல் இருப்பதற்கும் கடன் இணக்கக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது.

### 4.5.2 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

| | |
|---|---|
| 2022.01.01 திகதிக்கு முன் கொண்டு வரப்பட்ட பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1424 |
| புதிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 321 |
| மீளாய்வு மற்றும் தள்ளுபடி செய்யப்பட்டு மறு பரிசீலணைக்காக கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 10 |
| **மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **1755** |
| இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 341 |
| தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 176 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 11 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 0 |
| ஒதுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 52 |
| வழக்கு நிரலில் இருந்து அகற்றப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 11 |
| ஒதுக்கி வைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 72 |
| மொத்தம் | 663 |
| **30.09.2022 நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **1092** |

**2022.09.30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மாவட்ட ரீதியாகக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்**

| மாவட்டம் | 30.09.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 51 |
| களுத்துறை | 33 |
| குருநாகலை | 33 |
| கேகாலி | 13 |
| இரத்தினபுரி | 16 |
| பதுளை | 01 |
| அம்பாறை | 01 |
| காலி | 42 |
| மாத்தறை | 15 |
| ஹம்பாந்தோட்டை | 03 |
| கம்பஹா | 91 |
| கண்டி | 14 |
| புத்தளம் | 06 |
| மாத்தளை | 02 |
| மொத்தம் | **321** |

| கிளை வாரியம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | 30.09.2022 வரை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 30.09.2022 நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பிரதான வாரியம் | 643 | 232 | 411 |
| காலி கிளை வாரியம் | 233 | 143 | 90 |
| கம்பஹா கிளை வாரியம் | 445 | 162 | 283 |
| குருநாகல் கிளை வாரியம் | 434 | 126 | 308 |
| மொத்தம் | **1755** | **663** | **1092** |

01.01.2022 முதல் 30.09.2022 வரை கடன் இணக்க சபைத் திணைக்களதின் தலைமை அலுவலகம் உள்ளிட்ட கிளைகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்ட மாவட்டங்கள்

- பிரதான வாரியம்

| மாவட்டம் | 30.09.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 51 |
| களுத்துறை | 33 |
| குருநாகலை | 01 |
| கேகாலி | 02 |
| இரத்தினபுரி | 16 |
| பதுளை | 01 |
| அம்பாறை | 01 |
| | **105** |

- **காலி கிளை வாரியம்**

| மாவட்டம் | 30.09.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| காலி | 42 |
| மாத்தறை | 15 |
| ஹம்பாந்தோட்டை | 03 |
| | **60** |

- **கம்பஹா கிளை வாரியம்**

| மாவட்டம் | 30.09.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கம்பஹா | **91** |

- குருநாகல் கிளை வாரியம்

| மாவட்டம் | 30.09.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்டி | 14 |
| குருநாகலை | 32 |
| கேகாலி | 11 |
| புத்தளம் | 06 |
| மாத்தளை | 02 |
| | **65** |

4.5.3 2022-01-01 தொடக்கம் 2022-09-30 **வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| **விபரம்** | 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூ.மி.) | **2022.09.30** திகதிக்கு செலவினம் (ரூ.மி.) | **2022.09.30**திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 35.85 | 26.43 | 74% |
| மூலதன செலவினம் | 1 | 0.09 | 9% |
| **மொத்தம்** | 36.85 | 26.52 | 72% |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.6 சிறைச்சாலைகள் திணைக்களம்

**தொலை நோக்கு**

சிறைக் கைதிகளுக்கு புனர் வாழ்வளித்து சிறந்த பிரசைகளாகச் சமூகமயப்படுத்தல்.

**பணிக் கூற்று**

பாதுகாப்பு, பராமரிப்பு, புனர்வாழ்வு ஆகிய முக்கிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களுக்கிடையே சிறந்த தொடர்பொன்றை ஏற்படுத்தி நேர்க் கணிய சிந்தனையைக் கட்டியெழுப்பி அலுவலர்களின் தொழில் திருப்தியை அதிகரிப்பதன் ஊடாகவும் மற்றும் சிறைக் கைதிகளின் நலன்புரி அலுவல்களை விதிமுறைப்படுத்துவதன் ஊடாகவும் அவர்களின் உழைப்பை நாட்டின் அபிவிருத்திக்குப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துதல்.

**குறியிலக்குகள்**

சிறைக் கைதிகளை முறையாகப் புனர்வாழ்வளிப்பதன் மூலம் சட்டத்தை மதிக்கும் மனித நேயமுடைய நபர்களாக மாற்றி சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்தல்.

சிறைச்சாலை அலுவலர்களை ஊக்குவித்தல் மற்றும் திணைக்களக் குழு உணர்வைக் கட்டியெழுப்புதல

### 4.6.1. அறிமுகம்

1832 ஆம் ஆண்டில் பிரித்தானிய காலனித்துவ யுகத்தில் இலங்கையை ஆட்சி செய்த கெமரன் தேசாதிபதி அவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட நீதித்துறை மறுசீரமைப்புக்களின் பயனாக சிறைச்சாலைகள் தோற்றம்பெற்றன. அதற்கிணங்க 1844 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்ட மற்றும் நீதிக் கட்டளைச் சட்டத்திற்கமைய பிரித்தானியா பொஸ்டல் முறைக்கு நேரொத்ததாக வெலிக்கடை சிறைச்சாலை கட்டியெழுப்பப்பட்டது. இந்தச் சேவை 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்திற்கமைவாக 1905 ஆம் ஆண்டு யூலை 16 ஆம் திகதி தொடக்கம் சிறைச்சாலைகள் ஆணையாளரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற புறம்பானதொரு திணைக்களமாக ஒழுங்கு விதிமுறைப்படுத்தப்பட்டது. சமுதாய விரிவாக்கத்துடன் இச் சேவையின் தேவைப்பாடு மேலும் அதிகரித்தது. அதன் பிரதிபலனாக 1875 இல் இங்கிலாந்து பீன் பீல்ட் சிறைச்சாலை முறைக்கு நேரொத்ததாக போகம்பரை சிறைச்சாலை நிர்மாணிக்கப்பட்டது இவ்வாறு விரிவடைந்த சிறைச்சாலை முறைமை தற்கால சமூக சிக்கல்களுக்குள் மிக முக்கியத்துவமும் அத்தியவசியமும் கொண்ட நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது. இதன்படி தீவு முழுவதிலும் பரந்துள்ள பாதுகாப்புச் சிறைச்சாலைகள் 04 உம் , விளக்க மறியல் சிறைச்சாகைள் 18 உம் , இளம் தவறாளிகளுக்கான சீர்திருத்த நிலையங்கள் 02 உம் , வேலை முகாம்கள் 10 உம் , திறந்த வேலை முகாம்கள் 02 உம் , சிறைக் கூடங்கள் 23 உம், சிறைச்சாலை பாடசாலை ஒன்றும் (01) சிறைச்சாலை அத்தியட்சகர்களின் கீழ் நிருவகிக்கப்படுகின்றன. இவர்களின் பாதுகாப்பின் கீழ் சிறைக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் சுமார் 24,653பேர் வரையில் உள்ளனர்.
நீதிமொழி - பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு

**<u>பணிகள்.</u>**

1. நாட்டினுள் ஏதேனும் நீதிமன்றமொன்றின் அதிகாரத்தின் கீழ் சிறைப்படுத்தப்படுகின்ற அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்ட சகல தராதரங்களையும் கொண்ட கைதிகளை பெறுப்பேற்று சிறைச்சாலைத் சட்ட திட்டங்களுக்கு இசைவானதாக அவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றை வழங்குதல் மற்றும் நீதி மன்றங்களுக்கு விளக்கமறியல் கைதிகளை ஆஜர்படுத்தல்.
2. அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்நடத்தை சீர்திருத்த நிலையங்கள் தொடர்பான பொதுவான ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான நிருவாகத்தை வழங்குதல்.
3. அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்நடத்தை சீர்திருத்த நிலையங்களின் கைதிகளுக்கு தொழிநுட்ப, விவசாய, விலங்குப் பராமரிப்பு மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல்.
4. அனைத்து சிறைச்சாலைகளின் சிறைக் கூடங்கள் மற்றும் நன்நடத்தை சீர்திருத்த நிலையங்களிற்கான நலனோம்பல் வசதிகளை வழஙகுதல்.
5. சீர்திருத்த துறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை தயாரித்தல்.

6. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சிறைக் கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக வெளியேற்றுவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை உருவாக்குதல்
7. சிறைச்சாலைகளின் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய சிறைச்சாலை இட நெருக்கடியைக் குறைத்தல். புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல். பௌதீக வளங்களை மேம்படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல்.
8. சேவைப் பிரிவுக்கு உரிய பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதனூடாக சிறந்த மாற்றத்தையும் மற்றும் சேவைத் திருப்தியையும் கொண்ட அலுவலர்களை உருவாக்குவதற்காகச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மனித வளங்களை விருத்தி செய்தல்
9. சிறைக் கைதிகள் நிருவாக அலுவல்களை மிகவும் முறையாகவும் மற்றும் வினைத்திறன் கொண்டதாகவும் ஆற்றிக் கொள்வதற்காகச் சிறைக் கைதிகளின் தகவல் முகாமைத்துவ முறைமையை தாபித்து அதனை நடைமுறைப்படுத்தல்

**முதன்மைகள்**

சிறையில் அடைக்கப்படுகின்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல், பராமரித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்

### 4.6.2. சிறைக் கைதிகள் நிருவாக தகவல்கள் - 2022.01.01 – 2022.09.30 வரை

**1. நீதி மன்றங்களினால் நேரடியாக சிறையில் அனுமதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை- 2022.01.01 – 2022.09.30)**

| நேரடியாக சிறையில் அனுமதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| நீதி மன்றங்களினால் சிறையில் அடைக்கப்பட்ட சிறை கைதிகளின் எண்ணிக்கை | 14734 | 207 | 14941 |
| நீதி மன்றங்களினால் சிறையில் அடைக்கப்பட்ட சந்தேக கைதிகளின் எண்ணிக்கை | 59947 | 2221 | 62168 |
| **மொத்தம** | 74681 | 2428 | 77109 |

**2. 2022.09.30 ஆம் திகதி அதிகாலை சிறைச்சாலை திறக்கும் போது காணப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை**

| மொத்த சிறைக் கைதிகளின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| அனைத்து சிறைக் கைதிகளின் எண்ணிக்கை | 8810 | 192 | **9002** |
| அனைத்து சந்தேக நபர்களின் எண்ணிக்கை | 14993 | 658 | **15651** |
| **முழு மொத்தம்** | **23803** | **850** | **24653** |

**3.** தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கட்டுக்காப்பிலிருந்து தப்பியோடிய அல்லது தலைமறைவான சிறை மற்றும் சந்தேக கைதிகளின் எண்ணிக்கை - 2022.01.01 – 2022.09.30 வரை

- கட்டுக்காப்பிலிருந்து தப்பியோடிய / தலைமறைவான சிறை மற்றும் எண்ணிக்கை சந்தேக கைதிகளின் - 188
- மீளக் கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை - 84

**4. விடுதலை செய்தல்கள் (2022.01.01 – 2022.09.30 வரை)**

| விடுதலை செய்தல்கள் | மொத்தம் |
|---|---|
| தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு- 2022.02.04 | 193 |
| வெசாக் போயா தினத்தை முன்னிட்டு - 2022.05.16 | 224 |
| பொசன் போயா தினத்தை முன்னிட்டு - 2022.06.14 | 183 |
| சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு - 2022.09.12 | 417 |
| சனாதிபதி விசேட மன்னிப்பு - 2022.03.28 | 01 |
| **மொத்தம்** | **1,018** |

**5. வீட்டு விடுமுறை மீது விடுவிக்கப்பட்ட மற்றும் அனுமதிப் பத்திரத்தின் மீது விடுவிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை (2022.01.01 – 2022.09.30 வரை)**

- வீட்டு விடுமுறை மீது விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை - 221
- அனுமதிப் பத்திரத்தின் மீது விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை - 50

**4.6.3. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2022.01.01 -2022.09.30 வரை)**

| கருத்திட்டம் | முழு கிரயம் மதிப்பீடு (ரூ.மில்) (TEC) (ரூ.மில் | 2021.12.31 திகதிக்கு திரண்ட செலவு (ரூ.மில் | 2022 இற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில் ) | 2022.09.30 ஆம் திகதி வரை செலவு (ரூ.மில் ) | பௌதீக முன்னேற்றம |
|---|---|---|---|---|---|
| புதிய தும்பறை சிறைச்சாலை நிர்மாணம் | 4363.6 | 2022.97 | 120.00 | 80.308 | ஒப்பந்த இல 11 -72.5%<br>மொத்த கருத்திட்டம் -61.5% |
| மஹர சிறைச்சாலை கட்டிட நிர்மாணம் | 272.00 | - | 39.98 | -<br>இந்தக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு குறித்தொதுக்கப்பட்ட போதிலும் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்குரிய மதியுரை நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் அரச செலவுகள் கட்டுப்பாட்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை - 03/2022 மற்றும் சனாதிபதி அலுவலக சுற்றறிக்கை PS/SB/Circular/10/2022 அமைய தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல் | |
| தங்காலை அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை நிர்மாணம் - நீர் கருத்திட்டம் | 4996.5 நீர் கருத்திட்டம் - 483.2 | 4626.186 | 40.00 | 30.00 | 100% - வேலைகள் பூர்த்தி. பற்றுச்சீட்டுக்கள் சீராக்கம் செய்யப்பட்டு வருகின்றன. |
| பல்லன்சேனை *இ.த.சீ.நிலையத்தை கொவிட் -19 பரவலை குறைப்பதற்காக தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றுவதற்குத் தேவையான கட்டிடத்தை நிருமாணித்தல் | 135.00 | 43.103 | 29.3 | 20.078 | 90%- வேலைகள் பூர்த்தி. |
| வாரியபொல சிறைச்சாலையை மேம்படுத்தல் | 1244.60 | - | - | -<br>இந்தக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு குறித்தொதுக்கப்பட்ட போதிலும் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்குரிய மதியுரை நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் அரச செலவுகள் கட்டுப்பாட்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை - 03/2022 மற்றும் சனாதிபதி அலுவலக சுற்றறிக்கை PS/SB/Circular/10/2022 அமைய தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல் அதன் காரணமாக நான்காம் காலாண்டுக்காக 57.0 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகை இரத்து. | |
| போதைப் பொருட்கள் பாவனைக்கு பழக்கப்பட்ட கைதிகளுக்கு விவசாய | 198.67 | 50.67 | 20.0 | 11.478 | இதன் கீழ் தொழிற் பயிற்சிக் கட்டிடம், வாசிகசாலை மற்றும் ஏனைய இனங்காணப்பட்ட தேவைப்பாடுகள் இந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்படவுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மற்றும் தொழில் பயிற்சி மூலம் புனரமைப்புச் செய்யக்கூடிய நிலையமொன்றை வீரவில் வேலை முகாமில் தாபித்தல் | | | | | |

### 4.6.4. ஏனைய

**2022.01.01 ஆம் திகதி தொடக்கம்2022.09.30 ஆம் திகதி வரை திணைக்களத்தின் பயிற்சிச் செலவு விடயம் மற்றும் UNODC, ICRC ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்.**

| | செயலமர்வு நடாத்தப்பட்ட காலப்பகுதி | செயலமர்வு | லுவலர்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட இடம் | வளவாளர்கள் தொடர்பான விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2022.01.20 – 2022.01.21 | மாற்றங்கள் மற்றும் மாற்றமடைதல்தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 21 | நிகழ்நிலை முறை மூலம் நடாத்தப்பட்டது | UNODC |
| 2 | 2022.03.22 | புதிய கைதிகளை அனுமதிக்கின்ற போது மேற்கொள்ளப்படுகின்ற சுகாதார பரிசீலனை தொடர்பாக | 14 | OZOஹோட்டல் கொழும்பு | ICRC |
| 3 | 2022.07.18 – 2022.07.19 | இலங்கை சிறைச்சாலைகள் சுகாதார பணியாட்குழுவின் திறன் மற்றும் தேர்ச்சி மற்றும் அறிவு மேம்படுத்தல் ( முதலாம் குழு) | 27 | கோல்டன் கிரவுன் | UNODC |
| 4 | 2022.07.25 – 2022.07.26 | இலங்கை சிறைச்சாலைகள் சுகாதார பணியாட்குழுவின் திறன் மற்றும் தேர்ச்சி மற்றும் அறிவு மேம்படுத்தல்(முதலாம் குழு) | 24 | Citrus Waskaduwa | UNODC |

**சிறைக்கைதிகள் தொழிற்பயிற்சி நிகழ்சித் திட்டம் ( செலவு விடய இல - 2509 )**

| 2022 வருடத்திற்கான ஒதுக்கீடு (ரூபா) | 2022.09.30 தினத்திற்கு செலவு (ரூபா) | பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்ட கைதிகளின் எண்ணிக்கை | செலவுகள் ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|---|---|
| **2.00** | **1.086** | **29** | **404** | **54.30%** |

**சிறைச்சாலை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினால் 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.09.30 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | 2022 வருடத்திற்கான ஒதுக்கீடு (ரூபா) | 2022.09.30 திகதிக்கு செலவு (ரூபா) | செலவுகள் ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|---|
| மென்பொருள் விருத்தி | 3.8 | 0.811 | 21% |

**கைத்தொழில் மற்றும் விவசாய முற்பணக் கணக்கு.**

| 2022வருடத்திற்கான ஒதுக்கீடு (ரூபா) | 2022.09.30 திகதிக்கு செலவுகள் (ரூபா) | 2022.09.30 திகதிக்கு வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| 110.00 | **46.115** | **110** |

### 4.6.5. சிறைச்சாலைத் திணைக்களத்தினால் 2022.01.01 ஆம் திகதி தொடக்கம்2022.09.30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்.

- ❖ சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு முதற் தடவையாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இலங்கை முப்படைகளில் 12 வருட சேவைக்காலத்தை நிறைவு செய்து சட்டரீதியாக சேவையிலிருந்து விலகிய 194 அலுவலர்கள் சிறைச்சாலை அவசர நடவடிக்கைகள் தந்திரோபாய படையணி" அலுவலர்களாக (SPEAT FORCE) வெளியேறும் நிகழ்வு அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை விளையாட்டரங்கில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரால் பீ.டீ.எச்.கமல் குணரத்தன (ஓய்வுபெற்ற)அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

- ❖ சிறைச்சாலைகளின் இடநெருக்கடிக்குத் தீர்வொன்றாகச் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைப்பதற்கு மாற்றீடாக விருத்தியடைந்த மறுசீரமைப்பு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற வீட்டுக்காவலில் வைக்கின்ற வழிமுறையை இலங்கையிலும் மேற்கொள்வதற்கு மேற்படி ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளதோடு United Nations Standard Minimum Rules for Non-custodial Measures (The Tokyo Rules) மூலமும் இவ்வாறான மாற்றீடுகள் ஊக்குவிக்கப்படுகின்றது.

- ❖ நிலவுகின்ற கொவிட் - 19 நிலைமை காரணமாக கைதிகளைப் பார்க்க முடியாத வட மாகாணத்தில் சிறை/சந்தேக நபர்களின் உறவினர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் அறிமுகம் செய்துள்ள e-visit தொழில்நுட்பம் ஊடாக இலங்கையின் எந்தவொரு சிறைச்சாலையிலும் சிறைவைக்கப்பட்டுள்ள கைதியொருவரை விருந்தினர்கள் பார்ப்பதற்கான வசதிகள் அந்த சந்தர்ப்பத்திலேயே செய்யப்பட்டிருந்தது
- ❖ சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 103 ஏ குழுவின் பயிலுநர் சிறைக் காவலர்கள் (ஆண்கள்) 181 அலுவலர்கள், பயிலுநர் சிறைக் காவலர்கள் (பெண்கள்) 23 அலுவலர்கள் உட்பட 204 பேருக்கான ஆரம்பப் பயிற்சி அகுணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலைப் பயிற்சிப் பாடசாலையில் வழங்கப்பட்டதோடு, அந்த அலுவலர்கள் கலைந்து செல்லும் நிகழ்வு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் திரு. து'ர உபுல்தெனிய அவர்களின் தலைமையில் அகுணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலை மைதானத்தில் இடம்பெற்றது.

- ❖ நாட்டில் தற்போது நிலவுகின்ற உணவு நெருக்கடிக்குத் தீர்வொன்றான வகையில் சிறைச்சாலைகளில் உள்ள சிறைக் கைதிகளின் உழைப்பை திறம்படப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைச்சாலைகள் நிறுவனங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு **"வளமான"சிறையிலிருந்து விவசாய நிலத்திற்கு** என்ற தொனிப்பொருளின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ❖ சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 103 பீ அணியின் பயிலுநர் சிறைக் காவலர் 175 அலுவலர்கள் மற்றும் பெண் பயிலுநர் சிறைக் காவலர் 20 அலுவலர்கள் உட்பட 195 அலுவலர்கள் ஆரம்ப பயிற்சி நெறியை நிறைவு செய்து பிரிந்து செல்லும் வைபவம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்' அவர்களின் தலைமையில் அங்குனகொலபெலெஸ்ஸ சிறைச்சாலை பயிற்சிக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

### 4.6.6. 2022-01-01 தொடக்கம் 2022-09-30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூ.மி.) | 2022.09.30 திகதிக்கு செலவினம் (ரூ.மி.) | 2022.09.30திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 8,705.89 | 5,248,18 | 60.2% |
| மூலதன செலவினம் | 399.71 | 196,22 | 49.0% |
| **மொத்தம்** | **9,105.60** | **5,444.40** | **59.80%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.7. சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்

### 4.7.1. அறிமுகம்

1999 ஆம் ஆண்டில் நீதி அமைச்சின் கீழ் ஒழுங்குபடுத்தல் செயற்திட்டமாக இலங்கையினுள் சமூகச் சீர்திருத்தச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. 1999 இல 46 ஐக் கொண்ட சமூக சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 3 நீதிமன்றங்களில் ஆரம்பிக்கப்பட்ட மாதிரி செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டில் திணைக்களமாக மாற்றமடைந்தது. எனினும் 2018 மே மாதத்தில் இருந்து மீண்டும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகிறது. தற்போது நாடு முழுவதும் 125 சுற்றுலா மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் சமூக சீர்திருத்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தப்படுகிறது. சிறு குற்றங்களை இழைத்தவர்கள் சமூக சீர்திருத்தச் செயற்பாட்டுக்கு உட்படுத்துவதன் மூலம் சிறைச்சாலைகளில் நிலவும் கடும் நெரிசல்களைக் குறைத்தல், குற்றவாளிகளைப் பராமரிப்பதற்காக செலவிடப்படும் அதிக செலவினங்களைக் குறைத்தல், சிறு தவறுகளுக்காக சிறைப்படுத்தப்படும் குற்றவாளிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட பெரும் குற்றவாளிகளாக மாறும் வாய்ப்பைத் தவிர்த்தல் மற்றும் அவர்களை மிகவும் பயனுள்ள புனர்வாழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளுதல். நீதிமன்றத்தில் சிறு தவறுகளுக்காக குற்றவாளி ஆக்கப்பட்டவருக்கு சமூக சீர்திருத்தக் கட்டளையை வழங்குவதன் மூலம் அவரை சமூகத்தினுள் குற்ற நடத்தையில் இருந்து மீட்டெடுத்து சிறந்த பிரஜையாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக நீதவான் நீதிமன்றங்களுக்கு இணையாக நிறுவப்பட்டுள்ள சமூதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட திணைக்களத்தின் அலுவலகர்களால் பல தரப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. கட்டளையைப் பெற்றவர் அலுவலகர்களின் மேற்பார்வையின் கீழ் சரியான பாதையில் வழிநடத்துவதே திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

குற்றவாளிகள் மட்டுமல்ல, குற்றங்களில் ஈடுபடக்கூடியவர்களையும் நற்பாதையில் இட்டுச் செல்வது காலத்தின் தேவையாக உள்ளதால், அது தொடர்பில் கவனம் செலுத்தி, ஆரம்ப கால திணைக்களப் பணிகள் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அப் பணிகளை ஆற்றுவதற்கு நாடு பூராகவும் பிரதேச செயலக ரீதியில் அபிவிருத்தி செயலாளர்களும் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.

### 4.7.2 சேவைகள்

1. 1999 இல 46 ஐக் கொண்ட சமூதாயஞ்சார் சீர்திருத்தச் சட்ட அமுலாக்கத்தின் மூலம் சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படுவதற்குப் பதிலாக அவர்களை சமூகத்தினுள்ளே சீர்திருத்தம் செய்தல்.
2. சிறு தவறாளர்களை சிறைப்படுத்துவதைக் குறைத்து சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல்களையும், அதற்காகச் செலவிடப்படும் செலவினங்களையும் குறைத்தல்.
3. சமூக சீர்திருத்தக் கட்டளையைப் பெற்றவரின் உழைப்பை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்தல்.
4. சமூக சீர்திருத்தக் கட்டளை பெற்றவர்கள் மற்றும் ஆபத்துள்ளவர்கள் ஆகியோரின் குடும்பங்களை மேம்படுத்தல்.

#### 4.32.1 பெறப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை - மாகாண வாரியாக

**(2022.01.01-2022.09.30)**

| மாகாணம் | உத்தரவு பெற்ற குற்றவாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 1,704 |
| மத்திய | 622 |
| ஊவா | 404 |
| தென் | 475 |
| சப்ரகமுவ | 366 |
| கிழக்கு | 404 |

| | |
|---|---|
| வயம்ப | 442 |
| வட மத்திய | 263 |
| வடக்கு | 641 |
| **கூட்டுத் தொகை** | **5,321** |

### 4.7.4. திருத்த உத்தரவு சம்பந்தமான தகவல்கள் (2022.01.01-2022.09.30 வரை)

| உத்தரவுகளின் எண்ணிக்கை | நிறைவநிறைவு செய்த உத்தரவுகளின் எண்ணிக்கை | மீறப்பட்டஉத்தரவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5,321 | 3,332 | 1,304 |

•(வேறுதவறுகள் இதுரை செயற்பாட்டில் உள்ளது.

### 4.7.5. நடாத்தப்பட்ட சீர்திருத்தமற்றும் வேறுநிகழ்ச்சித் திட்டங்கள்

**(2022.01.01-2022.09.30 வரை)**

| எண எண் | நிகழ்ச்சிதிட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | எண்சிகிச்சை/மருந்துத் தடுப்பு | 684 |
| 2 | தொழிற் பயிற்சித் திட்டங்கள் | 148 |
| 3 | ஆன்மீக பயிற்சித் திட்டங்கள் | 449 |
| 4 | மரம் மரம் திட்டங்ளை செயல்முறைப்படுத்தல் | 212 |
| 5 | பொது இட திட்டங்ளை செயல்முறைப்படுத்தல் | 1,105 |
| 6 | பொருளாதார மற்றும் வீட்டு நிதி மேலாண்மை திட்டங்ளை செயல்முறைப்படுத்தல் | 223 |
| 7 | சாதாரண அளவிளான வணிக மேலாண்மை திட்டங்ளை செயல்முறைப்படுத்தல் | 34 |
| 8 | தயாரிப்புக்களின் விற்பனை சந்தை தயாரிப்புக்களின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திட்டங்கள் | 24 |
| 9 | சாதாரண அளவிளான தொழிற்த்திட்டங்ளை ஆரம்பிப்பதற்கான ஆதரவுளைப் பெற சிறுகைத்தொழில் மேலாண்மை பிரிவை பரிந்துரைத்தல். | 40 |
| 10 | சுயதொழிலுக்கு பொருத்தமான சுயதொழில் திட்டங்ளை செயல்முறைப்படுத்துவதற்கு உதவி வழங்குதல் | 31 |
| 11 | சமூகம் மற்றும் சமூகம் சார் அமைப்புக்களை விழிப்புணர்வுசெய்தல் (கிராம அலுவலக பிரிவுகள் மட்டத்தில்) | 607 |
| 12 | சமூக ஊக்குவிப்பு விசேட நிகழ்ச்சி திட்டங்களைசெயல்முறைப்படுத்தல்(தொலைபேசி சேவை/விசேட நிகழ்ச்சி/வேறு) ஊக்குவிப்பு | 119 |
| 13 | அரச ஊழியர்ளை விழிப்புணர்வு செய்தல்(பிதேச செயலக பிரிவுகள் மட்டத்தில்) ஊழியர்ளை விழிப்புணர்வு | 144 |
| 14 | வழக்கறிஞர்கள் நீதிமன்றப் பதிவாளர்ளை விழிப்புணர்வுசெய்தல் | 25 |
| | **கூட்டுத் தொகை** | **3,845** |

### 4.7.6. 2022.01.01 - 2022.09.30 வரையான நிதி முன்னேற்ற திட்டங்கள்

| விபரம் | 2022 ம் வருடத்துக்கான ஒதுக்கீடு(ரூ.மில்) | 2022.09.30 ம் திகதி வரையான செலவீடு ரூ.மில்) | 2022.09.30 ம் திகதி வரையான நிதி சதவீதம் |
|---|---|---|---|
| நாட் செலவு செலவு | 519.85 | 356.99 | 69% |
| மூலதனச் செலவு | 9.79 | 3.90 | 40% |
| **கூட்டுத் தொகை** | **529.64** | **360.90** | **68%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 4.8. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்

### 4.8.1. அறிமுகம்

முப்பது வருட கால யுத்தத்தின் இறுதியில் அரசிடம் சரணடைந்த மற்றும் நீதிமன்ற உத்தரவின்பெயரில் அனுப்பப்பட்ட வழிதவறிய போராளிகள் மற்றும் போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு புணர்வாழ்வளித்து சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக சமூகமயப்படுத்தப்படும் செயற்பாடு இப்பணியகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இது வரையில் 12194 வழிதவறிய போராளிகளுக்கு சிறந்த முறையில் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளது, போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. புனர்வாழ்வு மையம் - சேனபுர, மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி நிலையம் - சேனபுர மற்றும் சமூகமயப்படுத்தப்படும் மத்திய நிலையம் - வவுனியா எனும் மூன்று புனர்வாழ்வு நிலையங்களிலும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு பெறுநர்களின் புனர்வாழ்வுக்காலம் ஒரு வருடகாலமாகும். முதல் ஆறு மாத காலங்களில் ஆரம்பகட்ட புனர்வாழ்வு அளிக்கும் செயற்பாடு இடம் பெறும். அதன் பின்னர் இரண்டாவது ஆறுமாத காலத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டு தொழிற் பயிற்சிக்காக உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு புனர்வாழ்வு அளிப்பதற்காக உட்படுத்தப்பட்டுள்ள புனர்வாழ்வு பெறுனர்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டு முறையான கால நேர அட்டவணைக்கேற்ப உளவியல் சுகாதாரம் மனதை ஒருநிலைப்படுத்தும் வேலைத்திட்டம் மற்றும் பல்வேறு சிகிச்சைகள் கல்வி, தொடர்பாடல், தொழில்நுட்பம், தலைமைத்துவம், ஆளுமை வளர்ச்சி பயற்சி, அழகியல் விளையாட்டு போன்ற செயற்பாடுகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேலோங்கச் செய்வதற்கான சுய தொழில் மற்றும் தொழிற் பயிற்சி வழிகாட்டல்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுக்காலம் முடிவடைந்து சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுடைய வாழ்க்கையை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காக மற்றும் பொருளாதார, சமூக, நலன்புரி செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதற்காக தொடராய்வு நடவடிக்கைகள் இப்பணியகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள புனர்வாழ்வுக்குப் பிந்திய உதவிக் கியைினூடாக இடம் பெறும்.

### 4.8.2. 2022.01.01 திகதியிலிருந்து 2022.09.30 வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகைத் தகவல்

1. புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 2022.09.30ந் திகதி வரையிலான காலப்பகுதியில் புனர்வாழ்வு பெறுனர்களின் எண்ணிக்கை

| புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் | புனர்வாழ்வு பெறுனர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானோர் | வழிதவறிய போராளிகள் |
| சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வு மத்திய நிலையம் - கந்தக்காடு | 436 | - |
| மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் எழுத்தறிவுப் பயிற்சி நிலையம் - சேனபுர | 38 | - |
| சமூகமயப்படுத்தப்படும் மத்திய நிலையம் - வவுனியா | 142 | 02 |
| **மொத்தம்** | **616** | **02** |

2. 20222. 01. 01 திகதியிலிருந்து 2022.09.30 வரையான காலப்பகுதியில் புனர்வாழ்விற்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகையினர்கள் மற்றும் சமூகமயப்படுத்தப்பட்ட தொகையினர்

| மாதம் | புனர்வாழ்விற்கு உட்படுத்தப்பட்ட தொகையினர் | சமூக மயப்படுத்தப்பட்ட தொகையினர் |
|---|---|---|
| ஜனவரி | 111 | 12 |
| பெப்ரவரி | 115 | 15 |
| மார்ச் | 180 | 43 |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | 160 | 29 |
| மே | 215 | 49 |
| ஜுன் | 145 | 83 |
| ஜுலை | 83 | 78 |
| ஆகஸ்ட் | 95 | 317 |
| செப்டெம்பர் | 141 | 62 |
| மொத்தம் | **1245** | **688** |

**4.8.3.**

**2022.01.01 தொடக்கம் 2022.09.30ந் திகதி வரையிலான காலப்பகுயில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

| இல | பாடநெறி | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உடல் உள விருத்தி நிகழ்ச்சி திட்டம் (ஆன்மீகம், ஆலோசனை,யோகா பயிற்சி மற்றும் பல்வேறு சிகிச்சை முறைகள்) | 124 | அனைத்து புனர்வாழ்வு பெறுனர்களுக்காக |
| 2 | கல்வி சார்ந்த நிகழ்ச்சி திட்டங்கள் ( சிங்களம், தமிழ்,ஆங்கில மொழி, தொழிநுட்ப அறிவு மற்றும் விஷேட தினங்களை நினைவு கூறல்) | 65 | அனைத்து புனர்வாழ்வு பெறுனர்களுக |
| 3 | தலைமைத்துவம் மற்றும் தனியாள் விருத்தி நிகழ்ச்சிச் திட்டம் | 09 | 550 |
| 4 | சுய தொழில் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 05 | 235 |

புனர்வாழ்வு பெறுனர்களுக்கான தொழிற் பயிற்சி பாடநெறிகள்

| இல | பாடநெறிகள் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உருக்கியொட்டல்சார் பாடநெறி (வேல்டிங்) | 1 | 14 |
| 2 | தச்சு வேலை ( தளபாடங்கள்) | 1 | 17 |
| 3 | குழாய்ப்பணிசார் கற்கைநெறி (பிளம்பிங்) | 2 | 17 |
| 4 | மேசன் | 1 | 15 |
| 5 | தச்சு வேலை ( கட்டிடம்) | 1 | 19 |
3 .டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்-ஸ்ரீலங்காவுடன் இணைந்து நடத்தப்பட்ட பொது விழிப்புணர்வு நிகழ்ச்சி (2022 மார்ச் 27)

**நோக்கங்கள்:** ஆணையம் மற்றும் அதன் சேவைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**பங்கேற்பு:** ஏகல-ஜாலா பகுதியின் ஊரக வளர்ச்சிப் பிரதிநிதிகள் (30), ஆணையத்தின் கொள்கை மற்றும் திட்டங்கள்

**இடம்:** நியூ சல்சா நிறுவனம், ஏகலா.

4. களுத்துறை பொலிஸ் கல்லூரியில் (ஜூலை 26 மற்றும் 27, 2022) புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்.

**குறிக்கோள்கள்:** காவல்துறை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**பங்கேற்பு:** புதிதாக பணியமர்த்தப்பட்ட 218 சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் புதிதாக பணியமர்த்தப்பட்ட 800 போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கான ஒரு திட்டம், ஆணையத்தின் தலைவர், இயக்குநர் ஜெனரல் மற்றும் இயக்குநர் (சட்ட மற்றும் சட்ட அமுலாக்கம்), ஆணையத்தின் இயக்குநர் (கொள்கை மற்றும் திட்டம்).

**இடம்**: பொலிஸ் பயிற்சிக் கல்லூரி, களுத்துறை.

5. உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான திட்டத்தை நடத்துதல் (ஆகஸ்ட் 6 மற்றும் 7, 2022)

**நோக்கங்கள்**: நீதித்துறை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**பங்கேற்பு**: 40 மேல் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, அதிகாரசபையின் தலைவர் மற்றும் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், பணிப்பாளர்-கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

**இடம்**: புளூவாட்டர் ஹோட்டல், வாத்துவ.

6 .மாஜிஸ்திரேட்/மாவட்ட நீதிமன்ற நீதிபதிகளுக்கான திட்டத்தை நடத்துதல் (20 & 21 ஆகஸ்ட் 2022)

**நோக்கங்கள்**: நீதித்துறை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் 2022)
**பங்கேற்பு**: மேல் மாகாணத்தின் 40 நீதிவான்கள்/மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதி திரு.யசந்த கோதாகொட, அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டங்கள்)

**இடம்**: சிட்ரஸ் ஹோட்டல், வஸ்கடுவ.

7.காவல்துறை உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவின் (ஆகஸ்ட் 26, 2022) புதிதாகப் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகளுக்கான தொழில்நுட்பப் பட்டறையை நடத்துதல்

**குறிக்கோள்கள்**: காவல்துறை உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவின் புதிய அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் அவர்கள் தற்போது அனுபவிக்கும் பிரச்சனைகள் குறித்து விவாதித்தல்.

**பங்கேற்பு**: அதிகாரசபையுடன் இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவில் புதிதாக நியமிக்கப்பட்ட 25 பொலிஸ் அதிகாரிகள், அதிகார சபையின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டம்) மற்றும் இயக்குனர் (சட்ட மற்றும் சட்ட அமலாக்கம்)

**இடம்**: வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல், பத்தரமுல்லை.

### 5.4.4. மற்ற நடவடிக்கைகள்

- 2022 மே 26 அன்று அதிகாரசபையின் 10 அதிகாரிகளுக்கு ஜூம் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி நிகழ்ச்சி தகவல் தொழில்நுட்ப வள மேம்பாட்டு ஆணையத்தால் தேசிய அதிகாரசபை வளாகத்தில் நடத்தப்பட்டது.(மேற்கு மாகாணம்)
- அதிகாரசபையின் 2020 வருடாந்த அறிக்கையை தயாரித்து நீதி அமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதன் பிரதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் போட்டியில் பங்கேற்பதன் மூலம் ஆதரவை வழங்கும் ஒரு சர்வதேச அமைப்பான Victim Support Asia உடன் இணைந்து, அதிகாரத்திடம் இருந்து ஆதரவைக் கோரிய இரண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சேதத்தைக் குறைக்க ஒவ்வொரு பாதிக்கப்பட்டவருக்கும் US$1000 (சுமார் ரூ. 330,000.00) வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டதால் ஏற்படும்.

- சேப்ஹவுஸுக்கு வீட்டு உபகரணங்கள் வாங்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 29 இன் படி அதிகாரசபையின் பாதுகாப்பு நிதி நிறுவப்பட்டது மற்றும் 30.09.2022 இல் அது 16.09 மில்லியனாக அதிகரித்துள்ளது.

### 5.4.5. முதல் நிதி முன்னேற்றம். 2022.01.01 முதல் 30.09. 2022 வரை

| விளக்கம் | 2022 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகள் (ரூ. மில்) | 30.09.2022க்குள் செலவு. (ரூ. மில்) | நிதி முன்னேற்றம் (%) 30. 09. 2022 |
|---|---|---|---|
| தொடர் செலவு | 49.00 | 31.24 | 63 % |
| மூலதன செலவு | 8.00 | 1.62 | 21 % |
| **மொத்தம்** | **57.00** | **32.86** | **57%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 5.5 தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்

### 5.5.1. அறிமுகம்

**01. நிறுவனம் தொடர்பான அறிமுகம்.**

**1. தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் (ONUR) தாபிப்பது குறித்த சட்டரீதியான ஏற்பாடுகள்**

தேசிய ஒருமைப்பாட்டிற்கான அலுவலகமானது (ONU) அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2015 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், கௌரவ பிரதமர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 மே மாதம் 25 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் (ONUR) 2015.12.18 ஆந் திகதிய இல 1954/41 ஐக் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது.

தற்போது இவ்வலுவலகமானது நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

**2. தொலைநோக்கு**

அனைத்து பிரசைகளும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக சம அறந்தஸ்துடன் வாழ்வதை உறுதிப்படுத்துகின்றதும், பல்வகைமை மற்றும் தேசிய தனித்துவங்களுக்கு மதிப்பளிக்கின்றதும், அனைத்து மக்களும் இலங்கையர்களாக ஒற்றுமையுடனும், சகவாழ்வுடனும் சமாதானமாகத் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சக்திமிக்கதும் , ஸ்திரத்தன்மையுடன் கூடியதுமான தேசமொன்றினைக் கட்டி எழுப்பும் பொருட்டு ……

**3. பணிநோக்கு**

அடிப்படை உரிமைகள், சுதந்திரம்,சட்டத்தின் ஆதிக்கம், சமநிலை பல்வகைமை என்பவற்றிற்கு மதிப்பளித்து சாதி, இனம், மொழி, வயது, ஆண் பெண் வேறுபாடு, தாம் சார்ந்து நிற்கும் அரசியல் கொள்கைகள் என்பன பற்றிய எந்தவொரு நபருக்கும் பாகுபாடு காட்டாது அனைத்து பிரசைகளையும் அபிமானத்துடன் இந்நாட்டு மைந்தர்களாக மதிப்பளித்து , அங்கீகாரம் வழங்கும் சமூகமொன்றை மேம்படுத்துவதும் அதனை அடைந்து கொள்ளலும்……..

**4 குறிக்கோள்கள்**

பல்லின சமூகங்கள், அவை முகங்காடுக்க நேரிடுகின்ற நெருக்கடிகள், மற்றும் மோதல் நிலைமைகள் உருவாகக்கூடிய சூழ்நிலைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரைத்தலும், செயயற்படுத்தலும்.

சக புரிந்துணர்வுடனும், ஒற்றுமையாகவும், சகிப்புத் தன்மையுடன் கூடியதாகவும் சகல சமூகங்களிடையேயும் கட்டியெழுப்பப்படும் நல்லிணக்கம் உாயி நிகழ்ச்சித்

திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குத் தேவையான திட்டங்களைவ குத்தலும், பரிந்துரைத்தலும், அவற்றினை செயலுருப்படுத்தலும்.

### 5.5.2. வேலைத்திட்டங்களையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்

**1.செயற்திட்டத்தின் பெயர்: சமூக ஒருமைப்பாட்டிற்கான கல்வி**

**உத்தேச பெறுபேறு**: பொதுவான கல்வித்திட்டத்திக் மூலம் நல்லிணக்கம் மற்றும் சமூக கொள்கை

**செயலாற்றச் சுட்டி :**

(அ) நிறைவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை
(ஆ) பங்கேற்ற மாணவர்கள் தொகை

**பௌதிக மேம்பாடு: 2022 ஜனவரி 1 இலிருந்து செப்டம்பர் 30 வரை**

| வேலைத்திட்டம் /செயற்திட்டம் | செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | நிதி (தேசிய/ வெளிநாட்டு | செலவினம் ருபா.மில் |
|---|---|---|---|---|---|---|
| கல்வி | சிங்கள/ தமிழ் மொழிப் பாடநெறிகள் | 25 மாவட்டங்களும் | இளைஞர் யுவதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் | 73 பாடநெறிகள் | தேசிய | 11.68 |

**3. செயற்திட்டத்தின் பெயர்: முரண்பாட்டு மாற்றத்திற்கான செயற்திட்டம் (நம்பிக்கைக்கிடையேயான உரையாடல்)**

**உத்தேச பெறுபேறு:** முரண்பாட்டு மாற்றத்தின் ஊடாக தேசிய ஒற்றுமையினையும் நல்லிணக்கத்தினையும் மேம்படுத்துவதற்காக நம்பிக்கைகிடையேயான உரையாடல், இனங்களுக்கிடையே மற்றும் அறிவார்ந்த உரையாடல்களை மேம்படுத்தல்.

**செயலாற்றச் சுட்டி:**

(அ) நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை
(ஆ) பயிற்றுவிக்கப்ட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
(இ) பயிற்றுவிக்கப்ட்ட அலுவலர்களின் எண்ணிக்கை
(ஈ) நடத்தப்பட்ட கலாசாரங்களுக்கிடையேயான உரையாடல்களின் எண்ணிக்கை
(உ)கீழ் மட்டத்தில் நடத்தப்பட்ட பட்டறைகளின் எண்ணிக்கை

**பௌதிக மேம்பாடு: 2022 ஜனவரி 1இலிருந்து செப்டம்பர் 30 வரை**
வேலைத்திட்டம் : **முரண்பாட்டு பரிமாற்றம்**

| செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | நிதி ( தேசிய /வெளிநாட்டு) | செலவினம் ருபா. |
|---|---|---|---|---|---|
| நல்லிணக்கம் தொடர்பாக அலுவலர்களை பயிற்றுவித்தல் | அம்பாறை, இரத்தினபுரி, மாத்தறை, காலி, திருகோணமலை, புத்தளம் குருநாகலை, நுவரெலியா, யாழ்ப்பாணம், மன்னார் கிளிநொச்சி வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, | அரச அலுவலர்கள் | 14 | தேசிய | 143,750.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லிணக்கம் தொடர்பாக பிரசைகளை அறிவூட்டும் ஒருநாள் வேலைத் திட்டங்கள் | மாவட்டங்கள் | இளைஞர் யுவதிகள்,மதத் தலைவர்கள், அரச அலுவலர்கள், சிவில் சமூக தலைவர்கள், பெண்கள் | 390 | தேசிய | 8,850,000.00 |
| தேசிய ஒருமைப்பாட்டு அலுவலர் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் | யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலைஅனுராதபுரம், புத்தளம், மாத்தளை, கண்டி, கேகாலை, மொனராகலை, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை | தேசிய ஒருமைப்பாட்டு அலுவலர்கள், பிரசைகள் திருத்த அலுவலர்கள் | 07 | தேசிய / வெளிநாட்டு (USAID SCOR) | 346,767.00<br>6,397,460.00 |
| கிராமிய மட்டத்தில் முன்னறிவிப்புச் செய்யும் அமைப்பின உருவாக்கும் வேலைத் திட்டத்தில் இயங்கும் சகவாழ்வு சங்கங்கள் பிரசைகள் அமைப்புகள் தொடர்பான ஆராய்ச்சி | 25 மாவட்டங்களின் சுகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் | பிரசைகள் | | | |

4. **செயற்திட்டத்தின் பெயர்:** நல்லிணக்கத்திற்காக கலையும் கலாசாரமும்

**உத்தேச பெறுபேறு**: நடைபெறும் நல்லிணக்க செயற்பாடுகளின் கருவியாக கலை மற்றும் கலாசாரத்தினை உபயோகித்தல்.

**செயலாற்றச் சுட்டி:**

மேற்கொள்ளப்பட்ட ஆக்கங்களின் எண்ணிக்கை (திரைப்படம், நாடகங்கள், அரங்கக் கலைகள், ஓவியம், மற்றும் கலை தொடர்பான ஆக்கங்கள்)

**பௌதிக மேம்பாடு: 2022 ஜனவரி 1இலிருந்து செப்டம்பர் 30 வரை**

| செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | செலவினம் (ருபா.) தேசிய முதல் |
|---|---|---|---|---|
| சமயங்களுக்கிடையேயான மற்றும் கலாசாரங்களுக் கிடையேயான விழாக்களை சகவாழ்வுடன் கொண்டாடுதல் - தைப்பொங்கல் 2022 | சப்ரகமுவ, மேல், தென், ஊவா, வட மத்திய மாகாணங்கள் | பொது | 10 | 845,588.35 |
| சுதந்திர தின விழா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒருங்கிணைந்த நிகழ்ச்சி | நாடு முழுவதும் | பொது | 1 | 270,000.00 |
| Art for Peace செயற்திட்டம் | தென் மாகாணம் | பாடசாலை மாணவர்கள் | 1 | 75,100.00 |
| வடக்கு தெற்கு பரிமாற்ற செயற்திட்டம் | வடக்கு தெற்கு மாகாணங்கள் | பொது | 1 | 171,400.00 |
| சங்ஹிந்த கீ ரச செயற்திட்டம் | நாடு முழுவதும் | பொது | 1 | 1,320,000.00 |
| வசந்தய ஒபய் தொலைக்காட்சி நிகழ்ச்சி | நாடு முழுவதும் | பொது | 1 | 1,620,000.00 |

| செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | செலவினம் (ருபா.) தேசிய முதல் |
|---|---|---|---|---|
| வூனொலி நிகழ்சசிகள் | நாடு முழுவதும் | பொது | 1 | 540,000.00 |
| கண்டிய மற்றும் வன்னி கலாசார பரிமாற்ற வேலைத்திட்டம் | வட மத்திய மற்றும் வடக்கு மாகாணங்கள் | கலைஞர்கள் | 1 | 52,000.00 |
| தொரமண்டலாவ உரையாடல் நிகழ்ச்சி | நாடு முழுவதும் | பொது | 1 | 540,000.00 |
| மாவட்ட செயலகத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் கலை மற்றும் கலாசார செயற்திட்டங்கள் - 3 ஆம் காலாண்டு | அம்பாந்தோட்டை, மாத்தறை ,பதுளை.கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள் | பொது | 5 | 969,030.00 |
| கைவசமுள்ள பற்றுச்சீட்டுகளை செலுத்துதல். | | | 3 | 465,672.50 |
| | | | **26** | **6,868,790.85** |

## 5. செயற்திட்டத்தின் பெயர்: ஊடக மற்றும் தொடர்பாடல்

**உத்தேச பெறுபேறு:** பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கென உபயோகிக்கும் தொடர்பாடல் உத்திகளும் பொதுமக்கள் பங்களிப்பும்

**செயலாற்றச் சுட்டி:**

(அ) புரிந்துணர்வான உத்திகளுக்கான தொடர்பாடல் திட்டங்களை மேம்படுத்தல்.

(ஆ) இணையத்தள செயற்பாடுகளுக் கிடையேயான சமூக ஊடக தளம் ஒன்றினைத் தாபித்தல்.

(இ) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கு நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகளினதும் வேலைத்திட்டங்களினதும் எண்ணிக்கை

**பௌதிக மேம்பாடு: 2022 ஜனவரி 1இலிருந்து செப்டம்பர் 30 வரை** - ஊடகம் மற்றும் தொடர்பாடல்

| செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | செலவினம் தேசிய (ருபா) |
|---|---|---|---|---|
| நல்லிணக்கத்திற்கான செய்தியுடன் அறிவிப்புப் பலகைகளைப் பொருத்துதல். | கிளிநொச்சீ, ரம்பேவ, வவுனியா | நாடு முழுவதும் அடங்கலாக | 3 | 1,166,666.00 |
| ONUR நிறுவனத்தின் பொறுப்புக்களை விபரிக்கும் வகையில் இறுவட்டுகளைத் தயாரித்து அவ்விறுவட்டுகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் உப தலைப்புகளைப் பொறித்தல். | யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா முல்லைததீவு மன்னார் | | 1 | 9,900.00 |
| சா்வதேச தாய்மொழித் தினத்தையொட்டி விவரண நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரித்து ஒளிபரப்புச் செய்தல். | நாடு முழுவதும் அடங்கலாக | | 1 | 312,000.00 |
| சுதந்திர தினத்தினை கொண்டாடுவதற்கு ஓரங்க நாடகத்தினைத் தயாரித்தலும் அதற்கான ஒளிபரப்புச் செலவும். | நாடு முழுவதும் அடங்கலாக | | 1 | 650,000.00 |
| கண்காட்சி கூடங்களை தயாரித்தல் | யாழ்ப்பாணம் | | 1 | 489,000.00 |
| கண்காட்சி கூடங்களை தயாரித்தல் | கிளிநொச்சி | | 1 | 489,000.00 |
| தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக சிங்கள தமிழ் மொழிகளில் கையேடுகளை அச்சிடுதல். | நாடு முழுவதும் அடங்கலாக | | 1000 | 180,000.00 |
| | | | | **3,296,566.00** |

**5.செயற்திட்டத்தின் பெயர்: பொருளாதாரத்தை நோக்கிய செயற்திட்டங்கள்**

**உத்தேச பெறுபேறுகள்:**

(அ) வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களில் குறைந்த வசதிகளின் கீழ் மற்றும் சிக்கல்களுக்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் கொண்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தினையும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் மூலம் அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் நிலையான சமாதானத்தினைக் கட்டியெழுப்பல்.

**செயலாற்றச் சுட்டி:**

(அ) செயற்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை
(ஆ) செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை
(இ) பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை

**பௌதிக மேம்பாடு: 2022 ஜனவரி 1இலிருந்து செப்டம்பர் 30 வரை**

| வேலைத்திட்டம் / செயற்திட்டம் | செயற்பாடுகள் | பிரதேசம் | இலக்கிற்கான குழு | தொகை | நிதியம் ( தேசிய / வெளிநாட்டு) | செலவினம் ருபா. |
|---|---|---|---|---|---|---|
| வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களில் பொருளாதாரத் திற்கு உட்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் | வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வாழும் சமூகமயப்படுத் தப்பட்ட இளைஞர் யுவதிகளின் சமூக பொருளாதார கணக்கெடுப்பு | முல்லைத்தீ வு மாவட்டம் | சமூக மயப்படுத்தப்பட் ட இளைஞர் யுவதிகள் | 2,500 | தேசிய | - |

**6.செயற்திட்டத்தின் பெயர்:** மழை நீர் சேகரிக்கும் திட்டம் (Rain Water Harvesting) வடக்குப் பிரதேசத்தில் காணப்படும் கடும் குடிநீர் பற்றாக்குறைக்கு இடைக்கால தீர்வொன்றாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை நீர் சேகரிப்பிற்கான 3000 அலகுகளை நிர்மாணிக்கவென இந்திய அரசினால் வழங்கப்பட்ட ருபா. 300 மில்லியன்கள் மூலம் இத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் முதற் கட்டமாக இதுவரையில் மழை நீர் சேகரிக்கும் 531 அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இதன் இரண்டாம் கட்டத்திற்கான அடிப்படைப் பணிகள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.5.3. ஏனைய செயற்பாடுகள். (2022 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 30 வரை)

- இவ்வலுவலகத்தினை தாபிப்பது தொடர்பிலான சட்ட வரைபினைத் தயாரித்தல்.
- நல்லிணக்கம் தொடர்பான கொள்கையினை மீள கருத்திற் கொள்ளல்.
- இவ்வலுவலகத்தின் தேசிய செயற்திட்ட யோசனை வரைபினைத் தயாரித்தல்.
- “Resolving Differences through Understanding : Sustainable Peace, Security and Reconciliation in Modern Society” களனிப் பல்கலைக்கழகத்தின் வரையறுக்கப்பட்ட பயிற்சிகளுக்காக இவ்வலுவலகத்தில் இணைப்புச் செய்யப்படடிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு திட்டங்கள் நடாத்தப்படுகிறது.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் வருடாந்த மீளாய்வு அறிக்கை (UN UPR)இற்குத் தேவையான தகவல்களை பெற்றுக் கொடுத்தல்.

- வேளிநாட்டலுவல்கள் அமைச்சினால் தயயரிககப்படும் இலங்கை மனித உரிமைகள் அறிக்கைக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- மாதங்களுக்கிடையயான ஒருங்கிணைந்த கூட்டங்களுக்கு சமூகமளிப்பதும் தொடர்ச்சியாகத் தேவைப்படும்
- USAID, SCORE திட்டங்களுக்குத் தேவையான சிவில் சமூக ஒத்துழைப்பிற்கான திட்டமிடல் பாசறைகளை நடத்துதல்.
- பிரித்தானிய கவுன்சிலுடன் மொழி தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- யுனெஸ்கோ – தீவிரவாத செயற்பாடுகளைத் தடுக்கும் (PVE) தேசிய செயற்பாட்டு திட்ட அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.
- பிரசைகள் பங்களிப்பு செயற்திட்டங்கள் தொடர்பாக ஜப்பான் தூதரகத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

### 5.5.4. நிதிசார் மேம்பாடு ருபா. (மில்.)

| திட்டம் | நிதி ஒதுக்கீடு | செலவினம் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| சமூக ஒருமைப்பாட்டிற்கான கல்வி | 28.40 | 11.68 | 41% |
| முரண்பாட்டு மாற்றம் செய்வதற்கான செயற்திட்டம் | 59.27 | 13.86 | 23% |
| நல்லிணக்கத்திற்காக கலை மற்றும் கலாசாரம் | 15.5 | 6.86 | 44% |
| பொதுமக்கள் அறிவூட்டலும் தாக்கங்களும் | 9.50 | 3.40 | 36% |
| பொருளாதாரத்திற்கு உட்படுத்தும் செயற்திட்டங்கள் | 3.00 | - | - |

2022.01.01 – 2022.09.30 **வரையான நிதி ரீதியான முன்னேற்றம்**

| விபரம் | 2022 ஆம் வருடத் திற்கான மதிப்பீடு | 2022.09.30 ஆம் திகதிக்கு செலவு | விகிதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 29.52 | 18.33 | 62% |
| மூலதன செலவினம் | 132.00 | 35.80 | 27% |
| **மொத்தம்** | **161.52** | **54.13** | **33%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

# 5.6 காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

### 5.6.1. அறிமுகம்

2016 இலக்கம் 14 ஐக் கொண்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம், இலங்கை அரசினால் காணாமல் போதல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினதும், பொது மக்களினதும் உரிமையான உண்மைத் தகவல்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் பொறுப்புக்களை பாதுகாத்தல் போன்றவற்றுக்காக நிரந்தர அடிப்படையில் தாபிக்கப்பட்ட, இடை மாற்ற (Transitional) நீதிப் பொறிமுறையாகும். காணாமல் போனவர்களை தேடுதல் மற்றும் தேடுவதற்கான ஏற்பாடுகளை வகுக்கும் நோக்கில் தாபிக்கப்பட்டுள்ள இவ் அலுவலகம் அதன் இலக்கை அடைவதற்காக காணாமல் போன ஆட்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கும், அந்த விசாரணைகளுக்கு ஏற்ப செய்யப்படும் பரிந்துரைகளுக்கு அமைய, காணாமல் போன ஆட்களின் உறவினர்களுக்கு உதவிகளை வழங்கவும், காணாமல் போன ஆட்கள் தொடர்பான தரவுக் களஞ்சியம் ஒன்றை நிறுவுவதற்காகவும், பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்குரிய முறைமைகளையும், வழிகாட்டல்களையும் தயாரிப்பதற்காகவும், சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்துதல் மற்றும் தொடர்புபட்ட அல்லது அதனைச் சார்ந்த சகல விடயங்களுக்கும் ஏற்பாடுகள் வகுக்கப்படும். காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் எவரெனும் ஒருவர் காணாமல் போன கால எல்லையைக் கருத்தில் கொள்ளாது அது தொடர்பில் செயற்படும். அதற்கமைய சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் ஊடாக கடந்த காலங்களினுள் எடுக்கப்பட்டுள்ளன.

- காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் இலங்கை முழுவதும் இதுவரை அறிக்கையிடப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாகவும், தற்போது அறிக்கையிடப்படும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாகவும் செயற்பாடான முறையில் மேற்பார்வை செய்கின்றது. அத்துடன் காணாமல் போதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் மற்றும் அதற்கமைய அச்சம்பவங்கள் தொடர்பாக கண்காணித்தல் மற்றும் காணாமல் போகின்ற சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- காணாமல் போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு உரிய காணாமல் போனதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வாழும் பிரதேசங்களினுள் இவ் விசாரணை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடம் அவ்வாறான 1207 விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அத்தகு விசாரணை நடவடிக்கையினுள் அந்தக் குடும்பங்களின் தேவைகளுக்கு ஏற்ப பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த வருடத்தின் எஞ்சிய 03 மாத காலத்தினுள் 2000 வரையான விசாரணைகளை மேற் கொள்வதற்கும், 2023 ஆம் ஆண்டில் 5000 விசாரணைகளை மேற் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விசாரணை நடவடிக்கையினுள் உதவியைக் கண்டறிந்து கொள்ளும் நடைமுறையைத் தவிர பின்வருமாறு பரிந்துரைகளும் வழங்கப்படவுள்ளன.

  a) காணாமல் போனவர்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக குடும்ப புனர்வாழ்வு உதவியை வழங்க பரிந்துரை செய்தல்.
  b) காணாமல் போனவர்கள் தொடர்பில் காணக் கிடைக்காமைக்கான சான்றிதழ், மரண சான்றிதழ் வழங்குவதற்கு பரிந்துரை செய்தல்.
  c) காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளுக்கு அமைய கல்வி, தொழிற்கல்வி, சுகாதார வசதிகள், வீடமைப்பு வசதிகள் மற்றும் தொழில் வாய்ப்பு போன்றவற்றுக்குத் தேவையான வழிகாட்டல்களையும், உதவிகளையும் வழங்குதல்.

d) காணாமல் போனவர்களின் குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு உள சமூக நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.

- அத்துடன் காணாமல் போனமை தொடர்பிலான விசாரணைகளின் போது பாதிக்கப்பட்ட தரப்பினரும், சாட்சிகளும், சமூக செயற்பாட்டாளர்களும், ஊடகங்களை கையாள்பவர்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக மேற் கொள்ளுதல்.

- இவற்றுடன், காணாமல் போனவர்கள் தொடர்பிலான சட்ட ரீதியான செயற்பாட்டின் போது சுயாதீன தரப்பினராக அல்லது கண்காணிப்பாளராக நீதிமன்றத்தில் முன்நிற்றல்.

### 5.6.2. பிராந்திய அலுவலகங்கள் பற்றிய தகவல்கள்

காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு தமது சேவையை வழங்கும் செயற்பாட்டை இலகுவாக்குவதற்காக 05 பிராந்திய அலுவலகங்கள் தற்போது தாபிக்கப்பட்டுள்ளன. அந்த அலுவலகங்கள் பின்வரும் இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

1. யாழ் பிராந்திய அலுவலகம் - இல 123, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
2. கிளிநொச்சி பிராந்திய அலுவலகம் - கண்டி வீதி, கிளிநொச்சி.
3. மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் - இல 124, பிரதான வீதி, மட்டக்களப்பு.
4. மன்னார் பிராந்திய அலுவலகம் - இல 05, புகையிரத நிலைய வீதி, மன்னார்.
5. மாத்தறை பிராந்திய அலுவலகம் - இல 54, தர்மராம மாவத்தை, மாத்தறை கோட்டை, மாத்தறை.

### நிர்வாகக் கூட்டம் பற்றிய தகவல்கள்

2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியாகின்ற போது பதினெட்டு (18) தடவைகள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, காணாமற்போன ஆட்களைக் கண்டுபிடிக்கும் புலனாய்வுச் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதலுடன் தொடர்புடைய பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### முறைப்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் , வருடாந்த முன்னேற்றம்

| கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| 21,374 | கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 3,742 இராணுவ நடவடிக்கையின்போது நடைபெற்றுள்ளதோடு, 2,404 பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் OMP விடயப்பரப்புடன் தொடர்புடையதல்லாதவை என்பது தரவுப் பரிசீலினையின்போது அடையாளங்காணப்பட்டுள்ளது. இதன்படி, 14,988 பொதுமக்களுடன் தொடர்புடைய காணமற்போதல்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அந்த முறைப்பாடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு, தற்போது 1,207 முறைப்பாடுகளின் விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

| சம்பவங்கள் நடைபெற்றுள்ள காலம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்றுள்ள முறைப்பாடுகள் | 23 |
| 1981 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்றுள்ள முறைப்பாடுகள் | 5,255 |

| | |
|---|---|
| 1991 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்றுள்ள முறைப்பாடுகள் | 3,440 |
| 2001 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடைபெற்றுள்ள முறைப்பாடுகள் | 6,270 |
| **கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகள் (பொதுமக்கள் காணாமற்போதல்)** | **14,988** |

### 5.6.3. நிதிசார் முன்னேற்றங்கள் 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரை

| விபரம் | 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடு (ரூ.மில்.) | 2022.09.30 ஆம் திகதி உள்ளவாறு செலவு (ரூ.மில்.) | 2022.09.30 ஆம் திகதி உள்ளவாறு நிதியியல் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 75.00 | 48.11 | 64.15% |
| மூலதனச் செலவு | 0.02 | 0.02 | 79.00% |
| **மொத்தம்** | 75.02 | 48.13 | 64.00% |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 5.7 இழப்பீட்டுக்கான அலுவலகம்

### நோக்கு

பொருளாதார மற்றும் சமுக சுபீட்சத்தின் ஊடாக இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல்

### செயற்பணி

இழப்பீட்டு கொள்கையை அமுல்படுத்துவதனூடாக பாதிக்கப்பட்ட தரப்பினர்களை வலுவூட்டி சகல இலங்கையர்களினதும் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கான நல்லிணக்கத்தை மேம்படுத்தல

### 5.7.1 அறிமுகம்

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் முக்கிய நோக்காக அமைவது, ஆயுத மோதல்கள், அரசியல் குழப்பங்கள், உள்நாட்டு கலவரங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் ஆகியவற்றினால் இன்னலுக்குள்ளான நபர்களின் வாழ்க்கையினை மீளக் கட்டியெழுப்பவதற்கும் மீட்டெடுப்பதற்குமான நிவாரணங்களை வழங்குவதாகும்.

மேற்படி சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஆகஸ்ட் 2021 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டுக் கொள்கைகளில் பின்வரும் எட்டு (08) முக்கிய தலையீடுகள் உள்ளடங்குகின்றன

(i) வாழ்வாதார உதவி
(ii) நட்டஈடு மற்றும் நிதிசார் உதவி
(iii) நில உரிமைகளை மீளப் பெறுதல்

(iv) வீட்டுவசதி வழங்குதல்
(v) சமூக உள்கட்டமைப்பு அபிவிருத்தி
(vi) நிர்வாகம் சார்ந்த உதவி
(vii) உள சமூக ஆதரவு
(viii)ஒற்றுமை, நல்லிணக்கம், வன்முறைகள் மீள நிகழாமை என்பவற்றினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் அனைத்து முயற்சிகளும் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதுடன் அதன் நிகழ்ச்சித்திட்டங்கள் இழப்பீட்டுக் கொள்கைக்கமைய அடையாளம் காணப்பட்ட முக்கிய தலையீடுகளின் அடிப்படையிலேயே செயல்படுத்தப்படுகின்றன.

### 5.7.2 இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் செயல்பாடுகள் ஐந்து கருப்பொருட்பகுதிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்கை உருவாக்கம் மற்றும் செயல்படுத்தல்
(ஆ) இழப்பீடுகளைவழங்குதல்
(இ) நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்டபிறவழிமுறைகளுடன் இணக்கத்தைஉறுதிசெய்வதற்கான இணைப்புகளைநிறுவுதல்
(ஈ) தகவல் மேலாண்மை
(உ) கண்காணிப்புமற்றும் மதிப்பீடு.

### 5.7.3. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள்

**1. வாழ்வாதார உதவி-**

- தொழில்நுட்பம் மற்றும் அறிவுப் பரிமாற்றம் தொடர்பான ஐந்து (05) நிதழ்ச்சித் திட்டங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.
- இலக்குக் குழுக்கள்- குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள், சமூகத்துடன் மீளிணைக்கப்பட்ட பயிலுனர்கள் (ex-combatants), இடம்பெயர்ந்த சமூகத்தினர், கலவரங்களின் போது நேரடியாகப் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட எல்லைக் கிராமங்களில் வசிக்கும் மக்கள்.
- பயனாளிகளின் எண்ணிக்கை- 300 இற்கும் மேற்பட்டோர்.
- மேற்பார்வைக்குப் பின்னனரான திட்டமாக- யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக தொழிலினை ஆரம்பிப்பதற்காக ஐந்து (05) பெண் தொழில்முயற்சியாளர்களுக்கும் தொழில் உபகரண உதவிகள் வழங்கப்பட்டன.

**2. நட்டஈடு மற்றும் நிதி சார்ந்த ஆதரவு-**

2022 ஆம் ஆண்டில் மொத்தத் தொகை ரூபா. 759 மில்லியன் இழப்பீடு வழங்குவதற்காக் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் இறுதி வரை கொடுப்பனவு செய்யப்பட்ட நட்டஈட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை- 3088 (ரூபா.225.2 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது)

• செப்டம்பர் 30, 20220 அளவில் கொடுப்பனவுக்காக ஏற்கனவே செயலாக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு நட்டஈட்டினைச் செலுத்துவதற்காகத் தேவைப்படும் தொகை- ரூபா. 396 மில்லியன் (கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 2846)

• கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 6620 (நிலுவையில் உள்ள செயலாக்கத்திற்குட்படும் விண்ணப்பங்கள் -2020 மற்றும், செயலாக்கத்திற்குட்படுத்தப்பட்டு அவசியமான விண்ணப்பங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையில் உள்ள விண்ணப்பங்கள்- 4600)

**3. வீடமைப்பு வசதி-**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த சமூகத்தினரின் வீட்டுத் தேவைகளை இனங்காணும் பொருட்டு இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விசேட ஆய்வொன்றினை மேற்கொண்டது. திறந்த வெளி நலன்புரி முகாம்களில் வாழும் குடும்பங்களை மீள்குடியேற்றுவதில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து நிலையான மீள்குடியேற்றத் திட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

**4. நிர்வாகம் சார்ந்த ஆதரவு-**

இழப்பீடுகளுக்கான அலுவலகம் நீதி அமைச்சுடன் இணைந்து 2022 இல் நீதிக்கான அணுகல் என்கின்ற தலைப்பில் நடமாடும் சேவையொன்றினை நடாத்தியது அத்துடன் ஆவணங்கள் சார்ந்த சிக்கல்களை எதிர்கொண்ட 950 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆவணங்கள் சார்ந்த உதவிகள் வழங்கப்பட்டது. மேலதிகமாக, இந்தியாவில் இருந்து மீளவும் நாட்டிற்குத் திரும்பிய அகதிகளுக்கான ஆவண உதவிகளை வழங்குவதற்காக உள்ளூர் சிவில் சமூக அமைப்புடன் இணைந்து இழப்பீடுகளுக்கான அலுவலகமானது செயல்படுகிறது.

**5. உள சமூக ஆதரவு-**

- முன்னோடி நிகழ்ச்சித் திட்டமானது 2021 இல் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் 2022 இல் நிறைவு செய்யப்பட்டது.
- சம்பவ முகாமையாளர்களால் மட்டக்களப்பு, கிளிநொச்சி, அம்பாறை, குருநாகல், மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 131 சம்பவங்கள் கையாளப்பட்டன.
- தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.
- இந் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியினை மதிப்பிடுவதற்காகவும் திட்டத்தினைத் தொடர்வது குறித்து உறுதி செய்வதற்காகவும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வெளிவாரியான மதிப்பீடானது நடாத்தப்பட்டது.
- இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான ஒரு பயிற்சிக் கையேடானது மூன்று மொழிகளிலும் உருவாக்கப்பட்டது.
- 21 மாவட்டங்களைச் சேர்ந்த 50 சம்பவ முகாமையாளர்கள் (சிங்கள மொழி மூலம் – 24 மற்றும் தமிழ் மொழி மூலம் -26) இதுவரை பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

**6. காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கான விசேட கொடுப்பனவு-**

இவ்விடயம் தொடர்பாக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் கலந்துரையாடுவதறடகாக கௌரவ. அமைச்சருடன் இடம்பெற்ற கூட்டத்தில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சபை உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டு பின்வரும் மாற்றங்கள் முன்மொழியப்பட்டன-

• ரூபா. 100,000 முதல் ரூபா. 200,000 வரை வடக்கு மற்றும் கிழக்கு மோதலில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் தொகையைப் போன்று அதிகரிப்பது தொடர்பில் கருத்திற் கொள்ளுதல்.

• காணாமல் போனோர் தொடர்பான வழக்கை நிறுவுவது தொடர்கபில் காணாமல் போனோருக்கான அலுவலகம் ஆழ்ந்த விசாரணையை மேற்கொண்டு வருகின்றமையினால் (COA) சான்றிதழின் அவசியத்தினைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

மேற்படி முன்மொழிவுகள் இணக்கம் காணப்பட்டதுடன், இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தினையும் அமைச்சானது சமர்ப்பிக்கவுள்ளது.

### 5.7.3. நிதி சார் ஆதரவு

| தொ. இல | நட்டஈட்டுத் திட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தொகை ரூபா(மில்) |
|---|---|---|---|
| 1 | பயங்கரவாத வன்செயல்களினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களின் சொத்துக்களுக்கான நட்டஈடு | 2876 | 194.83 |
| 2 | பயங்கரவாத வன்செயல்களினால் பாதிப்பிற்குள்ளான அரச உத்தியோகத்தர்களின் சொத்துக்களுக்கான நட்டஈடு | 91 | 12.91 |
| 3 | கடும் பாதிப்பிற்குள்ளான நபர்களுக்கான நட்டஈடு (பயங்கரவாத வன்செயல்களால் காயமுற்ற பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான) | 10 | 0.38 |
| 4 | கடும் பாதிப்பிற்குள்ளான நபர்களுக்கான நட்டஈடு (பயங்கரவாத வன்செயல்களால் இறந்த பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான) | 36 | 4.5 |
| 5 | உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலினைத் தொடர்ந்து அதன் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கான நட்டஈடு | 1 | 0.32 |
| 6 | உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலினைத் தொடர்ந்து அதன் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்களினால் காயமுற்ற நபர்களுக்கான நட்டஈடு | 1 | 0.13 |
| 7 | பயங்கரவாத வன்செயல்களினால் பாதிப்பிற்குள்ளான வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான நட்டஈடு | 72 | 11.5 |
| 8 | கண்டியில் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்களினால் பாதிப்பிற்குள்ளான சொத்துக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு | 1 | 0.6 |
| | **மொத்தம்** | **3088** | **225.26** |

### 5.7.3.2. கடனுதவித் திட்டங்கள்

| கடனுதவித் திட்டங்களின் வகைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ) |
|---|---|---|
| சுயதொழிற் கடன் திட்டம் | 27 | 5,950,000 |
| சமூகத்துடன் மீளிணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான கடன் திட்டம் | 1 | 2, 50,000 |
| வீடமைப்புக் கடன் திட்டம் | 5 | 1, 150,000 |

### 5.7.4. நிதி முன்னேற்றம்

| விடயம் | 2022 ஆம்ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | 2022.09.30 அளவிலான செலவுகள் ரூபா.மில்லியன் | 2022.09.30 அளவிலான நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 863.6 | 295.167 | 34.18% |
| மூலதன செலவினம் | 2.00 | 0.00 | 0% |
| **மொத்தம்** | 865.60 | 295.17 | 34% |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

# 06 மீயுயர் நீதிமன்றங்கள்

## 6.1 உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 6.1.1 அறிமுகம்

இலங்கை நீதிமுறைமையில் அதியுயர்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் கௌரவ பிரதம நீதியரசர் உட்பட 17 உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா விண்ணப்பங்களையும் விசாரிக்கின்றனர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கம்
- இறுதி மேன்முறையிட்டு நியாயாதிக்கம்
- மதியுரை நியாயாதிக்கம்
- தேர்தல்கள் மனுக்கள் (சனாதிபதி தேர்தல்) பற்றிய நியாயாதிக்கம்
- எந்தவகையினதும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் பற்றிய நியாயாதிக்கம்
- பாராளுமன்ற சட்டத்தால் விதிக்கக்கூடிய பிற விடயங்கள் பற்றிய நியாயாதிக்கம்

உயர் நீதிமன்றம் அதன் செயல்பாடுகளை முன்னெடுக்க உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உதவுகிறது. இதற்கான நிதியை நீதி அமைச்சு செலவினத்தலைப்பு 234 இன் மூலம் வழங்குகிறது. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பணிகளாவன:

- உயர் நீதிமன்றப் பதிவுகளைப் பராமரித்தல்.
- அமர்வுகள் மற்றும் விண்ணப்ப அட்டவணைகளை ஒழுங்கு செய்தல்.
- நீதிமன்ற உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் பதிவு செய்தல்.
- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளை அனுமதித்தல்
- மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் வழக்கேடுகளைத் தயாரித்தலும் சட்ட செலவுகளை மதிப்பீடு செய்தலும்

### 6.1.2 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை

| வழக்குகளின் வகை | 2022.01.01 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2022.01.01 2022.09.30 இல் உள்ள புதிய வழக்குகள் | 2022.01.01 2022.09.30 வரை இல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 2022.01.01 - 2022.09.30 இல் இறுதித் தீர்மானம் கொள்ளப்பட்ட வழக்குகள் | 2022.09.30 இல் நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை தொடர்பான விண்ணப்பங்கள் | 1390 | 318 | 1,708 | 267 | 1441 |
| விசேட விண்ணப்பங்கள் | 600 | 276 | 876 | 152 | 724 |
| பாராளுமன்ற சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற கட்டளைகள் | 0 | 57 | 57 | 52 | 5 |
| மேன் முறையீட்டு வழக்குகள் | 1210 | 118 | 1328 | 71 | 1257 |
| வ.மே.நீ மேன்முறையீடு | 460 | 52 | 512 | 36 | 476 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்குகள | | | | | |
| மேல் நீதிமன்ற அனுமதிக்கான விண்ணப்பங்கள் | 190 | 103 | 293 | 59 | 234 |
| எழுத்தாணை விண்ணப்பங்கள் | 15 | 4 | 19 | 4 | 15 |
| மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் வழக்குகள் | 1108 | 265 | 1373 | 199 | 1174 |
| மீளாய்வு வழக்குகள் | 4 | 3 | 7 | 2 | 5 |
| அரசியல் யாப்பை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான வழக்குகள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| நானாவித/ விசேட வழக்குகள் | 15 | 3 | 18 | 2 | 16 |
| SC TAB APPEAL | 3 | 0 | 3 | 0 | 3 |
| RULE | 16 | 7 | 23 | 4 | 19 |
| SC /Contempt | 7 | 0 | 7 | 0 | 7 |
| சட்டத்தரணிகளை நீக்கும் வழக்குகள் | 2 | 3 | 5 | 0 | 5 |
| துரிதப்படுத்தல் வழக்குகள் | 1 | 0 | 1 | 0 | 1 |
| **மொத்தம்** | **5021** | **1209** | **6230** | **848** | **5382** |

### 6.1.3 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2022 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2022 ற்கான செலவு (ரூபா மில்) | 2022-09-30 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 180.09 | 132.12 | 73.36% |
| மூலதன செலவினம் | 0.81 | 0.12 | 14.44% |
| **மொத்தம்** | **180.90** | **132.24** | **73.10%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 6.2 மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்

### 6.2.1 அறிமுகம்

இலங்கை அரசியல் அமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முதன்நிலை நீதிமன்றங்கள், தொழில்நியாய சபைகள் மற்றும் பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் தீர்ப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைகள் பற்றிய நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியதாகும். 2002 ஆம் ஆண்டின் 25ம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டம் மற்றும் 2000ம் ஆண்டின் 39ம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின் கிழ் அச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு தேவையான கட்டளைகள் மற்றும் பணிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்குகிறது. தேர்தல் மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. எந்தவொரு முதன்நிலை நீதிமன்றத்தினதும் அல்லது தொழில்நியாய சபைகளினதும் அல்லது ஏதாவது பிற நியதிச்சட்ட நிறுவனங்களின் வழக்கு அறிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தத்துவமும் அதிகாரமும் உள்ளது.

### 6.2.2 2022.01.01 முதல் 2022.12.31 வரையிலான வழக்கு விசாரணைகளின் செயலாற்றுகை

| வழக்கு வகை | 2022/01/01 இல் நிலுவையிலுள்ளவை | 01.01.2022-30.09.2022 பதிவு செய்யப் பட்டவை | 30.09.2022 ல் உள்ளவாறான வழக்குகளின் எணிணிக்கை | 01.01.2022-30.09.2022 முடிவெடுக்கப்பட்டவை | 30.09.2022 இல் நிலுவையிலுள்ளவை |
|---|---|---|---|---|---|
| ஆணை விண்ணப்பங்கள் | 1362 | 358 | 1720 | 342 | 1378 |
| மேன் நீதிமன்றமுறையீடுகள் | 1047 | 128 | 1175 | 319 | 856 |
| (றெம்) | 5 | - | 5 | 4 | 1 |
| Extradition (EXT) | 1 | - | 1 | 1 | |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடுகள் | 883 | 142 | 1025 | 379 | 646 |
| குடியியல் மேன்முறையீடுகள் | 43 | - | 43 | 18 | 25 |
| மேல் நீதிமன்ற மீளாய்வு விண்ணப்பங்கள் | 222 | 115 | 337 | 152 | 185 |
| மீளாய்வு (குடியியல்) அனுமதி விண்ணப்பங்கள் | 15 | - | 15 | 10 | 05 |
| மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 32 | 6 | 38 | 09 | 29 |
| வரி மேன்முறையீட்டு அனுமதி TAX | 193 | 41 | 234 | 51 | 183 |
| **ஏனைய** | | | | | |
| மேன் நீதிமன்ற பிணை முறையீடுகள் விண்ணப்பங்கள் (BAA) | 0 | 7 | 7 | - | 7 |
| பிணை விண்ணப்பப்படிவங்கள் | 46 | 71 | 117 | 62 | 55 |
| வக்ப் நியாய சபை மேன்முறையீடுகள் | 5 | 1 | 6 | 3 | 3 |
| காணி மீளாய்வு சபை மேன்முறையீடு | 7 | - | 7 | 2 | 5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Restitution in Intergrum (RII) | 52 | 19 | 71 | 18 | 53 |
| நீதிமன்றத்தை அவமதித்தமைக்கான வழக்கு | 37 | 11 | 48 | 7 | 41 |
| வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்தை மாற்றுவதற்கான கோரிக்கை | 9 | 4 | 13 | 13 | - |
| ஹபயாஸ் கோபுஸ் | 2 | 3 | 5 | 2 | 3 |
| தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான வழக்குகள் | 7 | 9 | 16 | 1 | 15 |
| இன்ஜென்ஷன் உத்தரவுகளும் கோரிக்கைகளும் | 1 | 5 | 6 | 6 | - |
| நீதவான் நீதிமன்ற மறுசீரமைப்பு | 9 | 6 | 15 | 2 | 13 |
| பிற | 5 | 2 | 7 | 4 | 3 |
| Expulsion Cases (EXP) | 1 | - | 1 | 1 | - |
| **மொத்தம்** | 3984 | 928 | 4912 | 1406 | 3506 |

### 6.2.3. 2022.01.01 லிருந்து 2022.09.30 வரையுள்ள ஏனைய முன்னேற்றங்கள்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பான தரவுகள் முகாமைத்துவ அமைப்பை இற்றைப்படுத்துவதன் மூலம் அலுவலகர் குழுவைப் போலவே சட்டத்தரணிகளும் மிக வினைத்திறனான, பயனுள்ள சேவைகளை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. அதனூடாக வழக்கு அறிக்கையின் பௌதீக பரிசீலனைகள் இன்றி வழக்கின் எதிர்வரும் தினத்தை / முன் அழைத்தல் தினத்தை மற்றும் வழக்கு அறிக்கையின் செயற் குறிப்பை பரிசீலிக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தியோகப்பூர்வ இணையத் தளத்தின் ஊடாக வழக்கு அழைப்புத் தினம், நேரம், வழக்கின் நடவடிக்கை, இனி வரும் காலங்களில் அழைக்கப்படவுள்ள வழக்கு விபரங்கள் நிகழ் நிலை (online) வாயிலாக காண்பதற்குத் தேவையான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளதுடன், புதிய இணையத் தளத்தை உருவாக்கவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 6.2.4. வினைத்திறனான, பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அமுல்படுத்த எதிர்பார்க்கின்ற எதிர்காலத் திட்டங்கள்.

1. சீன அரசின் தலையீட்டால் தற்போதைய மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி புனரமைக்கப்பட உள்ளதால், சமீபத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற அலுவலகம் தற்காலிகமாக வேறொரு இடத்தில் (களுதொட கட்டிடம்) தாபிப்பதற்கு உத்தேசித்துள்ளதால் தற்போது அமைந்துள்ள கட்டிடத்தில் இருந்து புதிய கட்டிடத்துக்கு தரவுகள் முகாமைத்துவ அமைப்பின் இணைப்பை பேணிச் செல்ல Radio link இணைப்பைப் பெற்றுக் கொள்ளல்.

2. வழக்கு அறிக்கைகளின் தரவை, வழக்குத் தரவுகள் முகாமைத்துவ அமைப்பில் உட்சேர்க்கும் போது மிகவும் வசதியானதும், சரியானதும், வினைத்திறனானதுமான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பட்டைக் குறி வாசிப்பான்களை (Bar code Reader) நீதிமன்றத்தின் சகல பிரிவுகளுக்கும் வழங்குதல்.

3. தரவுகள் முகாமைத்துவ தொகுதிப் பிரவேசத்தை இலகுவாக்க அலுவலகக் குழுவின் சகல பிரிவுகளுக்கும் புதிய கணனி உதிரிப் பாகங்களை வழங்குதல்.

4. சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும் பணிகளுக்கும், வழக்கு அறிக்கைகளின் பிரதி தயாரிப்புக்களையும் தாமதமின்றி மேற்கொள்வதற்கு புதிய தொழிநுட்பத்துடன் கூடிய நிழற்பட பிரதி இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும், பழுது பார்க்கும் பணிகளுக்கும் அது சார்ந்த அறிவைக் கொண்ட தொழிநுட்ப அலுவலகரின் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல்.

5. மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் சிற்சில வழக்கு வகைகளை விசாரிப்பது தொடர்பான கொள்கைகள் வகுக்கப்படாமையால் பிற நீதிமன்றங்களின் கொள்கைகள் வகுக்கப்பட்டிருப்பினும் தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களத்தின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் மீதான அமைச்சரவை ஒப்புதலின் கீழ் வழக்கு அறிக்கைகளை அழிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நீதிமன்ற வளாகத்தின் இடவசதிகளை மீதப்படுத்திக் கொள்ள செயற்படுதல்.

6. காலத்தின் தேவைக்கு அமைய கடதாசிப் பாவனையை குறைப்பதற்கு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக வழக்கு தாக்கல் செய்வதன் மூலம் சூழல் நேயமுள்ள மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்கி நீதியை நிறைவேற்றும் பணியை துரிதமாக்க செயலாற்றுதல்.

### 6.2.4. 2022.01.01 தொடக்கம் 2022.09.30 வரையான நிதி ரீதியான முன்னேற்றம்

| விபரம் | 2022 ம் ஆண்டிற்கான ஒதுக்கம் (ரூபா மில்) | 30.09.2022 ற்கான செலவு (ரூபா மில்) | 30.09.2022 நிதி ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 112.76 | 79.58 | 70.58% |
| மூலதன செலவினம் | 1.22 | 0.08 | 6.64% |
| **மொத்தம்** | **113.98** | **79.66** | **69.89%** |

(இவ்வருடத்தினுள் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை திட்டமிட்டபடி இவ்வருடத்தினுள் நிறைவேற்றப்படும்)

## 07 தொடர்புடைய நிறுவனங்கள்

## 7.1 இலங்கைச் சட்டக்கல்லூரி

### 7.1.1 அறிமுகம்

சட்டக் கல்வியை முகாமைத்துவம் செய்யும் முகமாக, கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் சட்டம் 1900 இலக்கம் 02ன் பிரகாரம், இலங்கை சட்டக்கல்லூரி செயற்படுத்தப்படுகின்றது. கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையின் தலைமை பொறுப்பை மதிப்பிற்குறிய பிரதம நீதியரசர் வகிப்பதோடு, சட்ட மா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், மன்றாடியார் மற்றும் பிரதம நீதியரசரினால் முன்மொழியப்படும் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மதிப்பிற்குரிய நீதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஆறு உறுப்பினர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலிருந்து முன்மொழியப்படுகின்ற இருவர் அடங்கலாக பேரவை அமையப்பெறுகின்றது.

இலங்கை சட்டக் கல்லூரி 3½ வருட கால பாடத்திட்டத்தினை நடாத்துவதோடு, ஒவ்வொரு வருட ஏப்ரல் மாதத்திலும் முதன்மை நிலை, இடை நிலை, இறுதி நிலை மாணவர்களுக்கு பரீட்சைகளை நடாத்துகின்றது. இந்தப் பரீட்சைகளை நிறைவு செய்ததன் பின்னர் இவர்கள் வழக்கறிஞர்களாக மீயுயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பதற்கு முன்னர் குறைந்தது 08 வருட கால அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணி ஒருவரிடத்தில் 06 மாத காலம் பயிலுனராக சேவை செய்தல் வேண்டும்.

இலங்கை சட்டக் கல்லூரி ஒரு சுய வருமான தாபனமாக செயற்படுகின்றது. அதேபோல் வருகைதரு விரிவுரையாளர்களாக சட்டத்துறையில் பணிபுரிகின்ற மற்றும் கம்பனிகளில் தொழில் புரிபவர்கள் உள்வாங்கப்படுவர். அவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகவோ அல்லது தேர்ச்சிமிக்க வழக்கறிஞர்களாகவோ காணப்படுவர்.

### 7.1.2 01.01.2022 தொடக்கம் 30.09.2022 வரையிலான முன்னேற்றம்

2021 ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் பரீட்சைக்காக 1423 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் 841 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்டப் பட்டதாரிகள் 1239 பேர் பாடநெறிக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மாணவர்கள் 800 பேர் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை முடித்துள்ளனர்.